வெளியீடு 12-9-2001 Issued 12-9-2001

293/2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 30, 2001- தொகுதி 2 - எண் 2

Wednesday the 30th May, 2001 - Volume 2 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

[Price Rs. 3.00

D
V2'', 31' P01
P01.22
222388

## பிழைத் திருத்தம்

"பக்கம் *169*-க்குப் பிறகு, இடமாறி அச்சிடப்பட்டுவிட்ட *170*-ஆம் பக்கத்தையும், *171*-க்குப் பிறகு இடமாறி அச்சிடப்பட்டுவிட்ட *172*-ஆம் பக்கத்தையும், *183* ஆம் பக்கத்திற்குப் பிறகு இடமாறி அச்சிடப்பட்டுவிட்ட *184* ஆம் பக்கத்தையும், *185*-க்குப் பிறகு இடமாறி அச்சிடப்பட்டுவிட்ட பக்கம் *186*-ஐயும், பக்க எண்களைப் பின்பற்றி தொடர்ந்து படிக்கவும்."

53-325

30–05–2001

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. அறிவிப்புகள்—**

(அ) உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் கைது பற்றி காவல் துறை செய்தி 129

(ஆ) குழுக்களுக்குத் தேர்தல்—கால அட்டவணை 142

**2. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினரின் முன்னறிவிப்பு 130

(ஆ) கைது செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாத்தல் 130, 134

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், காந்தி குப்பம் காலனியில் வயிற்றுப் போக்கால் மூன்று குழந்தைகள் இறப்பு 130, 134, 136-139

திரு. டி. மணி 136, 139

மாண்புமிகு திரு. செ. செம்மலை 136-139

**4. அரசினர் தீர்மானங்கள்—** 140-142

**குழுக்களுக்குத் தேர்தல்**

(அ) மதிப்பீட்டுக் குழு 140

(ஆ) பொதுக் கணக்குக் குழு 140-141



222388
D
V21l,3'P01
P01.22

பக்கங்கள்


**4. அரசினர் தீர்மானங்கள்**—தொடர்ச்சி

**குழுக்களுக்குத் தேர்தல்**—தொடர்ச்சி

(இ) பொது நிறுவனங்கள் குழு 141

(ஈ) உரிமைக் குழு 142

**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி 143 - 249

திரு. வி.கே. லட்சுமணன் 143 - 144

திரு. எச்.எம். ராஜு 144, 204 - 209

திரு. சி. ஞானசேகரன் 144 - 145

* திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி 145 - 150

திரு. எம். சுப்பையா பாண்டியன் 150 - 156

டாக்டர் ஆர். கோவிந்தசாமி 156 - 159

* திரு. ஏ.எஸ். கண்ணன் 160 - 166

* திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் 167 - 179

* திரு. கே.சி. கருணாகரன் 179 - 186

திரு. ப. இராஜரெத்தினம் 186 - 193

* திரு. கா. கந்தசாமி 194 - 197

திரு. தி. வேல்முருகன் 197 - 204

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார் 209 - 215




பக்கங்கள்


**5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்**—தொடர்ச்சி

* திருமதி எஸ். மகேஸ்வரி 215 - 223

திரு. மே.ப. காமராஜ் 223 - 226

திரு. கோவை தங்கம் 226 - 230

திரு. செ. வெங்கடாஜலம் 230 - 236

டாக்டர் தே. குமாரதாஸ் 236 - 244

திரு. வெ. ஏழுமலை 244 - 249

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 249


222388

V2(1,3) 80)

P01.2.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 16, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 மே 30, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்."

*துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன; ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புகின்றவர் பிறர்க்குத் துன்பம் செய்யார்.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. அறிவிப்புகள்

#### (அ) உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் கைது பற்றி காவல் துறை செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடமிருந்து 30-5-2001 ஆம் நாளிட்ட 1160/எஸ்.பி.1/2001, என்ற கடிதத்தில் இன்று காலை 9-00 மணியளவில் கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"I have the honour to inform you that Thiru B. Ranganathan, M.L.A., Purasawakkam Constituency, Tamil Maanila Congress Democratic Forum, was arrested today (30-5-2001) at 5-15 hours at his residence at No. 37, I Main Road, Jawahar Nagar, Chennai-82, in connection with a case in G-3 Kilpauk P.S. Crime No. 822/2001, u/s. 147, 148, 452, 341, 387, 307 & 506 IPC. Thiru B. Ranganathan was produced before the XIV Metropolitan Magistrate, Egmore and remanded to judicial custody for 15 days."

[2001 மே 30

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினரின் முன்னறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுகிற நிகழ்வுகளில், .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாம் குறித்து கவன ஈர்ப்பு என்ற வகையில் வந்திருக்கின்றன; எல்லாம் ஆய்வில் இருக்கின்றன. பின்னர், எடுத்துக்கொள்வதைப்பற்றி முடிவு செய்யலாம்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், காந்தி குப்பம் காலனியில் வயிற்றுப்போக்கால் மூன்று குழந்தைகள் இறப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது சிறப்புக் கவன ஈர்ப்பு. விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகேயுள்ள கிராமத்தில் வயிற்றுப்போக்கால் மூன்று குழந்தைகள் இறந்தது குறித்து திரு. டி. மணி, திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு தந்திருக்கிறார்கள். திரு. டி. மணி அவர்கள் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல் — தொடர்ச்சி

### (ஆ) கைது செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாத்தல்

*** பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு, இந்த அவை உரிமை அடிப்படையில் ஒரு வேண்டுகோளைத் தங்களுக்கு வைக்க நான் விரும்புகிறேன்.

இந்த அவையினுடைய உரிமை என்பது, தங்களால் பாதுகாக்கப்பட வேண்டிய அவை உறுப்பினர்களுடைய உரிமையும் சேர்த்துத்தான் என்பதைத் தாங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இந்த



அவையினுடைய உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பரிதி இளம்வழுதி அவர்கள் இந்த அவையில் இன்னும் உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு காவல் துறையைச் சார்ந்தவர்கள் முதலில் ஒரு வழக்கிலே அவரைக் கைது செய்து, அந்த வழக்கிலே கைது செய்த அடிப்படையில், அவர் நீதிமன்றத்திலே ஜாமீன் பெற்று, அந்த ஜாமீன் பற்றி மேல் முறையீடு செய்வது குறித்து சரியான முறையிலே அவருக்குத் தெரிவிக்காமலே செய்து, அந்த மேல்முறையீட்டில் சில தவறான விவரங்களைக் காவல் துறை கொடுத்து, அந்தத் தவறான விவரங்கள் கொடுக்கப்பட்டது உயர் நீதிமன்றத்திற்குத் தெரியாத நிலையில் நான்கு நாட்கள் அவர் தொடர்ந்து remand-லே வைக்கப்பட்டு, மறுபடியும் அது விசாரணைக்கு வருகிறபோது, பரிதி இளம்வழுதியின் வழக்கறிஞர்கள் அந்த உண்மைகளை உயர் நீதிமன்றத்திலே எடுத்துச் சொன்னபோது, அவர் விடுதலை செய்யப்படுகிறார்; முன்னர் பெற்ற ஜாமீனில் விடுதலை செய்யப்படுகிறார். ஏற்கெனவே உள்ள தடை நீக்கப்படுகிறது. அந்த நிலையில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அவரை போலீஸ் custody-யிலே வைத்திருப்பதாகச் சொல்லி, அவரை வளைத்து, அவருக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அந்தப் பாதுகாப்பை அவர் நுகரமுடியாதபடி அவரை நெருக்கியும், தள்ளியும், அடித்தும், அடித்தார்கள் என்று சொன்னால், அவர்மீது காவல் துறை தள்ளிய முறையினாலே விழுந்த அடி, அதனாலே கீழே விழுந்து மயக்கமுற்று, அதுவும் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, பாதுகாப்புக் கேட்கப்பட்டு, மறுபடியும் போலீஸ் custody-யிலே இருந்தாலும், இரண்டு வழக்கறிஞர்கள் உடனிருந்து இரவு எல்லாம் அவரைப் பாதுகாக்கலாம் என்ற அந்த நிலையில், ஒரு சட்டமன்ற உறுப்பினர் இந்த அவையிலே வந்து உறுதிமொழி எடுத்துக்கொள்ள முடியாத நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார் என்பதை, நான் வெறும் அன்பழகன் என்ற முறையிலே அல்ல; ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அல்ல; இதுவரையில் ஜனநாயகத்தில் எதிர்க்கட்சி இல்லாத ஜனநாயகம் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால், எதிர்க்கட்சி உரிமைகளும் காப்பாற்றப்படுவதற்கு அடையாளமாக, எதிர்க்கட்சிக்கு ஒரு தலைவர் என்று சட்டமன்றத்திலேயே எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணத்தால், அந்த உரிமை மறுக்கப் பட்டிருப்பது, அவர்மீது வழக்குப் புனைவது, நீதிமன்றத்திலே வழக்காடுவது, தண்டனை பெற்றுத் தருவது என்பதெல்லாம் காவல் துறையினுடைய கடமை என்றாலும், அத்துமீறி, வரம்புமீறி—

[பேராசிரியர் க. அன்பழகன்] [2001 மே 30

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகிறபோது, காவல் துறை எடுத்த நடவடிக்கையைத்தான் நான் தெரிவித்திருக்கிறேன். எங்களுக்கு ஒன்றும் நோக்கம் இல்லை என்றார்கள். ஆனால்—காவல் துறை நடந்துகொள்கிற முறை, அரசுக்கே ஒரு நோக்கம் இருப்பதுபோல திட்டவட்டமாக ஒரு பழியை ஏற்படுத்தக்கூடிய காரியமாக இருக்கிறது என்பதையும், அது ஓர் உறுப்பினர் உரிமை என்ற காரணத்தினால் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

அதேபோல இன்னொரு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களைப் பற்றி இங்கே தாங்கள் காவல் துறை தந்த குறிப்பைப் படித்தீர்கள். நேற்று இந்த அவையிலே இருக்கிறபோது, அவருக்கு செய்தி கிடைத்து, அவர்மீது தொடுக்கப்பட்டிருக்கிற, தரப்பட்டிருக்கிற புகார் அடிப் படையில் அல்லது காவல் துறை கண்டறிந்த குற்ற அடிப்படையில், அவரைச் சேர்ந்த பலபேர் கைது செய்யப்பட்டு, அவரும் கைது செய்யப் பட இருக்கிறார் என்று சட்டமன்றத்திற்குச் செய்தி வந்து, அதன் காரணமாக உடனடியாகவே அவர் நீதிமன்றத்திலே நேற்று மாலையில் சென்று சரணடைந்து, சரண் காரணமாக அவர் bail-இல் விடப் பட்டிருக்கிறபோது, மறுபடியும் உடனே ஒரு புதுப் புகார் முளைத்து, அந்தப் புகார் அடிப்படையிலே இன்று காலையிலே 6-00 மணிக்கு அவர் கைது செய்யப்பட்டு இருக்கிறார். எனக்கு ரங்கநாதன் கைது செய்யப்பட்டது பற்றியோ, பரிதி இளம்வழுதி கைது செய்யப்பட்டது பற்றியோ தனிப்பட்ட முறையில் வருத்தமே கிடையாது. கைது ஆவதற்குத் தயாராக இருந்தால்தான் அரசியலில் இருந்து பணியாற்ற முடியும் என்பதை நான் அறிந்தவன். ஆனால், செய்த முறைகள் சட்டமன்ற உறுப்பினருடைய உரிமையைப் பயன்படுத்துவதற்கு, சட்ட மன்றத்திற்கு வருவதற்குத் தடையாக இருக்கிற காரணத்தால், இந்த முறைகளை, அவை உரிமையைப் பாதுகாக்கவேண்டிய தாங்கள், எப்படிப் பாதுகாக்கப் போகிறீர்கள் என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும், தவறு செய்தால்



2001 மே 30] [பேரவைத் தலைவர்]

தவறுதான்; காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவுக்கு ஒரு குற்றம் செய்தால், அது குற்றம்தான். அதற்குக் காவல் துறை நடவடிக்கை எடுக்கிறது. இந்த அவையைப் பொறுத்தவரையிலே, அவர்களுடைய உரிமைக்கு எந்தவிதமான ஆபத்தையும் இந்த அவை உண்டாக்கவில்லை; பேரவைத் தலைவர் உண்டாக்கவில்லை. ஆனால், காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை, காவல் துறையினுடைய குறிப்புகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வந்து, நேற்று முதலமைச்சர் அவர்களும் அதைப் படித்துக் காட்டினார்கள். இப்போது நடைபெற்றிருக்கிற சம்பவங்களைப்பற்றி காவல் துறையினுடைய குறிப்புகள் முதலமைச்சர் அவர்களுக்கு வருமானால், முதலமைச்சர் அவர்களும் அதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இதிலே அரசுக்கு உள்நோக்கம் இருப்பதைப் போல என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். போல இருப்பது எல்லாம் உண்மையல்ல; போல இருப்பது போலியே தவிர, அது உண்மையல்ல.

**பேராசிரியர் க. அன்பழகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அவை மரபு காரணமாக யாரையும் நான் குற்றம் சாட்டாமல் உண்மையை மட்டும் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் இதைக் கொண்டு வந்தேன். அவை உறுப்பினரே அவைக்கு வர முடியாமல் செய்கிற ஒரு நோக்கத்தோடு காவல் துறை செயல்படுவதை நான் கண்டித்து, திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக எங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்க, முறை மீறி காவல் துறை செயல்படுகிறது. அது தடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இந்த அவையிலேயிருந்து வெளிநடப்புச் செய்கிறோம், வணக்கம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).*

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வளாகத்திற்குள் சட்டமன்ற உறுப்பினர் தாக்கப்படும் அளவில் ஏற்பட்ட அராஜகத்தைக் கண்டித்து எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் வெளிநடப்புச் செய்கிறேன்.

*(உறுப்பினர் வெளிநடப்புச் செய்தார்).*

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு – தொடர்ச்சி

### விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், காந்தி குப்பம் காலனியில் வயிற்றுப்போக்கால் மூன்று குழந்தைகள் இறப்பு - தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: அடுத்து சிறப்புக் கவன ஈர்ப்பு. விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகில் உள்ள கிராமத்தில் வயிற்றுப்போக்கால் 3 குழந்தைகள் இறந்தது குறித்து. திரு. டி. மணி அவர்கள் சுருக்கமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். (குறுக்கீடு)

## 2. தகவல் கோரல் – தொடர்ச்சி

### (ஆ) கைது செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமையைப் பாதுகாத்தல்—தொடர்ச்சி

**திரு. கே.என். லட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, போலீசார் ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய கடமையை ஆற்றுவதற்குத் தடையாக இருந்ததைக் கண்டித்து, பாரதிய ஜனதா கட்சி சார்பில் இந்த அவைக்கு உரிய மரியாதையோடு வெளிநடப்புச் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மரியாதையோடு வெளிநடப்புச் செய்வதாகச் சொன்னதற்கு மிக்க நன்றி. திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களை இந்த அவையில் கூறிவிட்டு, என்னுடைய பதிலைக் கேட்பதற்கு இங்கே இல்லாமல் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள்.





இருப்பினும், சில விளக்கங்களை அளிக்க வேண்டியது எனது கடமையாகும்.

காவல் துறை தனது கடமையைச் செய்து கொண்டிருக்கிறது. காவல் துறை தனது கடமையைச் செய்யும்போது, காவல் துறைக்கோ அல்லது அரசுக்கோ உள்நோக்கம் இருப்பதாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சிலர் சில குற்றங்களைப் புரிகிறார்கள்; சில தவறுகளைச் செய்கிறார்கள். அதன் அடிப்படையில் புகார்கள் தரப்படுகின்றன. இந்த ஒவ்வொரு புகாரும் அரசின் கவனத்திற்கோ, முதலமைச்சரின் கவனத்திற்கோ கொண்டுவரப்படுவதில்லை. காவல் துறையினரே, அந்தப் புகார்களின்மீது நடவடிக்கை எடுத்து, கைது செய்த பிறகுதான், அந்த அறிக்கையை முதலமைச்சருக்கே தெரிவிக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் அறியாதவர்கள் அல்ல என்று நம்புகிறேன்.

'கடந்த ஐந்தாண்டுகளில் முந்தைய ஆட்சியில் ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்த சிலர், சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிகார மையங்களாகச் செயல்பட்டார்கள். அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலேயே கூறப்பட்டிருந்தது.

ஆளுநர் உரையிலும் பக்கம் 4-ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆளுநர் உரையில், 'சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற மக்களை அச்சுறுத்தியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்துள்ள, அரசமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்படாத சக்திகளின் எண்ணிக்கை, ஆட்சியில் இருந்தவர்களின் ஆதரவால் பெருகியுள்ளது. அத்தகைய சட்டவிரோத சக்திகளை இவ்வரசு இரும்புக் கரம் கொண்டு அடக்கும்' என்று ஆளுநர் உரையிலேயே கூறப்பட்டுள்ளது.

ஆகவே, அந்தக் கடமையைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது; காவல் துறையும் செய்து கொண்டிருக்கிறது. குற்றம் புரிபவர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). இதற்காகப் பதறுவதில் (மேசையைத் தட்டும் ஒலி), கூக்குரல் எழுப்புவதில் எந்த அர்த்தமும் இல்லை, அதனால் எந்தப் பயனும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[2001 மே 30

### 3. சிறப்புக் கவன ஈர்ப்பு – தொடர்ச்சி

### விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர், காந்தி குப்பம் காலனியில் வயிற்றுப்போக்கால் மூன்று குழந்தைகள் இறப்பு - தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. டி. மணி அவர்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக மிக மோசமான குடிதண்ணீரை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் உள்ள அந்த வாசகத்தை மட்டும் படித்தால் போதும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் கிராமத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, திருவள்ளூர் கிராமம் அல்ல, திருவெண்ணெய்நல்லூர் கிராமம், விழுப்புரம் மாவட்டம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் அருகேயுள்ள கிராமத்தில் வயிற்றுப்போக்கால் 3 குழந்தைகள் இறந்தது" குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் யூனியனுக்கு உட்பட்ட காந்திகுப்பம் காலனி பகுதியிலிருந்து 28-5-2001 அன்று இரவு 7-00 மணியளவில் வயிற்றுப்போக்கு காரணமாக முதலாவதாக 8 பேரும், பின்னிட்டு 5 பேரும், ஆக மொத்தம் 13 பேர், விழுப்புரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தவுடன், மாவட்ட ஆட்சித் தலைவர்



அவர்களும், பொதுச் சுகாதாரத் துறையைச் சேர்ந்த இணை இயக்குநர் அவர்களும், மேற்படி காந்திகுப்பம் காலனிக்கு அன்று இரவு 8-00 மணிக்குச் சென்று அங்குள்ள பொதுமக்களை விசாரித்தும், குடிதண்ணீர் ஆதார நீர் நிலைகளைப் பார்வையிட்டும், பிறகு மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்தும், தேவையான முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்த செய்தி கிடைத்தவுடனேயே, தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் என்கிற முறையில் எனக்கு உடனடியாகத் தகவல் கொடுத்து நடவடிக்கை எடுக்கப் பணித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், அவர்களது மேலான ஆலோசனைப்படியும், சுகாதாரத் துறை இணை இயக்குநர் அவர்களோடு நான் தொடர்புகொண்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கவும் முனைப்போடு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதுள்ள நிலைமைகள் குறித்த அறிக்கையை அனுப்பும்படியும் நான் கேட்டுக்கொண்டதன்பேரில், அறிக்கை ஒன்றையும் துறை இயக்குநர் மூலமாக அளித்திருக்கிறார்கள். அதன்படி விழுப்புரம் அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்தம் 25 பேர் என்றும், அவர்களில் ஒரு பெண் குழந்தைக்கு அதிக வயிற்றுப்போக்கு இருந்ததாலும், அந்தக் குழந்தைக்கு saline உடலில் ஏற்றுவதற்கு இரத்த நாளம் கிடைக்கவில்லை என்பதாலும், அந்த ஒரு குழந்தை மட்டும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு இருவேல்பட்டு ஆரம்ப சுகாதார நிலைய ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லப்பட்டு, அங்கு சேர்க்கப்பட்டு, சிகிச்சைக்குப்பின் வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டு, அந்தக் குழந்தை தற்போது நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறது. மற்ற 24 பேரும் விழுப்புரம் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களில் வீரன் என்பவருக்கு மட்டும் அதிக வயிற்றுப்போக்கு தொடர்கிறது. மீதமுள்ள 23 பேருக்கு வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல, இந்தக் கவன ஈர்ப்பிலே அவர் குறிப்பிட்டதைப்போல, அரசு மருத்துவமனையில் எந்த இறப்புச் சம்பவமும் ஏற்படவில்லை. இறந்ததாகச் சொல்லப்படுகிற அந்த 2 குழந்தைகளுக்கும் பாதிக்கப்பட்ட, வெளியிலே வைத்தியம் செய்திருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள்தான் இறந்திருக்கின்றன. அந்தக் குழந்தைகள் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரப்படவேயில்லை. இப்படிச் சிலருக்கு மட்டும் வயிற்றுப்போக்கு ஏற்பட,

அவர்கள் உண்ட உணவு சுகாதாரமற்றதா அல்லது அவர்கள் குடிக்கப் பயன்படுத்திய குடிநீர் தொற்றுநோய் பரவக்கூடிய தன்மையுடையதா என்பதைக் கண்டறிய, அதைக் குறித்து விசாரித்தபோது, அங்கு உபயோகத்தில் இருந்துவரும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வரும் பைப் லைனின் ஓரிடத்திலே கசிவு ஏற்பட்டு, அசுத்தம் கலந்தது தெரிய வந்து, தற்போது அதுவும் சரிப்படுத்தப்பட்டுவிட்டது.

*முற்பகல் 10-15*

கள்ளக்குறிச்சி துணை இயக்குநர், 3 மருத்துவக் குழுக்களோடு அந்தக் குப்பத்திலேயே தங்கி, அங்குள்ளவர்களுக்குத் தடுப்பு நடவடிக்கை மற்றும் தேவையான சிகிச்சையை அளித்து வருகிறார்கள். நீராதாரங்கள் அனைத்தும் Chlorination செய்யப்பட்டு வருகிறது. அப்பகுதிக் குடிநீரைப் பரிசோதனை செய்ய, கிண்டி ஆய்வுக் கூடத்திற்கு மாதிரி எடுத்து அனுப்பப்பட்டுள்ளது. காலராவிற்கான அறிகுறி எதுவும் இல்லை. அப்படி இருந்தால்கூட, அதற்கும் தடுப்பூசி, தடுப்பு மாத்திரைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலும், காலனி பகுதியில் குப்பை போன்ற அசுத்தங்கள் அகற்றப்பட்டு, சுற்றுப்புறம் தூய்மைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி 24 பேரைத் தவிர, வேறு யாரும் புதியதாக வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, அதன் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படவில்லை.

மாவட்ட ஆட்சித் தலைவரும், மருத்துவ இணை இயக்குநரும், மருத்துவமனைக்கும், காந்திகுப்பம் காலனிக்கும் சென்று, நிலைமையைக் கண்காணித்து வருகிறார்கள். இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையின்பேரில் இன்றுகூட மீண்டும் நான் இணை இயக்குநரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையைக் கேட்டறிந்தேன். பயப்படும்படி நிலைமை எதுவும் இல்லை. இறந்த அந்த 2 குழந்தைகள்கூட உரிய நேரத்தில் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தால், அந்த இறப்பினைக்கூடத் தடுத்திருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மேற்படி இறப்பும் அரசு மருத்துவமனையிலே ஏற்படவில்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடி நடவடிக்கை காரணமாக நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது.



நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அரசு இயந்திரம் எந்த அளவிற்கு வேகமாக முடுக்கி விடப்பட்டிருக்கிறது என்பதற்கும், மக்கள் பிரச்சினையில் எந்த அளவிற்கு முனைப்போடு அவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள், செயல்பட்டு வருகிறார்கள் என்பதற்கும் இது ஓர் எடுத்துக்காட்டு. உள்ளூர்ப் பத்திரிகைகளுக்குக்கூட செய்தி செல்வதற்கு முன்னாலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்குத் தகவல் கொடுத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவன ஈர்ப்பு அறிவிப்பிற்கு விளக்க உரையாக அளித்து அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கம் சொல்லிவிட்டார்கள். உறுப்பினர் திரு. டி. மணி, ஏதாவது கேட்க வேண்டுமா?

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. இருந்தாலும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைப்பதில் நம்முடைய மாநிலம் பூராவிலும் சமீபகாலமாகவே சீர்குலைந்த ஒரு நிலைமையை நாம் பார்க்கின்றோம். அதனுடைய பின்னணியில்தான், குடிதண்ணீரிலே ஏற்பட்ட கோளாறின் காரணமாகத்தான் இந்த நிலை உருவாகியிருக்கிறது. அந்த நிலைமையைப் போக்குவதற்காக இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி மாநிலம் பூராவிலும் போர்க்கால அடிப்படையில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு முனைப்பாகச் செயல்படுமா என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** தலைவர் அவர்களே, எங்களுடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்கு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு காரணமாகாது. எனவே, இனி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்ப்பதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு நிச்சயமாக வழங்கப்படும் என்கிற அந்த உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன் *(மேசையைத் தட்டும் ஒலி).*

*முற்பகல் 10—20*

## 4. அரசினர் தீர்மானங்கள்

### குழுக்களுக்குத் தேர்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 195-ன்கீழ், 2001-2002 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 203-ன்கீழ், 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

### (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 211-ன்கீழ், 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[2001 மே 30

## (ஈ) உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிமைக் குழுவிற்கு பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 227-ன்கீழ், 2001-2002 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 1. அறிவிப்புகள் -- தொடர்ச்சி

## (ஆ) குழுக்களுக்குத் தேர்தல்—கால அட்டவணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல். ஒற்றை வாக்கு முறைப்படி, தேர்தல் நடத்துவதற்கு, பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, உரிமைக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள், வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவை முதன்மைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை முதன்மைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்புத் தாள்கள் 2001 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வியாழக்கிழமை பிற்பகல் 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்



2001 மே 30] [பேரவைத் தலைவர்]

கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2001 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. ப. ரங்கநாதன், இருக்கையில் இல்லை. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. கோவை நகரில் 'அன்னை சந்தியா சிறுவர் உலகம்' நிறுவப்படுவது குறித்தும்;

2. கோவையில் ஓர் கோளரங்கு நிறுவுவது குறித்தும்;

3. அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்;

4. பாண்டியாறு-புன்னம்புழா மற்றும் அச்சன்கோவில்-பம்பா-வைப்பார் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது குறித்தும்;

5. தமிழ்நாட்டில் இயங்கிவரும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான ஒரு பல்கலைக்கழகச் சட்டத்தைக் கொண்டுவருவது குறித்தும்;

6. தமிழ்நாட்டில் மைய அரசின் உதவியுடன் ஒரு மாதிரி பல்கலைக்கழகத்தை உருவாக்குவது குறித்தும்;

7. சுயநிதிக் கல்லூரிகள் பெருமளவில் தொடங்கப்பட்டுள்ளதால், அவற்றிற்கென்று தனியாக 'தனியார் சுயநிதிக் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டம்' கொண்டு வருவது குறித்தும்;

8. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சீர்மிகு பள்ளி தொடங்குவது குறித்தும்;

[திரு. வி.கே. லட்சுமணன்] [2001 மே 30

9. கோவை நகரில் மையப் பகுதியில் உள்ள மத்திய சிறைச்சாலையைப் புறநகர்ப் பகுதிக்கு மாற்றுவது குறித்தும்;

10. தீபகற்ப நிலத்தடி வாயு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற மைய அரசை வற்புறுத்துவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. தென்கிழக்கு ஆசியாவிலேயே ஒரேயொரு போட்டோ ஃபிலிம் தொழிற்சாலையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் உதகை இந்துஸ்தான் போட்டோ ஃபிலிம் தொழிற்சாலையைச் சீரமைக்கும் பணி குறித்தும்;

2. நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 15 விலை நிர்ணயம் செய்யக் கோரி நடத்திய போராட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகிய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உரிய தீர்வு காண்பது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

*(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூர்-பொன்னையாற்று குடிநீர்த் திட்டம் உடனே நிறைவேற்றுவது குறித்தும்;

2. வேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுவது குறித்தும்;

3. வேலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க கூட்டுறவுத் துறை பழத் தொழிற்சாலை இடத்தை உடனே கையகப்படுத்துவது குறித்தும்;



2001 மே 30] [திரு. சி. ஞானசேகரன்]

4. வேலூரில் இந்த ஆண்டே அரசு மருத்துவக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரி, வேலூர் பல்கலைக்கழகம் ஆகியவற்றைத் தொடங்குவது குறித்தும்;

5. வேலூர் மாவட்டத்தில் அரியூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் திறப்பது குறித்தும்;

6. வேலூருக்கு காவிரி ஆற்றில் இருந்து (ஒகேனக்கல்) குடிநீர் கொண்டுவரும் திட்டம் குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

*(திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம். திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

*முற்பகல் 10-25*

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே ஒரு மூத்தவன். இருந்தாலும், இந்த அவைக்குப் புதியவன் என்ற காரணத்தினாலே என்னை இளையவனாகக் கருதிக்கொள்வதிலே உங்களுக்கு ஆட்சேபணை இருக்காது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வயது ஒன்றும் அதிகமாகத் தெரியவில்லை. *(சிரிப்பு)*.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** பூங்கா நகர் தொகுதியினுடைய உறுப்பினராக நான் இந்த அவையில் இடம் பெற வாய்ப்பளித்த என் நெஞ்சில் நிலைத்த மக்கள் தலைவர் திரு. மூப்பனார் அவர்களுக்கும், நான் வெற்றி பெற உதவிகள் செய்திட்ட இன்றைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேதகு ஆளுநர் இந்த அவையிலே ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்பிற்காகத் தங்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன். ஆளுநர் ஆற்றிய

உரைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது ஒருபுறம் இருந்தாலும்கூட, அவர் எடுத்த நடவடிக்கைகளுக்காகத் தமிழ்நாடே, தமிழ் மக்களே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

13 ஆம் தேதிதான் சட்டமன்றத் தேர்தலுடைய முடிவுகள் வெளியிடப்பட்டு முழுமையாகத் தெரிவிக்கப்பட்டன. 14 ஆம் தேதி மாலையிலேயே இன்றைய முதல்வர் பொறுப்பேற்றுக்கொள்கின்ற அளவுக்கு ஓர் ஆட்சி மாற்றத்தை ஓசையின்றிச் செய்திட்ட ஆளுநர் அவர்களுடைய செய்கை பாராட்டத்தக்கது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஒரு நாள் அவகாசம் கொடுத்திருந்தாலும்கூட என்னென்னவோ நடந்திருக்கும். அவையெல்லாம் நடக்காமல் இருக்கின்ற அளவிலே மிகச் சாதுரியத்தோடு ஆளுநர் அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் ஏடுகளிலே பதிவு செய்ய நான் விரும்புகின்றேன். இந்த ஆட்சி மாற்றத்தைச் சிலராலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக ஆளுநருடைய உரை ஏமாற்றம் அளிக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆளுநருடைய உரை ஏமாற்றம் அளிக்கவில்லை. இந்த ஆட்சி மாற்றத்தை அவர்களாலே ஏற்றுக்கொள்ள இயலவில்லை; அதுதான் காரணம் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த ஆட்சியிலே நடந்த குற்றம் குறைகளை எல்லாம் சரியாகக் கணித்துப் பார்த்து, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி ஒரு நல்லாட்சியாக அமைவதற்கு வேண்டிய அடித்தளங்களை அமைத்துக் கொடுக்கின்ற அளவிலே பல முக்கியமானத் திட்டங்கள் ஆளுநர் உரையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அத்தனை நல்ல விஷயங்களையும் ஒருசேர இந்த நேரத்திலே என்னால் பேசிட முடியாது; கால அவகாசம் அதற்குப் போதுமானதல்ல. ஆகவே, சென்னை மாநகரினுடைய பிரச்சினையாக இருப்பவை பற்றியும், குறிப்பாக என்னுடைய பூங்கா நகர் தொகுதியினுடைய பிரச்சினையையொட்டி இருக்கின்ற இரண்டு முக்கிய விஷயங்களைப் பொறுத்தமட்டிலே ஆளுநர் உரையிலே எந்த அளவுக்குக் குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் நான் இங்கே பேசிட விரும்புகின்றேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 54 ஆண்டுகள் ஆகிவிட்டன. சென்னை மாநகரம் இந்தியப் பெருநகரங்களிலே நான்காவது இடத்தைப்





பெற்றிருக்கிற நகரம். இந்த நகரத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினை இதுவரையிலே தீர்க்கப்படாமலேயே இருந்து வந்திருக்கிறது. இன்றைக்குக்கூட நிலவரம் சொல்ல வேண்டுமென்றால், பற்றாக்குறை, நகரின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிறது. கால மழை சரியாகப் பெய்யாவிட்டால் இன்னும் இரண்டொரு மாதங்களுக்கு அப்பால் என்ன நிலைமை என்பதை நம்மால் எடுத்துச் சொல்லமுடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலேயும் தாய்மார்கள் குடத்தோடு க்யூவில் நிற்கின்ற காட்சியைப் பார்க்கின்றபோது வேதனையாக இருக்கிறது. கிடைக்கின்ற தண்ணீர்கூட சுத்தமான தண்ணீராக இல்லை என்று பல இடங்களிலிருந்து புகார் வந்துகொண்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே பல இடங்களிலே குடிநீரோடு சாக்கடை நீர் கலந்து வருகிறது என்பதை ஆதாரத்தோடு என்னிடமே வந்து எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். சுதந்திரம் அடைந்து 54 வருடங்கள் ஆன பின்னாலும்கூட இந்த விஷயத்தைப்பற்றி இதுவரையிலே இருந்தவர்கள் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பது முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

முற்பகல் 10-30

இந்த நிலையிலேதான் இப்போது ஆளுநர் உரையிலே குடிநீர்ப் பிரச்சினைக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து மூன்று வழிகளிலே சென்னை நகரினுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதைப்பற்றி நான் எண்ணிப் பார்க்கின்றேன். இதிலே கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஆந்திர அரசாங்கம் வலியுறுத்தப்படும் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. வலியுறுத்தப்படும் என்று மேலெழுந்தவாரியாகச் சொல்லியிருப்பது சரியானதல்ல என்று நான் கருதுகிறேன். இன்றைய முதல்வர் அவர்கள் இதற்கு நேரடியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; ஆந்திர முதல்வரோடு தொடர்புகொண்டு பேசி இந்தத் திட்டத்தை விரைவிலே முடிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப்பற்றிப் பேசுகின்றபொழுது பழைய நினைவுகள் எனக்கு வருகின்றன. இங்கே திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் பழைய வீராணம் திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த நேரத்திலேயே கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை வலியுறுத்த வேண்டும், அமல் நடத்த வேண்டும் என்கின்ற

[திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி] [2001 மே 30

கோரிக்கை எங்களாலே மாநகராட்சியிலே எழுப்பப்பட்டது. இருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் பழைய வீராணம் திட்டத்தை அமல் நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, சிமெண்ட் குழாய்கள் ஆங்காங்கே செய்து, இப்போது அந்த சிமெண்ட் குழாய்கள் அத்தனையும் குடியிருப்புகளாக இருப்பதை நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். 'A monument of misdirected energy' என்று சொல்கிற அளவிலே அந்தத் திட்டம் உபயோகமற்ற ஒரு திட்டமாகப் போய்விட்டது. புதியதாக ஒரு வீராணம் திட்டத்தை இப்போது கொண்டுவர வேண்டுமென்று நினைக்கின்றபோது அந்தப் பழைய தவறுகள் இல்லாமல் நல்ல திட்டமாக அமைய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்வேன்.

அந்த ஒரு திட்டத்தோடு, கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தோடும் இரண்டு பெரிய ஏரிகளை உருவாக்குவதற்கு வேண்டிய முயற்சிகள்பற்றி இங்கே குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சென்னை நகரினுடைய குடிநீர்ப் பிரச்சினைக்காக கிருஷ்ணா திட்டம் ஒன்று, புதிய வீராணம் திட்டம் ஒன்று, புதிய இரண்டு ஏரிகளை உருவாக்கும் திட்டம் ஒன்று என்று மூன்று வழிவகைகள் காணப்பெற்றிருக்கின்றன. இதை நான் வரவேற்கின்றேன். முக்கிய பிரச்சினையாகக் கருதி இதை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேநேரத்திலே நான் ஒன்றை அன்போடு சொல்லிக்கொள்வேன். இந்தத் திட்டங்களை எல்லாம் சாதாரண நடைமுறையிலே நிறைவேற்ற வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டால் அதற்குப் பல்லாண்டு காலம் ஆகும் என்கிற அச்ச உணர்வு எனக்கு ஏற்படுகிற காரணத்தாலே முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த மூன்று திட்டங்களை மட்டுமே கவனிக்கின்ற அளவிற்கு ஒரு விசேஷ அதிகாரியை நியமனம் செய்து, அவருக்கு விசேஷ அதிகாரங்களையும் கொடுத்து, முதல்வர் அவர்களுடைய நேரடிப் பார்வையிலே வைத்துக்கொண்டால் இரண்டொரு வருடங்களிலே இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த அளவிலே முதல்வர் அவர்கள் இதில் சீரிய சிந்தனை செலுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்ததாக, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற விஷயத்திலே என் உள்ளத்தைக் கவர்ந்த ஒரு விஷயம் 'குடும்பத்துக்கு ஒரு வீடு' என்று சொல்லப்பட்டிருப்பதாகும். பாராட்டத்தக்க ஒரு முயற்சியாக இதை நான் கருதுகிறேன். அதேநேரத்திலே சில



2001 மே 30] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரம் ஓர் அழகான நகரத்தைப்போல ஒரு தோற்றத்தை அளித்தாலும்கூட, இந்தச் சென்னை நகரத்துக்குள்ளாக ஏறக்குறைய ஆயிரம் குடிசைப் பகுதிகள் இருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் குடிசைப் பகுதிகளை எல்லாம் நல்ல குடியிருப்புப் பகுதிகளாக மாற்ற வேண்டும் என்கிற முயற்சி குடிசை மாற்று வாரியத்தினாலே இதுவரையிலே எடுக்கப்பட்டு வந்தாலும்கூட, இன்னமும் ஆயிரம் குடிசைப் பகுதிகள் சென்னையிலே இருப்பதை நாம் இங்கே கவலையோடு எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதுவரையிலே 55,000 மாடிக் குடியிருப்பு வீடுகள் கட்டியிருப்பதாகத் தகவல் சொல்லப்படுகிறது. குடியிருப்பு கட்டியிருக்கிறார்களேயொழிய அதைப் பராமரிப்பதற்கான எந்த முயற்சியும் இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கத்தாலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்குக் கடந்த மூன்று ஆண்டுகளிலே ஒரு பைசாகூட நிதி நிலையிலே ஒதுக்கப்படவில்லை என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பணம் செலவு செய்வதற்கு இல்லை என்று சொல்கின்றார்கள். ஏழைகளுக்காகக் கட்டியிருக்கின்ற குடியிருப்பைப் பராமரிப்பதற்கு மானியம் கொடுப்பதைப்போல ஏன் கொடுக்கக்கூடாது என்கின்ற கேள்வியை இந்த அவையிலே நான் எழுப்ப விரும்புகிறேன். ஆகவே, ஏழைகளுடைய குடியிருப்புகளைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் கொஞ்சம்கூடத் தயங்கக்கூடாது. இந்த ஆண்டிலாகிலும், இந்தக் குடியிருப்புகளைப் பராமரிப்பதற்காகக் குறைந்தபட்சம் 5 கோடி ரூபாயாகிலும் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும் என்று முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

*முற்பகல் 10—35*

இந்த விஷயங்களை எல்லாம் நிறைவாகச் செய்ய வேண்டுமென்று சொன்னால் இங்கே அதிகார வர்க்கம் சரியான முறையிலே இருக்க வேண்டும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். அரசு இயந்திரம் பழுதுபடுமேயானால் எந்தத் திட்டத்தையும் சரியான முறையிலே நிறைவேற்ற முடியாது. "மாநில அரசின் உயர் அலுவலர்களும், காவல் துறையினரும் மன உறுதியும், ஊக்கமும் குன்றியிருப்பது இவ்வரசின் கவனத்திற்கு வந்துள்ளது." (மணியடிக்கப்பெற்றது) "இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி மற்றும் இம்மாநிலத்தின் பிற பணிகளைச் சார்ந்த பணியாளர்களின் மன

உறுதியையும், பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதிபூண்டுள்ளது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒரு நல்ல விஷயம். அதிகார வர்க்கம் செயல்படாத, மன உறுதி குறைந்த ஓர் இயந்திரமாக இருக்குமேயானால் எந்த நல்ல அரசும், எந்த நல்ல திட்டத்தையும் நிறைவேற்ற முடியாது. இந்த அரசு இயந்திரத்தைச் சரியான முறையில் இயக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை முதல்வர் அவர்கள் நியாயமாக எடுத்துக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அரசு அலுவலர்கள் சுதந்திரமாக, தர்ம ரீதியாகப் பணி செய்வதற்கு வேண்டிய சூழ்நிலைகள் உருவாக்கப்படுமேயானால் அது நாம் நினைக்கின்ற திட்டங்களைச் சரியாக நிறைவேற்றுவதற்கு உதவும் என்று முழுமையாக நான் நம்புகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தமட்டிலே ஏழைகளுக்கு நல்வாழ்வளிக்கின்ற ஓர் ஆட்சியாக அமைய வேண்டும், முதல்வர் அதைச் சரியாகச் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நல்வாழ்த்துக்களைச் சொல்லி, இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றியைச் சொல்லி அமைகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய தொண்டனாக இருந்த, ஒரு குக்கிராமத்திலே பிறந்த என்னை இந்த மாமன்றத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக அழைத்து வந்து இந்த மாமன்றத்திற்குள்ளே பேச வைத்த இதய தெய்வம், கழகத்தினுடைய காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, கடையநல்லூர் தொகுதியிலே எனக்கு வாக்களித்து, வெற்றி பெறச் செய்த கடையநல்லூர் வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும், முன்னாள் அமைச்சர்களும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப்பற்றி, இது தற்காலிக வெற்றி என்று கூறினார்கள். இது தற்காலிக வெற்றி அல்ல. ஒரு நெருப்பாற்றிலே நீந்தி, பல இக்கட்டுகளைக் கடந்து- எவ்வளவோ இடையூறுகளும் பல பொய் வழக்குகளும் தொடுத்து இப்போது இந்தச் சபைக்குள்ளே வராமலே இருக்கிறாரே முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதி அவர்கள், தனிப்பட்ட முறையிலே டாக்டர் புரட்சித் தலைவியை, இந்த இயக்கத்தினுடைய தலைவியை அழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று பல பொய் வழக்குகளைத் தொடுத்து எவ்வளவோ இடையூறுகளைச் செய்தார்கள்- சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கி இன்றைக்கு மக்களிடையே முழுச் செல்வாக்கையும் பெற்றிருக்கிறார்கள். 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்ற முறையில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைத் தமிழ்நாட்டு மக்கள் இப்போது வெற்றி பெறச் செய்து, முதலமைச்சராக்கி இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் இங்கே எதிர்க்கட்சியினுடைய தலைவர் அன்பழகன் அவர்கள் பேசியபோது, நாங்கள் அடுத்து வெற்றி பெற்று விடுவோம், நாங்கள் வெற்றி பெற்று வரத்தான் இருந்தோம் என்று கூறினார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இரண்டு குழந்தைகளில், ஒரு குழந்தை மாடு மேய்க்கிற குழந்தை; இன்னொன்று வயிற்றில் இருக்கின்ற குழந்தை. வயிற்றிலே இருக்கிற குழந்தையை நம்பி, மாடு மேய்க்கின்ற குழந்தையைக் கொன்றுவிட்டாளாம். ஆனால் வயிற்றிலே இருந்து வெளியிலே வந்த குழந்தை இறந்தே பிறந்ததாம். அதுபோலத்தான், இன்று மக்களால் அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை மக்கள் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு முதலமைச்சராக்கி இருக்கிறார்கள் என்று இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 10-40*

இங்கே நேற்றும், அதற்கு முன்தினமும் 69 சதவிகித இடஒதுக்கீட்டைப் பற்றிப் பலர் குரல் எழுப்பினார்கள். அவ்வாறு குரல் எழுப்புவதற்கு அவர்களுக்குக் கடமை உண்டு. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய ஆட்சி அதைப்பற்றிக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அதை நீங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்த முந்தைய ஆட்சியினர் இதுகுறித்து எந்தவிதமான கவனத்தையும் மத்தியில் ஆளுகின்ற அரசிடம் இவர்களுக்கும் செலுத்தவில்லை.

சம்பந்தம் இருக்கிறது. ஏனென்றால், அவர்கள் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் அங்கே இருக்கிறார்கள். இந்த 69 சதவிகித இடஒதுக்கீட்டை, அவர்கள் என்ன என்றே எடுத்துக்கொள்ளவில்லை. இப்போது பல உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கு இது உதவியாக இருக்கும்; எனவே, இந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று கூறுகிறார்கள்.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991-லேயிருந்து 1996 வரையில் ஆட்சி நடத்தியபோது, இதே பேரவையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அமெரிக்க நீக்ரோ மக்களின் அடிமை விலங்கை உடைத்தார் ஆபிரகாம் லிங்கன். அன்னைத் திருநாடாம் இந்தியத் தாய்நாட்டின் அடிமைத் தளையை அகற்றினார் அண்ணல் மகாத்மா. ஆப்பிரிக்க மக்களின் அடிமைத் தளையை அகற்றி உரிமை வாழ்வளித்தார் நெல்சன் மண்டேலா. திராவிட மக்களின் விழிகளைத் திறந்து வழிகாட்டி வைத்தார் வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார். சமூக நீதி என்னும் இலட்சியப் பயிரைக் கண்ணெனக் காத்து வந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இடஒதுக்கீட்டில் ஏற்றமிகு உயர்வளித்து புதுப்பாதை கண்டார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்தச் சான்றோர்களின் அத்தனை தத்துவங்களின் மொத்த உருவமாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 69 சதவிகித இட ஒதுக்கீடு குறித்து இந்தப் பேரவையில் ஒரு சட்டத்தையும் இயற்றி, அதை 9-வது அட்டவணையில் சேர்க்கச் செய்த, இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தச் செய்த, சமூக நீதி காத்த வீராங்கனை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைச் சிறையிலே வைத்து, வீட்டிலே இருந்து வந்த சாப்பாட்டைச் சாப்பிடக் கொடுத்தோம் என்று அபாண்டமான, உண்மைக்குப் புறம்பான கருத்தை இங்கே சொன்னார்கள். ஏன் இதைக் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். உள்ளே வைத்ததற்கு ஒரு காரணம் உண்டு. பல தி.மு.க. தொண்டர்களும், பல பொறுப்பில் இருந்தவர்களும் என்ன கூறினார்கள் தெரியுமா? ‘எங்கள் தலைவரை உள்ளே பிடித்து வைத்தால் ரத்த ஆறு ஓடும்’ என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதையும்



பொறுத்துக்கொண்டார்கள். ஆனால் மீண்டும் என்ன சொன்னார்கள் என்றால், ‘உனக்கு ஆண்மை இருந்தால் எங்கள் தலைவரைப் பிடித்து உள்ளே வை, பார்ப்போம்’ என்று சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 40 நாட்கள் உள்ளே வைத்தார் கருணாநிதியை. ஆனால் 40 தினங்கள் கழித்து கருணாநிதி என்ன சொன்னார் தெரியுமா? புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என் இனிய நண்பர் என்று சொன்னார். பிறகு, வீட்டில் இருந்து கட்டில் வந்தது, தலையணை வந்தது, மனைவியும், துணைவியாரும் வந்தார்கள். மான் கறி, முயல் கறி, காடை கறி, கவுதாரி கறி போன்றவை எல்லாம் வீட்டிலே இருந்து அவருக்கு வந்தன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எனக்கு நன்றாகத் தெரியும்.

இது எனது கன்னிப் பேச்சாக இருந்தாலும், இந்த இயக்கத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலேயிலிருந்து ஒன்றுபட்டு, அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அவர்கள் பின்னாலே நான் தொண்டனாகச் செயலாற்றி வருகிறேன். அப்படிச் சாப்பிட்டவர்கள், எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை முன்னாள் முதல்வர் என்று கூடப் பார்க்காமல், கூவம் நதியின் பக்கத்திலே, தனியாக ஓர் அறை அமைத்து, பெருச்சாளிகளும், நாட்டிலே உள்ள புழு, பூச்சிகளும் உள்ளே நடமாடுகின்ற அளவுக்கு உள்ள ஒரு அறையைத் தேர்ந்தெடுத்து, ஒரு சாதாரண கைதியைப் போல - ஒரு தட்டைக் கொடுத்த கருணாநிதி அவர்கள் - அந்தச் சிறைச்சாலையில் உள்ள சாதத்தை சாப்பிட வைத்தார்கள்.

கருணாநிதி அவர்களே, இந்தச் சபைக்கு நீர் ஏன் வரவில்லை? பொன்முடி நேற்று கூறினார், நேற்று முன்தினம் கூறினார். 16 வயது இளைஞனாகச் செயல்படுகிறார் என்று சொன்னார். உங்கள் முன்னாள் முதலமைச்சர், உங்கள் தலைவரிடம் போய், துணிவிருந்தால் இந்தச் சபைக்கு வரச் சொல்லுங்கள். 16 வயதாக இருந்தால் வரவேண்டியது தானே? மடியிலே கனம் இல்லை, வழியில் பயம் இல்லை என்பதைப்போல இந்தச் சபைக்கு வரவேண்டியதுதானே? ஏன் வரவில்லை? மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்துவிட்டு, அங்கே வீட்டுக்குள்ளே இருந்துகொண்டு பதில் அளித்துக்கொண்டிருக்கிறார் கருணாநிதி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி 1991-96-ல் பதவியேற்றவுடனே, இந்த நாட்டிலே விடுதலைப் புலிகளை ஆறே மாத காலத்தில் அடித்துத்

துரத்தினார். அந்தப் பெருமை புரட்சித் தலைவியைச் சேரும். மாண்புமிகு புரட்சித் தலைவிக்கு அந்தப் பெருமை உண்டு. கருணாநிதி ஆட்சி நடந்தபோது இங்கே தீவிரவாத சக்தியான வீரப்பனைக் காட்டிலே வைத்துக்கொண்டே பத்திரிகை நிருபரான நக்கீரன் கோபாலையும், பழ. நெடுமாறனையும் தூது அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நான் சொல்கிறேன். அந்தப் படை, அதிரடிப் படை, இந்தப் படை என்று எவ்வளவோ கோடியை செலவழித்தும் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. நான் கேட்கிறேன். இந்தப் பத்திரிகையாளரான நக்கீரன் கோபாலும் (மணியடிக்கப்பெற்றது) பழ. நெடுமாறனும், இரண்டு பேரும் காட்டுக்குள் போய் வருகிறார்களே, அவர்கள் இரண்டு பேரையும் ஐஸ் கட்டி மீது மூன்று மணிநேரம் படுக்க வையுங்கள். வீரப்பன் எங்கே இருக்கிறான் என்று சொல்ல முடியாதா? நான் தெரியாமல்தான் கேட்கிறேன். தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றிக்கொண்டு இங்கு ஒரு சர்வாதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது 1989-லே மார்ச் 25 ஆம் தேதி இந்தச் சபையிலே மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சேலையைப் பிடித்து இழுத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொகுதியைப் பற்றி ஒரு நிமிடம் பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. பேசுங்கள்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று பேசிய அன்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஹக்கீம் அவர்கள் நான் ஓர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவன், "மதுரை மத்தியிலே இந்து மக்கள் எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தார்கள்" என்று கூறினார்கள். மதுரை மேற்குத் தொகுதியிலே திருமதி வளர்மதி ஜெபராஜ் அவர்கள் ஒரு கிருத்துவ இனத்தைச் சேர்ந்தவர் வெற்றி பெற்றார் என்று சொன்னார்கள். அதேபோல கடையநல்லூர் தொகுதியிலே ஒரு இந்து மதத்தைச் சேர்ந்தவர் வெற்றி பெற்று வந்திருக்கிறார் என்று கூறினார். அதுதான் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி. அதேபோன்று கடையநல்லூர் தொகுதியிலே,



நான் ஒரு இந்துவாக இருந்தாலும், முஸ்லிம் மக்கள் அங்கே அதிகமாக இருக்கிற இடத்திலே எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். இதுதான் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றி என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். கடையநல்லூர் நகரத்திலே அதிகமாக இஸ்லாமிய சமுதாயத்து மக்கள் வாழந்துகொண்டு இருக்கின்ற காரணத்தால் முஸ்லிம் பெண்களுக்கு ஒரு கலைக் கல்லூரி அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவி அரசில் கட்டி முடித்த சிட்கோ தொழிற்சாலையில் தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்க நான் அன் போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தாலுகா ஏற்படுத்த வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிரவநல்லூர், இளத்தூர், பெரியபிள்ளைவலசை, கணக்குப்பிள்ளை வலசை, முத்துக்கல்வலசை ஆகிய பஞ்சாயத்துக்களில் குடிநீர் வசதி செய்து தர நான் அன்போடு இந்தக் கோரிக்கையை இங்கே வைக்கிறேன்.

ஆயக்குடி அரசு மருத்துவமனையில் பெண் டாக்டர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, உடனடியாக ஒரு பெண் டாக்டரை நியமனம் செய்ய பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் புரட்சித் தலைவி அரசில் பண்பொளி திருமலைக் குமாரசாமி திருக்கோயில் கும்பாபிஷேகம் மற்றும் திருப்பணிக்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) 1995-96-ல் ரூ. 33 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தார்கள். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அது குறைந்துவிட்டது. இதை மீண்டும் உயர்த்தி வழங்கி, கும்பாபிஷேகம் செய்ய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டுள்ளேன்.

இளத்தூருக்கும் அச்சன்புதூருக்கும் இடையே பாலம் கட்டுவதற்கு நான் இங்கே ஒரு கோரிக்கையை அன்போடு வைக்கிறேன். இடையால் முதல் கிளாங்காடு வரை உள்ள சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நேரம் அதிகமாகிவிட்டது.

முற்பகல் 10—50

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** ஒரு நிமிடம் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், சொக்கம்பட்டி, திரிகுடாபுரம் ஆகிய கிராமங்கள் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சேர்க்கப்படவில்லை. அவற்றை உடனடியாகச் சேர்க்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புண்ணியாபுரம் கிராமத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், சிமெண்ட் சாலைகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூர் தொகுதியில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தரும் வகையில், ஏதாவது தொழிற்சாலை ஒன்றைத் தொடங்க நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கடையநல்லூரில் சார்நிலைக் கருவூலம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி.

**டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழே அரியணையில் வீற்றிருப்பதைப் போல எண்ணி பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் உங்களுக்குப் பாராட்டையும், வணக்கத்தையும் தெரிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட டாக்டர் ஆர். கோவிந்தசாமி ஆகிய நான் என் பெற்றோர்களான அன்னை திருமதி சந்திராவர்ணம், எனது தந்தை திரு. கோ. ராமசாமி படையாட்சி ஆகியோருக்கு என் நன்றியையும், வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக, மக்கள் காவலர், மனிதநேயப் பற்றாளர், தமிழ் இனப் போராளி, தமிழன் வாழ்ந்தால் தட்டிக்கொடு, தமிழ் இனம் வீழ்ந்தால் முட்டுக்கொடு என்ற கொள்கையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்களையும், டாக்டர் சின்னய்யா அவர்களையும் வணங்குகிறேன்.





அடுத்து, கூட்டணிக் கட்சிகளின் தலைமைப் பொறுப்பையேற்றுக் கொண்டு இரவு பகல் பாராமல் தமிழகம் எங்கும் சுற்றி வந்து, மக்களை எல்லாம் ஒன்று திரட்டி, கொடுங்கோல் ஆட்சியை அகற்றி, நல்லாட்சியை ஏற்படுத்திய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்குகிறேன்.

விருத்தாசலம் தொகுதியிலே உள்ள மக்களையும், தொண்டர் களையும், அனைத்துக் கட்சிக் கூட்டணித் தலைவர்களையும் வணங்கி எனது கன்னிப் பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

நான் மருத்துவத் துறையில் 25 ஆண்டுகளாகப் பணி செய்து கொண்டிருக்கிறேன். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், பின்னர் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பணியாற்றி எம்.டி. பட்டம் பெற்று இப்போது விருத்தாசலத்திலே மருத்துவராகப் பணியாற்றி வருகிறேன். அந்த வகையில் நான் சொல்ல விரும்புவது, மருத்துவத் துறை மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில் எந்த அரசு மருத்துவமனையும் முறையாகச் செயல்படவில்லை. இது அனைவரும் அறிந்த ஒன்று. குறிப்பாக இரவு நேரங்களில் வருகிற நோயாளிகளைக் கவனிக்கக்கூட அரசு மருத்துவர்களும், தேவையான இயந்திரங்களும் இல்லாதது பெரும் குறை. பிரசவ வலியுடன் வரக்கூடிய பெண்களைக் கவனிப்பதற்குக்கூட மருத்துவர்கள் இல்லாதது வெட்கக்கேடான நிலை. அந்த நிலையை முந்தைய அரசு உண்டாக்கி இருக்கிறது. அதை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கண்டிப்பாகக் கவனித்து, தானும் ஒரு பெண்மணியாக இருப்பதால் அந்தக் குறையை நிவர்த்தி செய்வார்கள் என்று எண்ணுகிறோம்.

அதிலும் குறிப்பாக, சேலம் வரவேற்பு மாநாட்டில் இப்போது இருக்கக்கூடிய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. செம்மலை அவர்கள் பேசியபோது, மருத்துவத் துறைக்கு 350 கோடி ரூபாய்க்கு மேல் மருத்துவ சாதனங்கள் வாங்கப்படும், அரசு நிர்வாகம் சீர்திருத்தப்படும் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. செம்மலை அவர்களுடைய அந்த அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியும், டாக்டர் களாகிய நாங்களும், எங்களது இனமானக் காவலர் டாக்டர் ஐயா அவர்களும் பெரிதும் வரவேற்கிறோம்; அவரைப் பாராட்டுகிறோம். மாண்புமிகு அமைச்சர் திரு. செம்மலை அவர்கள் கண்டிப்பாக இதை நிறைவேற்றுவார்கள் என்று நாங்கள் உண்மையாக, உறுதியோடு எதிர்பார்க்கிறோம்.

[டாக்டர் ஆர். கோவிந்தசாமி] [2001 மே 30

விருத்தாசலம் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதியிலே ஏறக்குறைய 50, 60 கிலோ மீட்டர் அளவிலே பெண்கள் கல்லூரி ஒன்றும் கிடையாது. பெண்கள் பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு வேறு வேலைக்குச் சென்று விடுகிறார்கள். இந்த நிலையை ஒழிக்க விருத்தாசலத்திலே ஒரு பெண்கள் கல்லூரி அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கவனத்தில் கொண்டு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

விருத்தாசலத்திலிருந்து நான்கு திசைகளிலும், அதாவது விருத்தாசலம்-ஆண்டிமடம், விருத்தாசலம்-தொழுதூர், விருத்தாசலம்-திருச்சி, விருத்தாசலம்-வேப்பூர் ஆகிய பகுதிகளிலே பேருந்துகளும், வண்டிகளும், நிறைய வாகனங்களும் செல்வதால், போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது. எனவே, அங்கே கண்டிப்பாக ஒரு புறவழிச் சாலையை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலத்திலுள்ள பாலம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அவர்களுக்குப் பின்பு வந்த அரசுகள் எல்லாம் அப்போதைக்கப்போது பழுதுபார்க்கிறார்கள்; கொஞ்சம் சீர்படுத்தி, பிறகு பேசாமல் விட்டுவிடுகிறார்கள். இப்போது அந்தப் பாலம் மிகக் கேவலமான நிலையில் இருக்கிறது. மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் மக்கள் புகழ்வார்கள் என்று கருதுகிறேன்.

விருத்தாசலம் நகரிலேயுள்ள பீங்கான் தொழிற்சாலை, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலே புகழ்பெற்ற பீங்கான் தொழிற்சாலை. முந்தைய அரசின் கவனக் குறைவால் அது மூடிக் கிடக்கிறது. ஆட்சிக்கு வந்தவுடனே திறக்கிறேன் என்று சொல்லி தாம்தூம் என்று ஆடம்பரம் பண்ணினார்கள். ஆனால், ஒன்றும் பலனளிக்கவில்லை. இன்றைக்குக்கூட, பல குடும்பங்களில் பல தொழிலாளர்கள் கேட்பாரற்று அவல நிலையில் இருக்கிறார்கள். அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, பீங்கான் தொழிற்சாலையைத் திறப்பதற்கு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று குறிப்பிட்டிருப்பது நன்றாக இருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே ஏற்பட்டிருக்கிற நல்லாட்சியிலே இந்தச் செயல் வரவேற்கத்தக்கது. எங்கள் மக்கள் காவலர்



2001 மே 30] [டாக்டர் ஆர். கோவிந்தசாமி]

டாக்டர் ஐயா அவர்களும், எங்களது பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்களும் இதைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். ஆனால், ஒரு அவல நிலையைக் கவனிக்க வேண்டும். நெய்வேலி நிறுவனத்துக்கு ஏறக்குறைய 32,000 ஏக்கர் நிலத்தைக் கொடுத்துவிட்டு, நிலமும் இல்லாமல், வீடும் இல்லாமல், எந்த வேலை வெட்டியும் இல்லாமல் அங்கே மக்கள் துன்பப்படுகிறார்கள். அதை நாங்கள் கண்ணாலே கண்டு பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். டாக்டர் ஐயா அவர்களின் தலைமையிலும் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். வீட்டுக்கு ஒரு வேலை கேட்கிறோம். 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்று அம்மா சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிலம் கொடுத்தவர்களுக்கு வீட்டிற்கு ஒரு வேலை கேட்கிறோம். அதைக்கூட முந்தைய அரசு செய்யவில்லை; கண்டிப்பாக இந்த அரசு செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்; நம்பிக்கையுடன் நாங்களும், டாக்டர் ஐயா அவர்களும் இருக்கின்றோம்.

அடுத்து, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம். வரவேற்கத் தகுந்த திட்டம். டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட செம்மையான திட்டம், டாக்டர் புரட்சித் தலைவி தலைமையில் தொடர்கிறது. பல நேரங்களில் கிராமங்களிலே இருக்கிற விவசாயிகளுக்குப் பணம், மற்ற பொருளாதார வசதி இல்லாத காரணத்தால், நடவுக்குப் பயன்படுத்தும் விவசாயப் பொருட்கள் எல்லாம் வீணாகின்றன. ஆகவே, பூச்சிக்கொல்லி மருந்துகளை இனாமாக வழங்கு—நன்றாகக் கவனித்துக்கொள்ளுங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளை--அரசு நடவடிக்கை எடுத்தால், கண்டிப்பாக விவசாயிகள் உங்களை தெய்வமாகப் போற்றுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Last but not the least. இந்தச் செயல்களையெல்லாம் செயல்படுத்துவதற்கு விருத்தாசலத்தை ஒரு சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும். அங்கு விருத்தாசலேஸ்வரர் கோயில் இருக்கிறது. பக்கத்திலே மணவாளநல்லூர் என்ற கோயில் இருக்கிறது. நெய்வேலி நிறுவனம் இருக்கிறது. எனவே, விருத்தாசலத்தை சுற்றுலா மையமாக ஆக்கி, அதைவிட முக்கியமாக விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு மாவட்டத் தலைநகராக அறிவித்தால் மேற்கூறிய திட்டங்களை எல்லாம் சரியான, சுலபமான முறையிலே செயல்படுத்த முடியும் என்று கூறி, மக்கள் காவலர் டாக்டர் அய்யா அவர்கள் துணையுடனும், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்கள் துணையுடனும், டாக்டர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் செயல்பாடுகளை நிறைவேற்ற உதவ வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எஸ். கண்ணன்.

*முற்பகல் 11—00*

*** திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மக்கள் உணர்வுகளை எல்லாம் புரிந்துகொண்டு, மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்கு அணியை உருவாக்கியதன் காரணமாக மக்கள் மத்தியிலே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிற இன்றைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், பொன்னேரி தொகுதி கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டபோது, அதில் என்னை வேட்பாளராக நியமித்த கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அதனுடைய பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. நல்லக்கண்ணு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை பொன்னேரி தொகுதிக்கு வேட்பாளராக அறிவித்தபோது, சாதாரண கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன்தானே என்ற இறுமாப்பிலே, கையிலே அதிகாரத்தையும், மந்திரி பதவியையும் வைத்துக்கொண்டு, கழகத்தின் மிகப் பெரிய பொறுப்பை வைத்துக்கொண்டு, வெற்றி பெறுகின்ற அளவுக்கு கோடிக்கணக்கான பணத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, வெற்றி பெற்றுவிடலாம் என்று இறுமாந்திருந்து என்னை எதிர்த்த அந்த வேட்பாளரைத் தோற்கடித்து, எனக்கு ஆதரவாக இருந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அமைப்பைச் சார்ந்த தலைவர்களுடைய ஆதரவையும், இன்றைக்கு மக்கள் மத்தியிலே சொல்லப்படுகின்ற புரட்சித் தலைவி என்ற அந்த தாரக மந்திரத்தையும் ஏற்று, எனக்குப் பெருவாரியான அளவில், 27,390 வாக்குகள் அதிகமாக அளித்து வெற்றி பெறச் செய்த பொன்னேரி தொகுதி மக்களுக்கு நான் இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த, பணிவான நன்றியையும், வணக்கத்தையும் கூறிக்கொள்கிறேன்.

அன்பார்ந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு கவர்னர் உரையில் பேச வாய்ப்பளித்தமைக்காக மீண்டும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறைந்தபட்ச நாட்களில், பொறுப்பேற்று 0 நாட்களுக்குள், தமிழக மக்களுடைய தேவைகளை உணர்ந்து, சரியான, நல்ல திட்டங்களைத் தீட்டி, தேவையற்ற மலட்டுத் திட்டங்களை எல்லாம் நீக்கி, கவர்னர் உரையைக் கொடுத்திருக்கின்ற இன்றைய தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் சார்ந்திருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மீண்டும் எனது வணக்கத்தையும், நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே அவர்கள் குறிப்பிடும்போது, தமிழகம் இந்தியாவிலே ஒரு வளமான, சிறப்புமிக்க





மாநிலமாக மாற்றப்படும் என்ற கொள்கையை, திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய கட்சியின் சார்பாக மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்பார்ந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் பல்வேறு நல்ல திட்டங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயத்தைப் பற்றி, தொழில் துறையைப்பற்றி, மக்களுடைய நலன்களைப் பற்றி, அடிப்படை வசதிகளைப்பற்றியெல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்தை எடுத்துக்கொள்கிறபோது, இங்கே இருக்கின்ற விவசாயப் பல்கலைக்கழகங்கள் எல்லாம் மற்ற நாடுகளுக்கு இணையான பல்கலைக்கழகங்கள், எந்த வகையிலும் சோடை போகாத பல்கலைக்கழகங்கள் என்ற அளவில் தமிழகத்தில் இருந்து வருகின்றன. அப்படிப்பட்ட பல்கலைக்கழகங்கள் விவசாயத் துறைக்குத் தேவையான கண்டுபிடிப்புகளை எல்லாம் செய்தபோது, முந்தைய ஆட்சியில் அவற்றையெல்லாம் விவசாய மக்கள் மத்தியிலே கொண்டு செல்லாமல் அலட்சியப்படுத்தியதை 'இந்து' நாளேடு குறிப்பிட்டபோது, ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் அதற்காக அதிரடியாகப் பதில் தந்தார்கள். தயக்கம் காட்டினார்கள். ஆனால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயத்தைப் பற்றி, வேளாண்மையைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது நவீன வேளாண்மை முறையை விவசாயிகளிடம் கொண்டு செல்வோம் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக விவசாயிகள் சார்பாக நான் மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் என்னுடைய கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழகத்திற்கு வருவாயை ஈட்டித் தருகின்ற இரண்டு முக்கியத் துறைகளில் - sectors - ஒன்று விவசாயம்; மற்றொன்று தொழில் துறை. தொழில் துறை என்று பார்க்கின்றபோது, நான் இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன், நான் என்னுடைய கட்சியிலிருந்து பணியாற்றுகின்ற sector, தொழிலாளர் மற்றும் தொழில்முனைவோர் (entrepreneurs) sector. துறை தொழிலாளர் துறை. அப்படிப் பார்க்கின்றபோது, தொழிலாளர் துறை மட்டுமல்லாமல் இன்றைக்கு தொழில் முனைவோர் சார்பாகவும், நான் Dock சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகளில் தலைவராக இருந்துகொண்டு பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். துரதிருஷ்டவசமாக, கடந்த ஆட்சியாளர்கள் இங்கேயிருந்து வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். அவர்கள் இங்கே

இருந்தால் நலமாக இருக்கும். நேற்று இங்கே பேசிய உறுப்பினர் ஒருவர், கடந்த ஆட்சியில், கலைஞருடைய ஆட்சியில் தமிழகம் தொழில் துறையில் இரண்டாவது இடத்தில் இருந்தது என்று அவர் சொல்வதற்கு வந்தார். ஆனால் தடைப்பட்டது. நான் இந்த நேரத்திலே சொல்வேன், இரண்டாவது இடம் என்று எதை வைத்துச் சொன்னார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. நானும் தொழிலாளர் மத்தியில் 22 ஆண்டுகளும், தொழில் முனைவோர் மத்தியில் 12 ஆண்டுகளுமாக அந்தத் துறைக்காகப் பணிபுரிந்து கொண்டிருக்கிறேன். மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள் ஆண்ட நேரத்தில்தான் தொழில் துறையைச் சேர்ந்தவர்களை - நாங்கள் அவர்களைக் கேட்காமலேயே-எங்களை அழைத்து, உட்கார வைத்து தொழில் துறைக்கு, சிறு, குறு தொழில்களுக்கு என்ன தேவை என்று கேட்டார்கள். அப்படிக் கேட்ட ஒரே முதலமைச்சர் இன்றைக்கு இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி என்பதை நன்றியறிதலோடு இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—05

அதற்கு அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அன்றைக்கு இருந்த முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று பல நூற்றுக்கணக்கான முயற்சிகளை நாங்கள் செய்தபோது - நண்பர்களே, வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன் - இந்தத் தமிழகத்திற்கு ஒரு வளமான பொருளாதாரத்தை ஈட்டித் தருகின்ற ஒரு தொழில் துறை, இலட்சக்கணக்கான தொழிலாளிகளுக்கு வேலை தருகின்ற ஒரு தொழில் துறை, அந்தத் தொழில் துறையை மதிக்காத ஒரு முதல்வராக இங்கே வீற்றிருந்தார் என்பதை இந்த நேரத்திலே எங்கள் ஆதங்கத்தைச் சொல்கிறேன். இப்படிப்பட்ட ஒரு முதல்வரை நான் பார்த்ததே இல்லை என்று சொல்வேன். ஆனால், கித்தாப்புக்காகச் சொல்கிறார்கள், நாங்கள் இரண்டாவது இடத்தில் வந்துவிட்டோம் என்று. பணிவன்போடு கேட்டுக்கொள்வேன், இரண்டாவது இடம் என்று எதை வைத்துச் சொல்கிறார்கள் என்று. எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை; தெரிந்துகொள்ள முடியவில்லை.

இங்கே Tamilnadu Guidance Bureau என்று ஒன்று இருக்கிறது. அதிலே அந்நிய நாட்டு மூலதனங்கள், மற்ற மூலதனங்கள் வருவதைப்பற்றிக் குறிப்பிட்டு, பட்டியலிட்டு வைக்கிறார்கள். அப்படி வைக்கின்றபோது, எதை அமல்படுத்துகிறார்கள் என்பதைத்தான் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டுமேயொழிய, வருகின்ற அந்த மூலதனத்தை



வைத்து, ஏட்டிலே இருப்பதையெல்லாம் கணக்குப் போட்டு 13-வது இடத்திலே இருந்த தொழில் துறை இன்றைக்கு இரண்டாவது இடத்திலே வந்துவிட்டது என்று * உண்மைக்கு மாறான ஒரு தகவலைச் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முதல்வர் அவர்களும் இங்கே இல்லை, இருந்தாலும் நான் இங்கே பதிவேட்டிலே பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன், இன்றைக்கு கண்ணுக்குத் தெரிந்தாற்போல் தமிழகத்திலே சென்னை மாநகரம் automobile spare parts தயாரிக்கின்ற ஒரு மிகப் பெரிய நகரமாக உள்ளது. அதேபோல், கோவை, சிவகாசி போன்ற தமிழகத்தில் இருக்கின்ற தலைநகரங்களில் தொழில் துறையில் பிரசித்தி பெற்று விளங்குகின்ற உற்பத்தியாளர்கள் மட்டுமல்லாது, புதிய பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டிலே வந்தபோது, இந்த நாட்டில் இருக்கின்ற கம்யூனிஸ்ட்டுகள், முற்போக்காளர்கள் எல்லோரும் அந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைப் பார்த்து குறை சொன்னோம். இது வந்தால், இந்த நாட்டுக்கு ஆபத்து, இந்த நாட்டிலே இருக்கின்ற செல்வங்களை சுரண்டிச் செல்வதற்கு வருகின்ற அந்நிய நாட்டு ஏகபோக முதலாளிகளுடைய சூழ்ச்சி என்று சொன்னோம். அப்படிச் சொல்கின்றபோது, எங்களைப் பார்த்து கேலியும், கிண்டலும் பண்ணிய அரசியல்வாதிகள் இந்த நாட்டிலே உண்டு. ஆனால், அப்படியிருந்த காலத்தில் அதையெல்லாம் மீறி அந்த - W.T.O.-வை - புதிய பொருளாதாரக் கொள்கையை இந்த நாட்டிலே அமல்படுத்தக்கூடாது என்று இந்தியாவிலேயே ஒரு முதல்வர் சொன்னார். அவர் யார் என்றால் தமிழகத்திலே மக்கள் ஆதரவு பெற்ற புரட்சித் தலைவியாக, இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற, இந்த முதல் மரியாதைக்குரிய புரட்சித் தலைவி அவர்கள்தான். அவர்கள்தான் அந்த W.T.O.வை, புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து, அதனை அமல்படுத்தக்கூடாது என்று நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார் என்பதை இந்த நேரத்திலே நான் நன்றியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையால் இப்போது தமிழகத்தில் தொழில் நசிந்து அழிந்து கொண்டிருக்கிறது. தமிழகத்திலே 3 இலட்சம் சிறு குறு தொழில்கள் இன்றைக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பதிவு செய்யாததையும் சேர்த்தால் 6 இலட்சம் சிறு குறு தொழில்கள் இருக்கின்றன. அதிலே பணிபுரிபவர்கள் 36 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

அந்த 36 இலட்சம் பேர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 1-1/2 கோடி பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய sector-ஐ இன்றைக்கு முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தாங்கள் தயவுசெய்து,—இங்கே அழிந்து கொண்டிருக்கின்றன சிறு குறு தொழில்கள். ஏறக்குறைய 40 சதவிகிதம் அழிக்கப்பட்டுவிட்டன. அப்படிப்பட்ட சிறு குறு தொழில்களைப்—பாதுகாக்க வேண்டும். ஏற்கெனவே, மரியாதைக்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சியில் கொண்டு வந்த அரசு ஆணை 75 என்ற அந்த ஆணையை இரத்து செய்திருக்கிறீர்கள். அவ்வாறு இரத்து செய்ததற்காக உங்களுக்கு இந்தத் தமிழகத்திலே இருக்கின்ற 6 இலட்சம் சிறு குறு தொழில்கள் சார்பாக நான் இந்த நேரத்திலே நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், வருகின்ற காலங்களில் நீங்கள் திருமுல்லைவாயிலில் தொழிற்பேட்டைகளை ஆரம்பிப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

அதுமட்டுமல்லாமல் பல்வேறு மாவட்டங்களில், தொழில் நிறைந்த மாவட்டங்களில், சிறு குறு தொழிற்கூடங்களை, தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அழிந்து கொண்டிருக்கின்ற சிறு குறு தொழில்களைப் பாதுகாப்பதற்காக ஒரு Committee-யை அமைத்து குறைந்தபட்ச நாட்களான 3 மாதத்திற்குள் அறிக்கையை வாங்கி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற காலங்களில் மிகப் பெரிய கம்பெனிகள் எல்லாம் இங்கே வரவிருக்கின்றன என்று சொல்கிறார்கள். உதாரணத்திற்கு ஹூண்டாய் வந்திருக்கிறது. அந்த ஹூண்டாயினால் என்ன இலாபம்? இன்றைக்கு G.O. 75-ஐ இரத்து செய்து இருப்பதன் நோக்கம் என்ன? மாநில அரசு பொதுத் துறை நிறுவனங்கள் வாங்குகின்ற உதிரி பாகங்களை சிறு குறு தொழில்களிடம் வாங்க வேண்டுமென்று நிபந்தனை. அதுமட்டுமல்ல. தனியார் துறைக்கும் இந்த நாட்டில் கோடானு கோடி பணத்தைச் சலுகையாகத் தருகிறார்கள். அப்படிப்பட்ட ஹூண்டாய் நிறுவனம் இப்போது 2 இலட்சம் மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்கிறது. அதனுடைய இலாபம் நமக்கு வரவில்லை; கிஞ்சித்தும் தமிழகத்திற்குக் கிடையாது. கொள்ளை அடித்துக்கொண்டு போகிறான் கொரியாக்காரன். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, குறைந்தபட்சம், வாங்குகின்ற உதிரி பாகங்களையாவது தமிழகத்திலே உற்பத்தி செய்கின்ற சிறு குறு நிறுவனங்களிடமிருந்து வாங்க ஆணையிட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்.





முற்பகல் 11—10

கடைசியாக - தயவுசெய்து ஒரு நிமிடம் தர வேண்டும் - என்னுடைய தொகுதி மக்களைப்பற்றி நான் பேச விழைகிறேன். அன்பார்ந்த துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அவர்களே, மிக எதிர்பார்ப்போடு இப்போது என்னை பொன்னேரி தொகுதி மக்கள் வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள். மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன். 27,390 வாக்குகள் அதிகம் அளித்திருக்கிறார்கள். ஒரு மந்திரியைத் தோற்கடித்திருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய அவலநிலை என்ன என்பது தெரிகிறது. இப்போது சுத்தமாக பொன்னேரி தொகுதி நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற மீனவச் சமுதாயத்தினர் இப்போது அல்லல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிழைப்பு எப்படியுள்ளது என்றால், இப்போது அவர்கள் அன்றாடம் கஞ்சிக்காகச் செத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கேவலமான நிலை இப்போது பொன்னேரி தொகுதியிலே இருந்துகொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் முந்தைய ஆட்சி என்பதை நான் திட்டவட்டமாகப் பல ஆதாரங்களோடு சொல்ல முடியும்.

வட சென்னையிலே இருக்கின்ற அனல் மின் நிலையத்தின் கொதிநீரை அந்த ஆற்றிலே கலப்பதால் ஏறக்குறைய அவர்களுடைய தொழில் அழிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு வருகின்ற, ஆண்டிற்கு 100 கோடி ரூபாய் வருமானம் தடைப்படுவதோடு அல்லாமல் அங்கே இருக்கின்ற மீனவச் சமுதாயத்தினர் இப்போது வருவாய் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு கேவலமான நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல. மறைந்த மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பழவேற்காட்டில் 30 மீனவக் குப்பங்களை இணைக்கின்ற ஒரு பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். துரதிருஷ்டவசமாக கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த ஆட்சியாளர்கள் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்குத் தடையாக இருந்தது மட்டுமல்லாமல், அந்த மக்களை ஏமாற்றுகின்ற வகையில், கடந்த பத்தாவது மாதத்தில் மீண்டும் ஒரு அடிக்கல்லை அங்கே நாட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வேன்; முதலில் 30 குப்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் மக்கள் உள்ள பகுதியை இணைக்கின்ற அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித் தர வேண்டும்.

50 ஆயிரம் மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதிக்கு முறையான சுகாதார வசதி கொண்ட ஒரு வைத்தியசாலைகூடக் கிடையாது.

[திரு. ஏ.எஸ். கண்ணன்] [2001 மே 30

அதேபோல லட்சுமிபுரம் அணைக்கட்டு உடைந்து 10 ஆண்டு காலம் ஆகியிருக்கிறது. அங்கே இருக்கின்ற 10 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் உள்ள விவசாயிகள் இப்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பணிவோடு இந்த நேரத்திலே முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன்; இன்னும் சொல்லப் போனால் என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்கள் என்பதால்தான் நான் தைரியமாகச் சொல்வேன்; மரியாதைக்குரிய அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் இங்கே இருக்கிறார். என்னைவிட பல அவல நிலைகளை நன்றாகப் பார்த்தவர். அவரை நான் பணிவோடு கேட்டுக்கொள்வேன்; தயவுசெய்து அந்தப் பகுதிக்குப் பாலம் மற்றும் அணைக்கட்டு அமைத்துத் தர வேண்டும்.

கடைசியாக ஒரு விஷயம். எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு நிலத்தை வழங்கியவர்களுக்கு முறையாக நஷ்ட ஈடு கிடைக்கவில்லை; தருகிறோம் என்று வாக்குறுதி தந்து, வேலைவாய்ப்பும் தரவில்லை. (மணியடிக்கப்பெற்றது) அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், 28 பெண்கள் உட்பட 968 பேர் மீதும் பொய்யான வழக்குகளைத் தொடர்ந்து 15 நாட்கள் வேலூர் சிறையிலே அடைத்து, வழக்குக்காக அவர்கள் போய்க்கொண்டிருக்கிற கேவலமான நிலை இருக்கிறது. அந்த வழக்குகளை இரத்து செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற தகவல் - கடந்த கால ஆட்சியிலே, அவர்களுடைய அடக்குமுறையின் காரணமாக அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது - நம்முடைய அன்னையினுடைய ஆட்சியில் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில்தான் நடந்தது என்பதைச் சொல்கிறேன். வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்.



2001 மே 30]

***திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் பதவியாக இருந்தாலும் சரி, சோதனைக் காலங்களில் இந்த மக்களுக்காகச் சிறைச்சாலையையும், நீதிமன்றத்தையும் நான் சந்திக்கத் தயார் என்று துணிவோடு, நீதிமன்றம் அல்ல, அந்த மக்கள் மன்றம் எனக்குத் தீர்ப்புச் சொல்லட்டும் என்று, இந்தத் தேர்தலில் தீர்ப்பு எழுதுங்கள் என்று சொல்லி துணிவோடு நின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மன்றம் தீர்ப்பு எழுதியது. தொலையட்டும் இந்தப் பொற்காலம், தொடரட்டும் புரட்சித் தலைவியின் வருங்காலம் என்று சிறப்பாக இந்தத் தீர்ப்பை எழுதி இப்போது மாபெரும் வெற்றியை, வரலாறு காணாத வெற்றியைப் பெற்று இங்கே வீற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பதவி சுகம் விரும்பாமல், சட்டமன்றத்திலோ, பாராளுமன்றத்திலோ என் கால்கள் படாது என்று கூறி, ஒடுக்கப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக, போராடுகின்ற போராளி, தமிழன் எங்கு பாதிக்கப்பட்டாலும் தமிழினத்திற்காகக் குரல் கொடுக்கின்ற எங்களுடைய தமிழ் இனப் போராளி டாக்டர் ஐயா அவர்களை வணங்கி, என்னை வெற்றி பெறச் செய்த ஆண்டிமடம் தொகுதி மக்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இட ஒதுக்கீடு கேட்டு நாங்கள் நடத்திய தொடர் சாலை மறியல் போராட்டத்தில் வீர மரணம் அடைந்து, 108 ஜாதிகளுக்கு இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த வீர வன்னியப் போராளிகளுக்கு எனது மஞ்சள் வணக்கத்தைச் சொல்லி, ஆளுநர் உரைக்கு வருகின்றேன்.

*முற்பகல் 11—15*

இந்த ஆளுநர் உரையில் உழவர் சந்தையைப் பற்றி நமது புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அது என்னவென்றால், உழவர் சந்தைகளில், செயல்படுகின்ற சந்தை செயல்படும், செயல்படாத உழவர் சந்தை மூடப்படும் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான் இங்கு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். உழவர் சந்தையைக் கொண்டு வந்ததன் நோக்கம் என்னவென்றால், விவசாயிகள் விவசாயப் பொருட்களை Commission Agent இல்லாமல் நேரடியாக விற்க வேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட திட்டம். ஆனால் இந்தத் திட்டம் சரியானபடி நிறைவேறவில்லை. அதோடு மட்டுமல்லாமல் இந்த உழவர் சந்தையின் மூலமாக அனைத்து விவசாயிகளுக்கும் பயன் கிடைக்கிறதா என்றால் இல்லை; பயன் தரவில்லை.

இன்றைக்கு காய்கறி விளைய வைக்கின்ற விவசாயிகள் பயனடைவதாகச் சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் காய்கறிகளை மட்டும் பயிரிடவில்லை. கரும்பு விவசாயம் செய்கிறார்கள். நெல் விவசாயம் செய்கிறார்கள். பருத்தி விவசாயம் போன்ற பல பொருட்களை விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்த உழவர் சந்தை மூலமாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை. அவர்களும் பயன்பெற வேண்டும் என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேண்டும். ஏனென்றால், கரும்பு விவசாயம் செய்கிறான் விவசாயி. கரும்புக்கு டன்னுக்கு இன்ன விலை என்று அவனால் சொல்ல முடியவில்லை. ஆனால் அந்தக் கரும்பிலிருந்து உற்பத்தியாகும் சர்க்கரைக்குக் கிலோ இன்ன விலை என்ற நிர்ணயம் இருக்கின்றது. பருத்தி விவசாயம் செய்கிறான் விவசாயி. அந்தப் பருத்தி ஒரு குவிண்டால் இன்ன விலை என்று அவனால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. ஆனால் அந்தப் பருத்தியிலிருந்து உற்பத்தியாகின்ற துணிக்கு மீட்டர் இன்ன விலை என்று நிர்ணயம் செய்யப்படுகின்றது. அதுபோல் கடலை. கடலையிலிருந்து உற்பத்தியாகின்ற கடலை எண்ணெய்; எள்ளிலிருந்து உற்பத்தியாகின்ற நல்லெண்ணெய் இவற்றிற்கு எல்லாம் விலை நிர்ணயம் இருக்கின்றது. ஆனால் விவசாயி உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் இல்லை. இந்த விலை நிர்ணயத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு புதிய திட்டத்தின் மூலமாகக் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், உழவர் சந்தையைத் திறந்ததினால் விவசாயிகள் அத்தனை பேரும் பயன் பெற்றார்கள் என்று சொல்ல முடியாது.

விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னார்கள் முன்னால் ஆண்டவர்கள். ஆனால் உண்மை நிலை என்னவென்றால், இன்றைக்கு விவசாயிகளுக்கு முதுகெலும்பே இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கிறதே தவிர, விவசாயிகளை நாட்டின் முதுகெலும்பாக அவர்கள் கவனிக்கவில்லை. அந்த நிலையை மாற்ற வேண்டும். அவர்கள் பெற்றிருக்கின்ற கடனை, வட்டி, அபராத வட்டியை வசூல் செய்யச் செல்கின்ற அரசு அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் வீட்டிலுள்ள குண்டான்கள், குவளைகள் மற்றும் கதவையும் பிடுங்குகிறார்கள். இதனால் அந்த விவசாயிகள் நடுத்தெருவில் நிற்கும் நிலை சென்ற ஆட்சியில் ஏற்பட்டது. அந்த நிலை எல்லாம் மாறி, அந்த அபராத வட்டி, வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





அதோடு மட்டுமல்லாமல் இப்போது முந்திரிக்கொட்டை வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகி இருக்கின்றது மாண்புமிகு மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களால். அதனால் இங்கு 80 கிலோ மூட்டை 3500 ரூபாய்க்கு விற்ற முந்திரிக்கொட்டை இன்றைக்கு 1500 ரூபாய்க்குத்தான் விற்கிறது. இதனால் முந்திரி விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகள் உண்மையிலே நலம் பெற வேண்டுமென்றால், உழவர் சந்தை மட்டும் போதாது. அதை விட்டுவிட்டு, தமிழக முதல்வர் அவர்கள் புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து விவசாயிகள் நலம் பெறுவதற்கான ஒரு திட்டத்தைப் போட வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக தமிழகக் காவல் துறை உலக அளவில் தலைசிறந்த காவல் துறைப் படையாக மாற்றம் செய்யப்படும் என்று பக்கம் 5-ல் 6-வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நாங்கள் பாராட்டுகிறோம். அதேநேரத்தில், காவல் துறையினருக்கு மூன்று மடங்கு சம்பள உயர்வைச் செய்ய வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அனைத்துப் பிரிவுகளையும்விட இரவு பகலாக வேலை செய்பவர்கள், உழைப்பவர்கள், தம் உயிரையும் பணயம் வைத்து வேலை செய்பவர்கள் காவல் துறையினர் என்பதனால் அவர்களுடைய சம்பளத்தை மூன்று மடங்காக உயர்த்த வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—20

அடுத்ததாக, பக்கம் 7, பத்தி 9-ல் குறிப்பிட்டுள்ளார்கள்; மழை நீரைத் தேக்குகின்ற திட்டத்தினை நமது தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இது யாரும் செய்யாத திட்டம். இதை நாங்கள் பாராட்டுகின்றோம். ஏனென்றால் இன்றைய நிலையில் 97.5 சதவீதம் உப்பு நீராக இருக்கிறது. 2.5 சதவீதம்தான் நன்னீராக இருக்கிறது. இந்த நிலையைப் பார்த்துவிட்டுத்தான் நன்னீர் வேண்டுமென்றால், மழை நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்று நமது தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தினை நாங்கள் பாராட்டுகிறோம்.

அதேநேரத்தில் இன்றைக்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாயிருக்கிறது. அதனால் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க

வேண்டுமென்றால், பொது மக்கள் உடனுக்குடன் செல்ல வேண்டுமென்றால் Jeep service, Mini Bus Service போன்றவற்றைத் தடையில்லாமல் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக கட்டாயக் கல்வி. 14 வயதுக்குட்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வி என்ற திட்டத்தினை நமது தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நாங்கள் பாராட்டுகிறோம். 6 வயதுக்கு மேற்பட்டு, 14 வயதுக்குட்பட்டுள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வியைத் தருகின்ற அதேநேரத்தில் தரமான கல்வியையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஏழைக்கு ஒரு கல்வி, நடுத்தர வர்க்கத்திற்கு ஒரு கல்வி, பணக்காரனுக்கு ஒரு கல்வி என்றிருக்கிறது. அந்த நிலையை மாற்றி அனைவருக்கும் தரமான கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று நமது தமிழக முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலும், தொழில் படிப்புக் கல்லூரிகளிலும் ஊரக மாணவர்களுக்குரிய இடஒதுக்கீடு 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல ஆதிதிராவிட மாணவிகளுக்குக் கொண்டு வரப் பட்டுள்ள கல்வித் திட்டங்களான சைக்கிள் உள்ளிட்ட அனைத்தும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் கிடைக்க நமது தமிழக முதலமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி, வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக 69 சதவிகித இடஒதுக்கீட்டைத் தந்து, அரசமைப்புச் சட்டத்தின் 9 ஆம் விவர அட்டவணையில் இடம் பெறச் செய்ததற்காகப் பாராட்டுவதுடன், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை 27 சதவிகிதத்திலிருந்து 50 சதவிகிதமாக உயர்த்துமாறு மத்திய அரசைக் கேட்ட நமது தமிழக அரசைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் இந்திய நாட்டின் ஜனத்தொகையில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று பார்த்தால் 52 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தரப்படுவது 27 சதவிகிதம்தான்.

கடந்த முறை இருந்த முதல்வர் அடிக்கடி சொல்வார், நான் மிக, மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் முதல்வன், எத்தனை மிக போட்டாலும் எனக்குத் தகும் என்று சொல்வார். ஆனால் அவர் செய்யாத இந்தக் காரியத்தை நமது தமிழக முதல்வர், புரட்சித் தலைவி





அவர்கள் செய்து, 50 சதவிகிதமாக உயர்த்த அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தக் கோருவோம் என்று சொன்னதற்கு நான் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் அதற்காக மத்திய அரசாங்கத்தைக் கண்டித்து எந்தவிதமான போராட்டத்தைச் செய்தாலும், எதைச் செய்தாலும், புரட்சித் தலைவி அவர்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய தொழில் துறை அமைச்சராக முரசொலி மாறன் வந்த பிறகு கடந்த ஆட்சியிலிருந்து அனைத்து அரசாங்கத் தொழிற்சாலைகளும் நஷ்டத்திலே ஓடுகின்றன. மூடப்படுகின்றன. அதனால் இந்த இடஒதுக்கீட்டினால் எந்தவிதமான பயனும் இருக்காது. எல்லாம் தனியார் மயமாக்கப்படுகின்றன. ஆதலால் தனியார் துறைகளிலும் இந்த இட ஒதுக்கீடு அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வேலைவாய்ப்பைத் தர வேண்டுமென்றும், அதற்கான திட்டத்தையும் நமது தமிழக முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமாயும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கச்சத் தீவை மீட்போம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கச்சத் தீவு மீட்புபற்றி டாக்டர் ஐயா அவர்கள் அடிக்கடி சொல்லி, போராட்டம் நடத்தி வந்திருக்கிறார்கள். கச்சத் தீவு மீட்புத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த திட்டம்;— எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்றெல்லாம் பலர் சொல்வார்கள்— புரட்சித் தலைவர் என்ன சொன்னார்கள் என்றால் பெயர்ப் பலகையில் மூன்றில் இரண்டு பங்கு தமிழில் இருக்க வேண்டும், ஒரு பங்கு ஆங்கிலத்தில் அல்லது வேறு மொழியில் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். கடந்த முறை தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் இல்லை. எங்கே தமிழ் என்ற நிலை இருந்தது. அதை மாற்ற பெயர்ப் பலகை அழிப்புப் போராட்டம் நடத்த வேண்டுமென்று டாக்டர் ஐயா அவர்கள் போராட்டம் அறிவித்தார்கள். அப்போது முதல்வராக இருந்த மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ஆளை நீங்கள் அனுப்ப வேண்டாம், நான் ஆணை அனுப்புகிறேன் என்று.

[திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்] [2001 மே 30

ஆனால் ஆணை அனுப்பவில்லை. நாங்கள் போராட்டத்தினை நடத்தினோம். அண்ணா அறிவாலயத்தில் செயல்படும் Sun T.V. என்பதை சூரியன் தொலைக்காட்சி என்று மாற்ற வேண்டுமென்று அந்தப் பெயர்ப் பலகையை அழித்தபோது காவல் துறையால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழினத் தலைவர் ஆட்சியில் இருந்த அந்த நிலை மாற வேண்டும். இன்றைக்கு புரட்சித் தலைவி ஆட்சியில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இருக்க வேண்டும். தமிழில் பெயர்ப் பலகைகள் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

எனது தொகுதியில் ஜெயங்கொண்டம் நிலக்கரி மின் திட்டம் என்ற திட்டம் கடந்த முறை புரட்சித் தலைவி ஆட்சியில் இருந்தபோது கொண்டு வரப்பட்டது. அந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென்றும், மக்கள் எந்த அளவிற்கும் அதனால் பாதிக்கப்படக் கூடாது என்றும், அதைப் பரிசீலனை செய்து சரியாகச் செயல்படுத்த வேண்டுமென்கிற நிலையில் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. கடந்த முறை இந்தத் தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மத்திய தொழில் துறை அமைச்சராக இருக்கின்ற முரசொலி மாறன் அவர்களுடைய தூண்டுதலின் பேரில் மிக வேகமாக இந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தை எப்படிச் செய்தார்கள்? அங்கு நாங்கள் நிலம் கொடுப்போர் நலச் சங்கம் என்றெல்லாம் வைத்திருக்கின்றோம். அந்தத் திட்டத்தின்கீழ் பாதிப்புக்குள்ளாகின்ற கிராமங்கள் 13 கிராமங்கள்; பாதிப்புக்குள்ளாகின்ற குடும்பங்கள் 2534 குடும்பங்கள்; பாதிப்புக்குள்ளாகின்ற மொத்த மக்கள் தொகை 10,822; பாதிப்புக்குள்ளாகும் நிலப்பரப்பு 4,059.75 ஹெக்டேர். ஒரு ஏக்கரில் எடுக்கப்படுகிற நிலக்கரியின் மதிப்பு இன்றைய சந்தை நிலவரப்படி 5.18 கோடி ரூபாய். ஆனால் ஒரு ஏக்கருக்கு அரசு நிர்ணயித்துள்ள நஷ்ட ஈட்டுத் தொகையாக ரூபாய் 10,000-த்திலிருந்து 25,000 ரூபாய் வரைக்கும் கொடுத்திருக்கின்றார்கள். இதைப் பார்த்துவிட்டு எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களே தெளிவாகச் சொன்னார்கள்; ஒரு ஏக்கருக்கு 10,000-த்திலிருந்து 25,000 ரூபாய் வரை என்றால் நாங்கள் கொடுக்க முடியாது, இதற்காகப் பல வருட காலமாக நாங்கள் போராடுகின்றோம், எங்களுக்குரிய நஷ்டஈட்டையும் வேலைவாய்ப்பையும் தந்தால்தான் கொடுப்போம், இல்லையென்றால் இந்த சொந்த மண்ணிலிருந்து நாங்கள் அகதிகளாக வெளியேறுவதைவிட இந்த மண்ணிலேயே நாங்கள் போராடி சாவதற்குத் தயாராக இருக்கிறோம்,



2001 மே 30] [திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்]

அந்தப் போராட்டக் களத்திற்கு நானே தலைமையேற்றுப் போராடி இந்த மண்ணிலேயே உயிர் விடத் தயாராக இருக்கின்றேன் என்று டாக்டர் ஐயா அவர்கள் சொன்னார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த அரசு அதைக் கவனத்தில் கொள்ளாமல் நில ஆக்கிரமிப்புச் சட்டப்படி ஆக்கிரமித்து அதற்கான பணத்தை மத்திய கூட்டுறவு வங்கியில் deposit செய்து, உங்களுக்கு நிலம் சொந்தம் கிடையாது, நீங்கள் அந்த நிலத்துக்குண்டான பணத்தை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, அந்த விவசாயிகளின் மீது திணித்தார்கள்.

நான் சொல்கின்ற எனது தொகுதியினுடைய பகுதியில் முந்திரிக் கொட்டைதான் விவசாயம். அது முந்திரிக் காடு. அங்கு படித்த இளைஞர்கள் இதற்கு முன்பே தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்கள். இருக்கின்ற ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலத்தையும் கட்டாயப்படுத்தி பிடுங்கிக் கொண்டு எங்களை அகதிகளாக ஆக்கினால் அங்குள்ள மக்களின் நிலை என்ன, வாழ்வு நிலை என்ன என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே, இந்த நிலையைப் போக்க இந்தத் திட்டத்தை உடனே மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், ஒரு ஏக்கர் நிலத்திற்கு நாங்கள் முன்வைத்த கோரிக்கை குறைந்தது 5 இலட்சம் ரூபாய் தேவை என்பதாகும். 5 இலட்சம் ரூபாய் தேவை என்றும், நிலம் கொடுப்பவர்களுக்கு அந்தத் திட்டத்தின் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்றும்.....

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, உறுப்பினரின் கன்னிப் பேச்சில் குறுக்கிட வேண்டாம். அமருங்கள். (குறுக்கீடு) இல்லை, அவர் தனது பேச்சை முடிக்கப் போகிறார்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** துணைத் தலைவர் அவர்களே, நிலம் வழங்கும் மக்களை அப்பகுதியில் குடியமர்த்துவதற்கு 10 சென்ட் இடத்தில் ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமெனக் கோரிக்கை வைத்திருக்கின்றோம். நிலம் கொடுத்த மக்களின் வாரிசுகளுக்குப் பயிற்சி அளித்து வேலை கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கின்றோம். நிலம் கொடுக்கும் மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளும், அரசு வசதிகளும், மருத்துவமனை, கல்வித் துறையின் மூலமான வசதிகளும் செய்து தர வேண்டுமென்பன போன்ற பல திட்டங்களைக்

[திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்] [2001 மே 30

கோரிக்கைகளாக நாங்கள் வைத்திருக்கின்றோம். இந்தக் கோரிக்கைகளைப் பற்றி எல்லாம் அழைத்துப் பேசவில்லை, சென்ற முறை இருந்த ஆட்சியின் முதல்வர் அவர்கள். அந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பேசாமல், நிலத்தை எடுப்போம் என்று சொன்னார்கள். நிலத்தை அரசாங்கம்தான் எடுக்கிறதா என்று பார்த்தால், அரசாங்கம் எடுக்கவில்லை. எங்கிருந்தோ வருகின்ற வடநாட்டு முதலாளிகளுக்கு அந்த நிலத்தை எடுத்துக் கொடுக்கின்ற வகையில் செயல்பட்டார்கள். நாங்கள் அப்போதுகூடச் சொன்னோம். என்ன சொன்னோம் என்றால், அந்தத் தனியார் முதலாளிகளையும், நிலம் கொடுப்போர் நலச் சங்கத்தின் சார்பாகவும் அந்த நிலத்தை வழங்கியோர் சார்பில் விவசாயிகளையும் அழைத்துப் பேசுங்கள், எங்கள் கோரிக்கைகளை நாங்கள் சொல்கிறோம், அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று நாங்கள் பார்த்து முடித்துக்கொள்கிறோம் என்று சொன்னபோது, 'அவர்களிடம் பேச முடியாது, நீங்கள் நிலங்களைக் காலி செய்கிறீர்களா, இல்லை, காவல் துறையை வைத்து உங்களைக் காலி செய்யட்டுமா' என்று இதே ஆற்காடு வீராசாமி அவர்கள் முதற்கொண்டு சொன்னார்கள். அதற்கு நாங்கள், 'எங்களைக் காலி செய்வதைவிட இந்த மண்ணிலே காவல் துறையை வைத்து எங்களைக் கொன்றுவிட்டு, இந்த நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று தெளிவாகச் சொன்னோம். எதற்காக இதைச் சொல்கிறோம் என்றால் இன்றைக்குச் சென்னையில் நடைபெறுகின்ற வீட்டைக் காலி செய்வதற்கு தாதாக்கள் செயல்படுவதுபோல், எங்கள் நிலத்தைக் காலி செய்வதற்கு அந்த அரசு தாதாக்கள் போல் செயல்பட்டது. இதை நாங்கள் வன்மையாகக் கண்டித்திருக்கின்றோம். அந்த நிலை மாற வேண்டும்.

***மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே நம்முடைய உறுப்பினர் தன்னுடைய கன்னிப் பேச்சிலே குறிப்பிட்ட அந்த விவரம் சம்பந்தமான முழுமையான அறிக்கையை நாளை நான் இந்தச் சபையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் சமர்ப்பிக்க இருக்கின்றேன். அவையிலே உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சென்ற அரசு பல்வேறு உள்நோக்கங்களோடு மிகப் பெரிய தவறை அதிலே செய்திருக்கிறது என்பதனை இங்கே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாளையோ அல்லது நாளை மறுநாளோ அதைப் பற்றிய முழுமையான அறிக்கை தேவைப்பட்டால் இந்த அவையிலே வைக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 மே 30]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** தலைவர் அவர்களே, நான் இதை இன்றைக்கு உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இது செல்ல வேண்டும் என்பதற்காகத்தான். அவர்கள் இதிலே முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இது ஏற்கெனவே சென்றதனால்தான் அவர்கள் இதன்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எனக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். இதிலே சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதை அவசரப்பட்டு நான் இப்போது இந்த அவையிலே வைக்க விரும்பவில்லை. நாளை அல்லது நாளை மறுதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த அவையிலே இருக்கும்போது அந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குரு அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளவழகன் அவர்கள் ஏதோ கேட்க விரும்புகிறார்.

*முற்பகல் 11—30*

* **திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம் குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கருணாநிதியினுடைய கடந்த ஆட்சியிலே ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டம் நிறுத்தப்பட்டது என்பது உண்மை. ஆனால், அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, பல்வேறு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்

[திரு. ப. இளவழகன்] [2001 மே 30

இன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். இந்தத் திட்டத்தை, முந்தைய கருணாநிதி அவர்களுடைய அரசு தடுத்து நிறுத்தியதைக் கருத்திற்கொண்டு, அங்கே வாழும் மக்கள், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் குரு அவர்கள் சொன்னதைப்போல, இதய தெய்வம் அம்மா அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னதன் அடிப்படையில், ஜெயங்கொண்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் அங்கே நிலம் கொடுக்கக்கூடிய விவசாயிகளுடைய குறைகளைத் தீர்ப்பதற்காக மாபெரும் போராட்டத்தை நடத்தினார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன். நன்றி.

**திரு, ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைத்தான் நானும் இங்கு குறிப்பிட்டேன். அதோடு மட்டுமல்லாமல், இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால், போன ஆட்சியில் நடந்த ஒன்றை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குரு வேண்டாம். இந்தச் செய்தி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேண்டாம்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** அதில் என்ன நடந்தது என்று நான் சொல்கிறேன். யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். வேண்டாம். *(மணியடிக்கப்பெற்றது)*

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** அதன் காரணமாக, டாக்டர் ஐயாவின் வீடும், மருத்துவமனையும் தாக்கப்பட்டன. அதைக் கண்டித்து, அந்தச் சம்பவத்திற்கு யார் காரணம் என்று கண்டுபிடித்து, அன்றைய அரசு, காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேசிய நெடுஞ்சாலையில், சாகும் வரை உண்ணாவிரதம் என்று எங்கள் ஐயா அவர்கள் இருந்தார்கள். ஆனால், அதைக் கண்டுபிடிக்கிறேன் என்று ஒரு Commission போட்டார்களே தவிர, இன்றைய வரைக்கும் யார் செய்தார்கள் என்று கண்டுபிடிக்கவில்லை. அப்போது நமது மாண்புமிகு இன்றைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வந்துதான் டாக்டர் ஐயாவின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்கள். எப்படி முடித்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 மே 30] [திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்]

வைத்தார்கள் என்றால், 'இந்த அரசில் நீங்கள் நீதி நியாயத்தை எதிர்பார்க்க முடியாது, அதனால், உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள்' என்று உண்ணாவிரதத்தை முடித்து வைத்தது நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்தான். எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், ** கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த அரசுக்கும், நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குரு, உங்களுடைய சிறப்பான பேச்சை நானும் கேட்டுக்கொண்டிருந்தேன். 17, 18 நிமிடங்கள் ஆகிறது. நீங்கள் குரு. எல்லோருக்கும் குருவாக இருக்க வேண்டியவர். பேசி முடியுங்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** எனது தொகுதியில் முந்திரிப் பயிர் அதிகம் என்பதால், முந்திரிக் காட்டுப் பயிர் செய்யும் விவசாயிகள்தான் அதிகம் என்பதால், ஆண்டிமடம் தொகுதியில், முந்திரித் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும்.

அரியலூர் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். இந்த மாவட்டத்திற்குத் தொழிற்சாலைகளைத் தொடங்கி வேலைவாய்ப்பினைப் பெருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டிமடம், செந்துறை ஆகிய இரண்டு பஞ்சாயத்துக்களையும் பேரூராட்சிகளாக மாற்ற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். பாசன ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும். குறிப்பாக, பெரிய கிருஷ்ணாபுரம், செந்துறை, குழுமூர், சித்துடையார் ஏரிகளை ஆழப்படுத்திட வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

செந்துறையில் அரசு போக்குவரத்துப் பணிமனை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். ஆண்டிமடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்துறையில் சார் நிலைக் கருவூலமும், கிளைச் சிறைச்சாலையும் அமைத்தல் வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டிமடம் ஒன்றியத்தில், புதுக்குடி மேம்பாலம் அமைத்தல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வேண்டும். செந்துறை ஒன்றியத்தில் ஆனைவாரி ஓடையிலும், கிளிமங்கலம் ஓடையிலும் மேம்பாலம் அமைத்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

செந்துறை தாலுகாவில் தளவாய், சேந்தமங்கலம், கிலுப்பனூர், ஈச்சங்காடு, சிவராமபுரம், கன்னாசி நல்லூர் பகுதியில் நிலத்தடி நீர் உப்பு நீராக இருக்கின்ற காரணத்தால், இதுவரைக்கும் குடிநீர் அங்கு கிடைக்கவில்லை. அதனால், பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர் அங்கு கிடைக்கவில்லை. அதனால், பாதுகாக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வெள்ளாற்றிலிருந்து நீர் எடுத்துத் தர வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

ஜெயங்கொண்டத்திலிருந்து திருச்சி வழியாகச் செல்லும் பேருந்துகளின் வழித்தடத்தை மாற்றி, பரணம், குமிழியம், இரும்புலி குறிச்சி, சோழங்குறிச்சி, ஆனந்தவாடி வழியாக அரியலூர் செல்லும்படி மாற்றி அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்துறை தாலுகா ஆர்.எஸ். மாத்தூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஒன்று புதியதாய் அமைத்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்கு-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளை வைப்பதற்கு இன்னும் எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. எல்லாக் கோரிக்கைகளையும் இப்போதே சொல்லிவிட்டால் பிறகு பேச முடியாது.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** ஆண்டிமடம் தொகுதி முழுவதிலும் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதால் அதை முழுமையாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டிமடம் தொகுதி முழுமைக்கும் உட்பட்ட சாலைகளைச் செப்பனிட்டு, தார்ச் சாலையாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டிமடம் தொகுதிக்கு உட்பட்ட அரசுப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் தேவைப்படுவதால் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—35*

ஆண்டிமடம் தொகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல



விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

படித்துவிட்டு வேலையில்லாமல் திண்டாடும் பட்டதாரி இளைஞர்களுக்கு நல்வழி காட்டக்கூடிய வகையில் தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மீதியுள்ள கோரிக்கைகளை நான் எழுதிக் கொடுக்கிறேன். எனக்குப் பேச இங்கு வாய்ப்பளித்தமைக்கு நம்முடைய பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

***திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வருகிறது. இந்த விவாதங்கள் சில படிப்பினைகளையும், பாடங்களையும் தந்து வருகின்றன. தமிழக மக்களுக்கு இந்த மாமன்றத்தின் வாயிலாக பல உண்மைகளை, விளக்கங்களை, தர்க்கரீதியாகத் தர முடிந்திருக்கிறது. கவர்னர் அவர்களின் உரையைப் புறக்கணித்த திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அந்த அணியினர், தமிழக முதல்வரும், மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற கட்சிகளும் அது ஒரு ஜனநாயகக் கடமையை செய்யத் தவறிய நடவடிக்கை என்று விமர்சித்ததற்குப் பதில் சொல்கின்ற வகையில், நேற்று முன்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் பத்திரிகையிலே அறிக்கையின் வாயிலாகக் குறிப்பிட்டபோது, இயேசுநாதரின் பைபிள் கதை ஒன்றை அவர் சுட்டிக்காட்டினார்.

"முதல்வரைத் தொடர்ந்து அவரோடு இணைந்திருக்கிற கட்சிகளெல்லாம் ஒருசேர கோரஸ் பாடியிருக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டு, ஒரு பெண்மணியின்மீது ஊரே கல்லை வீசியதாக இயேசுவிடம் அவர் முறையிட்டதாகவும், இயேசு அதற்கு, உங்களில் யார் தவறு செய்ய வில்லையோ அவர்கள், அவர்மீது கல்லை வீசுங்கள் என்று கூறியதாகக் கூறிய, அந்தக் கதையை அவர் அறிக்கையின் வாயிலாகக் குறிப்பிட்டிருந்தார். இந்தத் தேர்தலுக்கும், தேர்தலுக்கு முந்தைய சந்தர்ப்பங்களிலும் நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்வுகளை அந்தக் கதையோடு ஒப்பிட நான் விரும்புகிறேன்.

[திரு. கே.சி. கருணாகரன்] [2001 மே 30

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளரும், இன்றைய தமிழக முதல்வருமான மரியாதைக் குரிய அம்மா அவர்கள்மீது, பைபிள் கதையிலே சொல்லப்பட்ட பெண்மணியின்மீது ஊரே கல் வீசியதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகமும், அவர்களோடு கூட்டுச் சேர்ந்த கட்சிகளெல்லாம் மொத்தமாகச் சேர்ந்து ஊழல் கற்களை ஓயாமல் வீசியபோது, அம்மா அவர்கள், தமிழக மக்களை இயேசுவாகக் கருதி முறையிட்டார்கள். தமிழக மக்கள் கடவுளைப் போல, ஊழல் கற்களை வீசியவர்களைப் பார்த்துச் சொன்னார்கள், உங்களில் ஊழல் செய்யாதவர் எவரோ, அவர் கற்களை வீசுங்கள் என்று சொன்னதாக நாம் புரிந்துகொள்ள முடியும். அந்த வகையில் இயேசு வழங்கிய தீர்ப்பைப்போல, தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அம்மா அவர்களுக்கு நியாயம் வழங்கியது மட்டுமல்ல; அவரை அரியணையில் உட்கார வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் தமிழக மக்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்கு முன்னதாக தமிழக மக்களின் இந்த மகத்தான தீர்ப்பினை அங்கீகரித்து, பல ஆரூடங்களுக்கும், நெருக்கடிகளுக்கும், மிரட்டல்களுக்கும் மத்தியில் சட்டப் பிரச்சினைகளையெல்லாம் சுட்டிக்காட்டியதற்குப் பிறகும்கூட துணிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அம்மா அவர்களை தமிழகத்தின் முதல்வராக பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்கிற மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்கு முதலாவது நன்றியை நாங்கள் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

*முற்பகல் 11—40*

மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி ஒரு வலுவான அணியாக உருவாகி, தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஒரு மாபெரும் நம்பிக்கையை உருவாக்கியதன் விளைவாகவும், இந்த மகத்தான வெற்றியை நாம் பெற முடிந்திருக்கிறது. அந்த வகையில் இந்த அணியை உருவாக்கி, தேர்தலுக்காக மாத்திரமல்லாமல், 2000 ஆண்டு ஜூலையிலே தொடங்கி அடுத்தடுத்து மக்கள் போராட்டங்களை நடத்தி, அதன் விளைவாக இதுதான் தமிழக மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய அணியாக இருக்குமென்று மக்கள் விரும்பி, அங்கீகரித்திருக்கிறார்கள். அந்த வகையில், இந்த அணியை உருவாக்குவதற்குப் பாடுபட்டிருக்கக்கூடிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் வணக்கத்திற்குரிய மூப்பனார் அவர்களுக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு. சங்கரய்யா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் நல்லகண்ணு, பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ் ஐயா போன்றவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராமல், இந்த அணிக்குள்ளே பல நெருக்கடிகளும், சங்கடங்களும், பிளவுகளும்கூட வருவதற்கான சூழலை உருவாக்குவதற்கு தி.மு.க.வைச் சார்ந்தவர்களெல்லாம் முயற்சித்தபோது, இதை வலுவான ஒற்றுமை அணியாக உருவாக்க வேண்டும் என்பதற்காக கடைசிவரை இணைந்து நின்று செயல்பட்ட திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய வீரமணி அவர்களுக்கும் இந்த மன்றத்தின் வாயிலாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.



2001 மே 30] [திரு. கே.சி. கருணாகரன்]

அதேபோல, நான் போட்டியிட்டு வெற்றிபெற்ற சிங்காநல்லூர் சட்டப் பேரவைத் தொகுதி, முன்னாள் அமைச்சர் ஒருவரைச் சந்தித்த தொகுதி. அந்தத் தொகுதியின் வாக்காளர்கள் அதிகார பலம், பண பலம் ஆகியவற்றை எதிர்த்து, மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக நின்ற எனக்கு *82,000* வாக்குகளுக்கு மேல் அளித்து, *20,000*-க்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் அமைச்சர் ஒருவரைத் தோல்வியுறச் செய்திருக்கக்கூடிய சிங்காநல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைச்சர்களின் தோல்விக்கு இன்னொரு முக்கியமான காரணமும்கூட நாம் புரிந்துகொள்ள வேண்டும். நேற்றையதினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு பழனிசாமி அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டதுபோல, மக்கள் வாழ்நிலைகளுக்கும், மந்திரிகளின் சிந்தனைக்கும் அனேகமாக சம்பந்தம் இருக்கவில்லை. அவர்களுடைய செயல்பாட்டிற்கு மட்டுமல்ல, தேர்தல்கால விளம்பரங்களில்கூட, அதைப் பார்க்க முடிந்தது. நான் சுவை சேர்ப்பதற்காகச் சொல்லவில்லை. பத்திரிகைகள்கூட எழுதிய உண்மை விஷயம் என்னவென்று சொன்னால், மூடப்பட்டு பூட்டுப் போட்டிருக்கும் gate சுவரிலே, "தொடரட்டும் இந்தப் பொற்காலம்" என்று அவர்கள் வாசகம் எழுதி வைத்தார்கள். நான் சுவைக்காகச் சொல்லவில்லை; உண்மையில். அப்படியென்றால், ஜனங்களுக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம்? அவர்கள் வாழ்நிலைக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

[திரு. கே.சி. கருணாகரன்] [2001 மே 30

தமிழகத் தேர்தல் உள்ளிட்டு, ஐந்து மாநிலங்களுக்கு நடந்திருக்கக்கூடிய இந்தத் தேர்தல் முடிவுகள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் பெரிய தேசிய சரிவு என்றே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணியின் கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விடுக்க வேண்டுமென்று எங்கள் கட்சி கருதுகிறது.

இந்தத் தேர்தல் முடிவிற்குப் பிறகு நமக்கு ஏற்பட்டிருக்கிற கடமைகள் என்பது, இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிற கடமைகள் என்பது மிகக் கடுமையானது. கஜானா காலி என்ற ஒன்றோடு மாத்திரமல்ல; தமிழக மக்கள் அளித்திருக்கும் மகத்தான இந்தத் தீர்ப்பு மிகப் பெரிய எதிர்பார்ப்புகளை நம்மீது சுமையாகச் சுமத்தியிருக்கிறது. அதை நாம் எவ்வாறு சந்திக்கப் போகிறோம் என்பதிலேயிருந்துதான் இந்த ஒற்றுமை மேலும் வலுவடைய வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுகிறது; தேவையும் ஏற்படுகிறது, தொழில், விவசாயம், பொருளாதாரம் ஆகிய அடிப்படையான மூன்றும் அரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டிருக்கின்றன.

கோவை, நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மொத்தமாக இந்தப் பகுதிகளில் ஒரு மந்திரிகூட வெற்றிபெற முடிய வில்லை. அவர்கள் தோல்வி அடைந்திருக்கிறார்கள். நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பது மகிழத்தக்க விஷயம்தான் என்றாலும், மக்கள் அவர்களை நிராகரித்து நம்மை அங்கீகரித்திருக்கிறார்கள் என்றால், இந்த அணியின் வலு என்பதோடு மாத்திரமல்லாமல், நான் ஏற்கெனவே சொன்ன, இந்த குறிப்பான பாதிப்புகளும் முக்கியமான காரணங்களாக விளங்குகின்றன.

நீலகிரியிலே தேயிலைப் பிரச்சினை, கோவையிலே பஞ்சாலை, engineering, powerloom, banian போன்றிருக்கிற தொழில் பிரச்சினைகள், சேலத்திலே steel பிரச்சினைகள், தருமபுரியிலே எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிற எண்ணற்ற பிரச்சினைகள், ஓசூரிலும், கிருஷ்ணகிரியிலும் மூடப்பட்டிருக்கக்கூடிய சிறு தொழிற்சாலைகளின் பாதிப்புகள், இவை மொத்தமும் இருக்கின்றன. நாம் எப்படி இதைச் சந்திக்கப் போகிறோம் என்று கவலையோடு பார்க்க வேண்டிய விஷயமாக, இந்த கவர்னர் உரையின்மீது இதனை நான் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)



2001 மே 30] [திரு. கே.சி. கருணாகரன்]

*முற்பகல் 11—45*

அதேபோல, இந்தக் கடமைகளை நிறைவேற்ற, கவர்னர் உரையின் 7-வது பக்கத்தில் 8-வது விஷயமாகச் சொல்லப்பட்டிருக்கிற ஒரு விஷயத்தை அழுத்தமாகக் குறிப்பிட்டு, இதன்மீது ஒன்றுபட்ட நடவடிக்கைக்குப் போக வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதாவது "அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள் நிதிப் பகிர்வில், தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய நியாயமான பங்கினை அளிக்கத் தவறியுள்ளன என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். முன்னேற்றப் பாதையில் செயல்படுகின்ற மாநிலங்களின் நிதியாதாரங்களைப் பெருக்குவதில், மத்திய அரசு தன்னுடைய கடமையைப் புறக்கணிக்கக்கூடாது என்பதை இவ்வரசு மத்திய அரசிடம் வலியுறுத்தும்" என்று கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கஜானா காலி, எதிர்பார்ப்புகள் அதிகம், இவற்றுக்கு எல்லாம் நிதி தேவை என்று சொன்னால், மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நிதிப் பகிர்வை வஞ்சகமற்ற முறையில் பெறுவதற்கு, பல்வேறு மாநிலங்களின், அதாவது எதிர்க்கட்சி மாநில அரசுகளோடும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிராக இருக்கும்படியான அனைத்து சக்திகளையும் ஒருமுகப்படுத்தி, மத்திய அரசோடு வாதிட வேண்டியிருக்கிறது. காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்திலே தோல்வியடைந்திருக்கிறது. மத்தியிலே கூட்டணியிலே இருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும். அந்த நிலையிலே இதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமான விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் என்னுடைய சிங்காநல்லூர் சட்டப்பேரவைத் தொகுதியில் மட்டும் 10 ஆலைகள் பூட்டப்பட்டிருக்கின்றன. ஜெயலட்சுமி மில்ஸ், வசந்தா மில்ஸ், இராதாகிருஷ்ணா மில்ஸ், ராஜலட்சுமி மில்ஸ், சிவானந்தா மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், மது ஸ்பின்னிங் மில்ஸ், கே.ஜி. ஸ்பின்னர்ஸ் மில், உறரி மில்ஸ் போன்ற மில்கள் கடுமையான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டியிருக்கின்றன. தொழில் துறை அமைச்சருக்குக் கூடுதல் பொறுப்பு இருக்கிறது. தொழிலாளர் நல அமைச்சருக்கு அதைவிடக் கூடுதல் பொறுப்பு இருக்கிறது. மொத்தத் தொழிலாளிகள் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூலப் பொருட்களின் விலை உயர்வு, பணப் புழக்கமின்மை, நடைமுறை மூலதனத்திற்கு...

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு சபை உறுப்பினர் கருணாகரன் அவர்கள் பேசும்போது, மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளைப் பற்றி மட்டும் குறிப்பிட்டார்கள். தமிழகத்தினுடைய முந்தைய முதலமைச்சருடைய ஐந்து ஆண்டு கால பரிபாலனத்திலே, இன்றைய நிலையிலே பல்வேறு தொழிற்சாலைகள், அவர்களுடைய நேரடி நிர்வாகத்திலேயிருந்த தொழிற்சாலைகள், இன்றைக்கு மூடப்படுமோ, நாளைக்கு மூடப்படுமோ என்கின்ற நிலைமையிலே, தொழிற்சாலை களுக்காகப் போடப்பட்ட மூலதனம் என்பது மூழ்கிப்போய் அந்தத் தொழிற்சாலைகள் நடத்துவதற்கான running capital-க்கு என்று, அரசின் சார்பாக ஒதுக்கப்பட்ட அந்தப் பணமும், 5 ஆண்டு காலம் நிர்வகித்ததில் நடந்த முறைகேடுகள் காரணமாகக் காணாமல் போய், அதற்கு மேலாக, அரசின் சார்பாக வழங்கப்பட்ட அதாவது மானியமாகவோ அல்லது வங்கி guarantee-ஆகவோ வழங்கப்பட்ட பணத்தையும் வைத்து நிர்வாகம் செய்து, அரசின் சார்பாக நடக்கின்ற அனைத்துத் தொழிற்சாலைகளையும் இப்போது எப்படி நடத்துவது என்பது தெரியாமல் விழி பிதுங்கத்தக்க ஒரு சூழ்நிலையிலே, இன்றைக்கு அனைத்துத் தொழிற்சாலைகளும், தமிழகத்திலே முன்னாள் முதலமைச்சரால் நிர்வகிக்கப்பட்ட நிலைமையிலே மிக நசிந்து, நலிவடைந்து போன நிலையிலே இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கவனத்திற்கு இந்தச் சபையின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நலிவடைந்ததற்கான காரணங்களும், நலிந்து போய் அவை அழிந்து போனதற்கான உண்மைகளும் புரிந்த விஷயங்கள்தான். இதை ஒழுங்குபடுத்துவதற்கு உண்டான முயற்சியைப் பற்றி நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். பத்தாயிரக்கணக்கான தொழிலாளிகள் பஞ்சத்திலும், பசியிலும், பட்டினியிலும்...

**மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நசிந்து போய் இருக்கின்ற, மூடப்படக்கூடிய நிலையிலே இருக்கின்ற இந்தத் தொழிற்சாலைகளை எவ்வாறு செப்பனிடுவது என்பது சம்பந்தமாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரவும் பகலும் சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தைத் தொழில் துறையிலே முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்கின்ற மிகப் பெரிய சபதத்தை அம்மா அவர்கள் பதவியேற்ற அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், எங்களுடைய





அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும் இது சம்பந்தமாக விவரமாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இருந்தாலும் கடந்த 5 ஆண்டு காலத்திலே, தொழில் துறையிலே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த ஒருவர் செய்த நிர்வாகத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கிற நோய் என்பது சாதாரண நோய் அல்ல. தீர்க்க முடியாத அளவிற்கு, மிகப் பெரிய வைத்தியத்தை நாடுகிற அளவிற்கு, scan செய்து பார்த்து எங்கெல்லாம் புரையோடிக் கிடக்கிறது என்று கண்டுபிடித்து, அதை நிவர்த்தி செய்வது என்பது மிகமிகக் கடினமான ஒன்று. அதற்கான வாய்ப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்டாக்கி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக, அனைத்துத் தொழிற்சாலைகளும் செவ்வனே நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இங்கே பணிவன்போடு, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன் அவர்களே, உங்களுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். ஆகவே, பேச்சை நிறைவு செய்யலாம்.

**திரு. கே.சி. கருணாகரன்**: ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அவ்வாறு நிறைவேற்றுகின்ற அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் இணைந்து, நன்கு ஒத்துழைப்புத் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—50*

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தவறான கொள்கையாலே சிறு மற்றும் குறுந்தொழில்கள் ஏறக்குறைய 50 சதவீதம் அளவிற்கு மூடப்பட்டு இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அமர்ந்து இருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் அதை உணர்ந்து இந்த ஆளுநர் உரையிலே—19—2—1997 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாலே அறிவிக்கப்பட்ட அரசாணை எண் 75—ஐ இரத்து செய்து மீண்டும் சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கு உயிர் ஊட்டுகின்ற அளவிலே ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு முக்கியமான விஷயங்கள். ஒன்று, நகர்ப்புறங்களில் அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே சில சட்ட நெருக்கடிகள் இருக்கின்றன. அதை எளிமைப்படுத்தி அந்த ஜனங்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டியிருக்கிறது. கோவை மாநகரில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் வீடு கட்டிக் குடியிருப்போர் மிகச் சாதாரண மக்கள். வீட்டிற்குக் குடிநீர்க் குழாய் இணைப்பு, தெரு விளக்குகள், சாக்கடை வசதி, சாலை வசதி என்கிற எந்த அடிப்படை வசதிகளும் அங்கு இல்லை. தி.மு.க. அரசு இந்த மனைப் பிரிவுகளை முறைப்படுத்தி போட்ட உத்தரவில், கீழ்க்கண்ட குறைபாடுகளை நீக்கி அவர்களுக்கு முழுமையாக அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும். 1993 ஆம் ஆண்டின்படியே அபிவிருத்திக் கட்டணத்தை இவ்வாண்டு முழுவதும் வசூலிக்க வேண்டும். தற்போது காலக்கெடு ஜூன் 30 வரை என்று இருப்பதை நீட்டித்துத்தர வேண்டும். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 2000 ஆண்டு வழிகாட்டு மதிப்பீட்டின்படி நிர்ணயிக்கப்பட்ட 50 சதவிகிதத் தொகையை உடனடியாக இரத்து செய்ய வேண்டும். இது குறித்து கோவை மாநகர் மாமன்றமும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. HUDCO அமைப்பு மூலமாக மாநகரம் முழுவதும் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள வீதிகளில் பகிர்மான குழாய்களைப் பதித்து தேவையான இடங்களில் போடவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், உங்கள் கையில் இருப்பதை அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். ஆவன செய்வதற்கு ஏற்பாடு செய்கிறோம். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்திலே பேசுவதற்கான வாய்ப்பை வழங்கிய எங்களுடைய வணக்கத்திற்குரிய தலைவியும், வள்ளன்மையோடு வாரி வழங்குகிற வான்மேக நெஞ்சம் கொண்டு, கள்ள சிந்தை கொண்டு வரும் பகையைத் துள்ளியெழுந்து துண்டாடி, தூள் தூளாக்கி தமிழகத்திலே பொற்கால ஆட்சியைப் படைத்து இருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது





பேச விழைகின்றேன். நடந்து முடிந்த சட்டமன்றப் பேரவைத் தேர்தலில், எங்கோ ஒரு மூலையிலே குக்கிராமத்திலே பிறந்திருந்த என்னை பெரம்பலூர் தொகுதியினுடைய சட்டப் பேரவை வேட்பாளராக முன்நிறுத்தி என்னுடைய வெற்றிக்காகத் தேர்தல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு என்னை வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திலே உறுப்பினராக அமர வைத்த, நான் நித்தம் வணங்குகின்ற என் தாயார் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை; இனி அஞ்ச வருவதும் இல்லை" என்கின்ற தனக்குப் பிடித்த பொன்மொழியை நெஞ்சிலே தேக்கி, 5 ஆண்டு காலம் ஆட்சி செய்தவர்கள் கொடுத்திட்ட தொல்லைகளை, துயரங்களை—இடுக்கண் வந்தாலும், அவை அடுக்கடுக்காய் வந்தாலும், பொங்கும் தடை கோடி வந்தாலும், புறங்காட்டி ஓடமாட்டேன்; தமிழக மக்களுக்காகப் பாடுபடுவேன் என்று சவால் விட்டு, அந்தத் துயரங்களை—தூள் தூளாக்கி, இன்றைக்குச் சாதனை படைத்து, முதலமைச்சராக எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் இங்கே அமர்ந்து இருக்கிறார்கள்.

ஆளுநர் உரையிலே மிகத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப் பட்டிருக்கிறது. மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே சொல்கின்ற நேரத்திலே, தமிழகத்தினுடைய பெருமக்கள் இந்தத் தேர்தலிலே தெளிவான தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். அதிலேயும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள்மீது தமிழக மக்கள் மிகுந்த நம்பிக்கையை வைத்து இந்தத் தேர்தலிலே தீர்ப்பு வழங்கி இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

*முற்பகல் 11—55*

புரட்சித் தலைவி அவர்கள்தான் நிரந்தர முதல்வர் என்பதை அறிவார்ந்த மக்கள் தீர்மானித்து விட்டார்கள், உழைப்பாளிகள் உறுதியாக்கிவிட்டார்கள், பாட்டாளிகள் பறைசாற்றிவிட்டார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, நேற்றைக்கு முன்தினம் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி மட்டும் அதை ஏற்றுக்கொள்ளாதவராகப் பேசி இருக்கிறார். பொன்முடி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே தேர்தல் தோல்வியைப்பற்றித் தங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக்

[திரு. ப. இராஜரெத்தினம்] [2001 மே 30

கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே 234 தொகுதிகளிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்கள் வந்திருக்கின்றீர்கள். நடந்து முடிந்த தேர்தல் களம் எப்படி இருந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். புரட்சித் தலைவி அவர்கள் மதுரை மாநகரத்திலே தொடங்கி, தமிழகம் முழுவதும் சுற்றிவந்து, தேர்தல் பணி ஆற்றிய நேரத்திலே தமிழக மக்கள் பெருந்திரளாக வந்து அவருடைய சுற்றுப் பயணத்திலே எப்படிக் கலந்துகொண்டார்கள், ஆனால், எதிர் முகாமிலே இருந்த கருணாநிதி அவர்களுடைய சுற்றுப் பயணத்தின்போது மக்களிடையே எழுச்சி எப்படியிருந்தது என்பதையெல்லாம் நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையிலே, ஓரிடத்திலே அவர்கள் நின்றார்கள் என்று சொன்னால், அந்த இடத்திலே ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடந்துகொண்டிருப்பதைப்போல பொதுமக்கள் எழுச்சியோடு கூடினார்கள். புரட்சித் தலைவி அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்றார்கள் என்று சொன்னால், அது மாபெரும் மக்கள் கலந்துகொள்ளக்கூடிய, பெருந்திரளாகக் கலந்து கொள்ளக்கூடிய, இலட்சோபலட்சம் மக்கள் பங்கேற்கக்கூடிய ஒரு பேரணியாக அமைந்து இருந்தது. அதைப்போல, புரட்சித் தலைவி அவர்கள் ஓரிடத்தில் பேசினார்கள் என்று சொன்னால், அந்த இடம் ஒரு மாபெரும் மாநாடு நடந்ததைப்போன்ற ஓர் எழுச்சி தமிழக மக்களிடையே இருந்தது. ஆனால், கருணாநிதி அவர்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களும், அவர் செய்த சுற்றுப் பயணங்களும் எப்படி இருந்தன என்று சொன்னால், அந்தச் சுற்றுப் பயணங்களிலே மக்கள் எழுச்சியில்லாத ஒரு நிலைமை இருந்தது. புரட்சித் தலைவி அவர்கள் 234 தொகுதிகளுக்கும் சென்ற நேரத்திலே, 234 மாநாடுகளிலே அவர்கள் பேசினார்கள் என்கின்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே 18 நாட்களிலே புரட்சித் தலைவி அவர்கள் 234 மாநாடுகளிலே கலந்துகொள்ளக்கூடிய எழுச்சியைத் தமிழகத்திலே ஏற்படுத்தினார்கள். ஆனால், இவற்றையெல்லாம் தெரிந்து வைத்திருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி மட்டும், தேர்தலினுடைய தோல்வி தனக்குப் பின்புதான் தெரியும், அத்தகைய ஒரு தோல்வி தாங்கள் எதிர்பார்க்காத ஒன்று என்று சொல்வது, சோற்றிலே ஒரு பெரிய பூசணிக்காயை மறைப்பது போலாகும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2001 மே 30] [திரு. ப. இராஜரெத்தினம்]

நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திருமாவளவன் அவர்கள் பேசிய நேரத்திலே சொன்னார்கள். நாங்கள் கூட்டணி சேர்ந்திருக்கிறோம், ஆனால், அந்தக் கூட்டணி இன்றைக்கு ஆளுங்கட்சியாக வரவில்லை, ஆகவே, நீங்கள் குறை சொல்ல வேண்டாம் என்கின்ற ரீதியிலே தன்னுடைய வாதத்தை எடுத்து வைத்தார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்கின்ற முறையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். G.O. 44-ஐ இரத்து செய்த அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்று கவர்னரிடத்திலே புகார் மனு கொடுத்திருக்கிறீர்கள். அப்படி இருக்கின்ற நேரத்திலே அந்தக் கட்சியோடு எப்படி நீங்கள் கூட்டணி வைத்தீர்கள் என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன. என்னைப் பொறுத்தவரையிலே, இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவிப்பதெல்லாம், நீங்கள் கூட்டணி மட்டும் வைக்கவில்லை, G.O. 44-ஐ இரத்து செய்த அதே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சின்னமான உதயசூரியன் சின்னத்திலே நின்றது மட்டுமல்ல, G.O.44-ஐ இரத்து செய்த அந்த திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று நீங்கள் தேர்தல் பிரச்சாரம் செய்தீர்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர் பேசுகின்ற நேரத்திலே முல்லைப் பெரியாறு அணையைப் பற்றியெல்லாம் சொன்னார். 5 மாவட்டங்களுடைய விவசாயிகள் கலந்துகொள்ளக்கூடிய மாபெரும் பேரணியை, போராட்டத்தை கம்பத்திலே நடத்தி, முல்லைப் பெரியாறு அணையினுடைய அளவை 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று குரல் கொடுத்தவர்தான் எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், இன்றைய பொற்காலத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல திருமாவளவன் அவர்கள் காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே முதலமைச்சராக இருந்த நேரத்திலே மிகப் பெரிய உண்ணாநோன்பை மேற்கொண்டார்கள். அன்றைக்கு இருந்த பத்திரிகைகளில் எழுதினார்கள், புரட்சித் தலைவியினுடைய துணிச்சலான முடிவை விமர்சனம் செய்து

[திரு. ப. இராஜரெத்தினம்] [2001 மே 30

அன்றைக்குப் பாராட்டி எழுதுகின்ற நேரத்திலே, பத்திரிகையில் கோடிட்டுக் காட்டினார்கள்--'strong, sensible and supreme decision' என்று பத்திரிகையில் பாராட்டக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவி அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலே மிகுந்த அக்கறையோடு, தமிழக மக்களுடைய, விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வாஞ்சையோடு, புரட்சித் தலைவி அவர்கள் போராடினார்கள்.

*நண்பகல் 12—00*

எனக்கு முன்னாலே நேற்று பேசிய, பாரதிய ஜனதா கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் நடந்து முடிந்த தேர்தலிலே ஒரு கோடி மக்களுக்கு மேற்பட்டவர்கள் வாக்களிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்கள். அதற்கு தேர்தல் ஆணையம் தான் முழுப் பொறுப்பு ஏற்க வேண்டுமென்றும் சொன்னார்கள். நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், தேர்தல் நடத்தியது என்னவோ தேர்தல் ஆணையம்தான். ஆனால், அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். இங்கே தேர்ந்து எடுக்கப்பட்டு வந்திருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். வாக்காளர்கள் பட்டியலைச் சரிபார்க்கின்ற நேரத்திலே, சென்னையிலே அறிவாலயத்திலே உட்கார்ந்துகொண்டு அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் மாவட்ட நிர்வாகங்களுக்கும், ஆட்சித் தலைவர்களுக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் ஆணையைப் பிறப்பித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், ஒன்றியச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் சொல்கின்ற பட்டியலைச் சேர்க்க வேண்டுமென்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர்கள் கொடுக்கின்ற பட்டியலில் இருக்கின்ற வாக்காளர்களை நீக்க வேண்டுமென்றும் அன்றைய அரசு வாய்மொழியாக உத்தரவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர்கள், எந்த ஊரில் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அதனுடைய கூட்டணிக்கும் வாக்களிக்கக்கூடிய வாக்காளர்கள் இருக்கிறார்களோ, அவர்கள் பெயர்களை எல்லாம் அடையாளம் கண்டு, 50 இலட்சம் வாக்காளர்களுக்கு மேல் நீக்கிய பெருமை, அவர்களை வாக்களிக்க விடாமல் செய்த பெருமை, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, அந்த அளவிற்கு அவல நிலை மிகுந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இப்போது



2001 மே 30] [திரு. ப. இராஜரெத்தினம்]

நீக்கப்பட்டிருக்கிறது. பொற்கால முதல்வராக புரட்சித் தலைவியினுடைய ஆட்சி இன்றைக்கு தமிழகத்திலே அமைக்கப்பட்டு, பல்வேறு சிறப்பு அம்சங்கள் நிறைந்த திட்டங்கள் ஆளுநர் உரையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

கவர்னர் உரையில் மகளிருக்கான சிறப்பான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆயிரம் ஏக்கர் நிலத்திலே மகளிருக்கென தனியாகத் தொழிற்பேட்டை, 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சித் திட்டம், போன்ற இந்தத் திட்டங்கள் எல்லாம் மிகுந்த வரவேற்பைக் கொடுக்கக்கூடிய, மக்கள் வரவேற்கக்கூடிய திட்டங்களாகும்.

அதேபோல, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோர் கண்ட கனவான 69 சதவிகித இட ஒதுக்கீட்டை, புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே—1991 முதல் 1996 வரை--பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உண்டான அந்த இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதற்காக, அரசமைப்புச் சட்ட அட்டவணை 9-லே சேர்த்த பெருமை புரட்சித் தலைவி அவர்களைச் சாரும்.

அதேபோல, இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே அமர்ந்து விட்டார்கள் என்று சொன்னவுடனேயே, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் குதூகலத்துடன், மகிழ்ச்சியுடன் கொண்டாடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. 1991-லிருந்து 1996 வரை ஆட்சிப் பொறுப்பிலே இருந்த புரட்சித் தலைவி அவர்கள், சாதாரண தாழ்த்தப்பட்ட மக்களை அடையாளம் கண்டு, 100 பேர்களுக்கு, திருப்பூரிலே அவர்கள் அனைவரும் கோடீஸ்வரர்களாக ஆகின்ற ஒரு சிறப்பு மிகுந்த திட்டத்தை இந்தியத் திருநாட்டிற்கே ஒரு முன்னோடியான திட்டத்தை, பனியன் தொழிற்பேட்டையைத் தொடங்கி, தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காகப் பணியாற்றினார்கள். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதிக்கான ஒரு சில கோரிக்கைகளை மட்டும் வைத்து விடைபெற இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இது என்னுடைய கன்னிப் பேச்சாக இருப்பதால், அனுமதி தரவேண்டுமென்று கேட்டு, அவருடைய அனுமதியைப் பெற்றுப் பேசுகிறேன்.

என்னுடைய பெரம்பலூர் மாவட்டம் கடந்த 5 ஆண்டு காலமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே புறக்கணிக்கப்பட்ட மாவட்டமாக இருந்து வருகிறது. ஆகவே, அந்தப் பெரம்பலூர் பகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் கிடைக்கும், கிடைக்கும், இதோ செய்து தரப்படும், செய்து தரப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியாளர்கள் 5 ஆண்டு [illegible] பகுதி மக்களை ஏமாற்றிவிட்டார்கள். ஆகவே, பெரம்பலூர் [illegible]நராட்சிக்கும், வழியோரக் கிராமங்களுக்கும் காவிரி கூட்டுக் குடி[illegible]த்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர், மாவட்டத்தினுடைய தலைநகரமாக இருந்தும், அங்கே அரசுக் கல்லூரி இன்னும் வரப்பெறவில்லை. ஆகவே, பொற்கால முதல்வராம் புரட்சித் தலைவி அவர்கள் பெரம்பலூரிலே அரசு கலைக் கல்லூரியைத் தொடங்க, எங்களுக்கு வழிவகை செய்து தரவேண்டும்.

அடுத்து, என்னுடைய பகுதியான வேப்பந்தட்டை ஒன்றியத்தில், மலையாளப்பட்டி என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே சின்னமுட்லூர் என்ற இடத்திலே ஒரு நீர்த்தேக்கத்தைக் கட்டினால் 15,000 ஏக்கர் நிலம் பயனடைய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல, பெரம்பலூர் தலைநகரிலே இருக்கின்ற அரசு மருத்துவமனையிலே மருத்துவர்கள் இல்லாத ஒரு சூழ்நிலை கடந்த ஆட்சியிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மேலும் மருத்துவர்களை நியமிக்க வேண்டுவதோடு, ஒரு சின்ன கோரிக்கையையும் வைக்க விரும்புகிறேன். அந்த தேசிய நெடுஞ்சாலையிலே ஏற்படுகிற விபத்துக்கள் அனைத்தும் தொழுதூரிலிருந்து பாடாலூர் வரை செல்லும் சாலையில் ஏற்பட்டு வருகின்றன. இது அரசினுடைய புள்ளிவிவரக் கணக்கிலே இருக்கிறது. பெரம்பலூரிலே, தேசிய நெடுஞ்சாலை இருக்கின்ற பகுதியிலே, தேசிய நெடுஞ்சாலையிலே அனைத்து வசதிகளுடனும் கூடிய அரசு மருத்துவமனையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் சமர்ப்பித்த தேர்தல் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 'தூய்மையும், செயல் திறனும் மிக்க ஆட்சியை நாங்கள் தருவோம்' என்று சொல்லியிருக்கின்றார்கள். நேர்மை, திறமை மிகுந்த நிர்வாக முறையைத் தருவோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். புனிதமும், நடுநிலைமையும் மிளிரும் நீதித் துறையைத் தருவோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். வளம் மிகுந்த வாழ்க்கைத் தரத்தை மக்களுக்குத் தருவோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். புரட்சித்



தலைவியின் ஆட்சிக் காலத்திலே பொற்காலமாகத் தமிழகம் திகழ இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12—05

நான் ஒரே ஒரு கருத்தை மாத்திரம் சொல்ல நீங்கள் அனுமதி தரவேண்டும். 1989-லே இதே சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அவர்களை ஒரே ஒரு நாள் அவமானப்படுத்தினார்கள் அன்றைய ஆட்சியாளர்கள். ஆனால், 1991-லிருந்து 1996 வரை, ஐந்தாண்டு கால ஆட்சியைப் பொதுமக்கள், தமிழக மக்கள், புரட்சித் தலைவி அவர்களுக்குத் தந்தார்கள். பிறகு 1996-லிருந்து 2001 வரை, 5 ஆண்டு காலம் தொடர்ச்சியான சோதனைகளை, அவமானங்களை, தாங்கொணாத அவமானங்களை புரட்சித் தலைவி அவர்களுக்குக் கடந்த ஆட்சியாளர்கள் தந்திருக்கிறார்கள். ஆகவே, வரும் காலம் முழுவதும், அது 50 ஆண்டு காலமாக இருந்தாலும் சரி, நீங்கள் கொடுத்த தொல்லைகளுக்கும், துயரங்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களுக்குப் பொதுமக்கள், அவர்கள் இருக்கின்றவரை, புரட்சித் தலைவியினுடைய பொற்கால ஆட்சிதான் இனிமேல் தமிழ்நாட்டில் நடைபெறும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, உங்களுக்கு இனிமேல் அரசியல் வாழ்வு என்பதே உங்கள் வாழ்நாளிலே கிடையாது, கிடையாது என்று சொல்லி, பாவேந்தன் சொன்னானே,

'வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்
சூழ்ச்சிதனை, வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத்
தொகையாக எதிர்நிறுத்தித் தூள் தூளாக்கும்
காழ்ச்சிந்தை, மரச்செயல்கள் மிகவும் வேண்டும்'

என்று. அதைப்போல அந்தச் செயல் திட்டத்திலே புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி, வாழ்வாங்கு வாழ்ந்து, தமிழக மக்களை வழி நடத்த வேண்டுமென்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. கந்தசாமி.

***திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை சட்டமன்ற உறுப்பினராகவும், 1996 ஆம் ஆண்டு ராசிபுரம் தொகுதி நாடாளுமன்ற

உறுப்பினராகவும், இந்த முறை குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் இருக்க வாய்ப்பளித்த மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முறை குன்னூர் தொகுதியில் மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிட்ட என்னை வெற்றிபெறச் செய்த குன்னூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தலையாய பிரச்சினையாக இருப்பது பச்சைத் தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பது. இது தலையாய பிரச்சினை மட்டுமல்ல; நீலகிரி மாவட்டத்தின் ஜீவாதாரப் பிரச்சினை. *15* ரூபாய்க்கு விற்ற தேயிலை இன்றையதினம் *5* ரூபாய்க்குக் குறைந்துவிட்டது. தேயிலை விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு வருடங்களாக நியாயமான விலையைப் பெற்றுத்தர வேண்டுமென்று தேயிலை விவசாயிகள் போராடி வருகிறார்கள். சென்ற ஆண்டு மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். ஊட்டியிலே மலர்க் கண்காட்சிகூட நடைபெறவில்லை. போக்குவரத்து முழுமையாகத் தடைப்பட்டது. ஒரு வாகனம்கூட ஊட்டிக்குச் செல்ல முடியவில்லை. அதற்காக முன்னாள் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களையும், என்னையும், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் அந்தப் போராட்டப் பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே, எங்களது தலைவராக, இன்றைக்கு சட்டமன்ற தமிழ் மாநில காங்கிரஸ் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய கார் செல்ல முடியவில்லை. அவர்கள் *7* கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று தேயிலை விவசாயிகளைச் சந்தித்தார்கள். அப்படிச் சந்தித்தபொழுது, 'அவர்களது நியாயமான பிரச்சினையை நான் முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி உங்களுக்குத் தீர்வு அளிக்க நான் முயற்சிகள் மேற்கொள்வேன்' என்று சொன்னார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதற்கு எந்தத் தீர்வும் ஏற்படவில்லை. இன்றைக்கு நீலகிரி மாவட்டத்திலே இருக்கின்ற மூன்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நம்பி, வாக்குகளைக் கொடுத்திருக்கின்றோம். நாங்கள் வெற்றி பெற்றால் நிச்சயமாக தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்வோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கின்றோம். காவல் நிலையங்களுக்குச் சென்றோம் என்று சொன்னால் அங்கே இன்ஸ்பெக்டரின் தலைக்கு மேலே ஒரு board இருக்கிறது. 'உன்னால் முடியாவிட்டால் வேறு யாரால்



முடியும்' என்று அதிலே எழுதி வைத்திருக்கின்றார்கள். அதேபோல்தான் இன்றைக்கு நமது முதலமைச்சர் நியாயமான விலையைப் பெற்றுத் தராவிட்டால் வேறு யாராலும் பெற்றுத்தர முடியாது என்ற நம்பிக்கையிலே நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்திருக்கின்றோம். இந்தத் தேயிலைப் பிரச்சினைக்காகக் கடந்த காலத்திலே தூதுக் குழுவினர் டெல்லிக்குச் சென்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சரையும், மற்ற அமைச்சர்களையும் சந்தித்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று கோரியிருக்கின்றார்கள். ஆனால், இந்தப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காண முடியவில்லை. மத்திய வர்த்தகத் துறை அமைச்சரின்மீது தேயிலை விவசாயிகளுக்கு நம்பிக்கையில்லை. காரணம் என்ன என்று சொன்னால், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தேயிலை இறக்குமதி கம்பெனி வைத்திருப்பதாகவும், அதன் காரணமாக தேயிலை இறக்குமதி செய்கின்றார்கள் என்றும் கூறப்படுகிறது. நமது நாட்டில் போதுமான தேயிலை விளைவிக்கப்படுகின்றது. சுய தேவையைப் பூர்த்தி செய்ய முடிகின்றது. இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால், இந்தோனேஷியாவிலிருந்தும், இலங்கையி லிருந்தும் தேயிலையை இறக்குமதி செய்கிறார்கள். இந்த இறக்குமதி செய்கின்ற தேயிலையை நிறுத்திவிட்டால் நிச்சயமாக தேயிலை விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

பிற்பகல் *12—10*

அதுமட்டுமல்லாமல், இராணுவத்திற்கு ஏராளமான தேயிலை தேவைப்படுகின்றது. நமது அம்மா அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி, இராணுவத்திற்குத் தேவையான தேயிலையைக் கொடுத்தால் நியாயமான விலை கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், சென்ற வருடம் தேயிலை விவசாயிகள் போராடியபோது தேயிலை விவசாயிகள்மீது ஏராளமான வழக்குகளைப் போட்டிருக்கின்றார்கள். அது முழுமையான பொய் வழக்கு. போராடிய இளைஞர்களின் மீது தடியடி நடத்தி, அரை நிர்வாணமாக ஆக்கி, அந்த இளைஞர்களைச் சிறையிலே அடைத்தார்கள்.

அதுமட்டுமல்லாமல், பேரவைத் தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலே படுகர் இனம் இருக்கிறது. அந்த படுகா இனப் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள். அன்பானவர்கள். அமைதியானவர்கள். வாக்குகள் கேட்டுச் சென்றபோது நாங்கள் கார்களைக் கீழே நிறுத்திவிட்டு, படிக்கட்டு வழியாகத்தான் அரை பர்லாங் தூரம், ஒரு பர்லாங் தூரம் என்று நடந்து சென்று வாக்குகளைச்

சட்டப் பேரவைத் தொகுதிக்கு வந்தபோது என்னுடைய தொகுதியைச் சார்ந்த மக்கள் சுமார் 8 இடங்களிலே புரட்சித் தலைவி அவர்களை வழிமறித்து, பேச வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டபோது இந்த இளைஞன் சட்டமன்றத்திற்கு வர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, எந்தவித முகச் சுளிப்புமில்லாமல் அன்புப் புன்னகையோடு அந்த மக்களிடத்தில் எனக்கு வாக்குக் கேட்டுப் பேசிய புரட்சித் தலைவி அவர்களுக்கும், எம்முடைய தமிழினப் போராளி, மக்கள் காவலர், டாக்டர் ஐயா அவர்களுக்கும் துரோகம் செய்த, 30 ஆண்டு காலம் இந்த அவையிலே அலங்கரித்த ஒருவரை வீழ்த்தி வெற்றி வாகை சூடிக்காட்டிய பெருமைக்குச் சொந்தக்காரர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி தமிழகத்திலே பசுமைப் புரட்சி வர வேண்டும் என்பதற்காகத் தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரே நாளில் இரண்டு லட்சம் மரக்கன்றுகளை நட்டு சாதனை படைத்திருக்கின்ற சாதனை நாயகன், பசுமை நாயகன், இந்த இளைஞர் பட்டாளத்தை வழிநடத்திச் செல்கிற எங்களுடைய பாசத்திற்குரிய அண்ணன் டாக்டர் அன்புமணி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய இந்தக் கன்னிப் பேச்சுக்கு மாண்புமிகு சபாநாயகர் அவர்களிடத்திலே அழைத்துச் சென்று, அறிமுகப்படுத்தி, பேசுவதற்கு வாய்ப்புப் பெற்றுத் தந்த எங்கள் கட்சியினுடைய தலைவர், தியாகச் செம்மல் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த என்னுடைய பண்ருட்டி சட்டப் பேரவைத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குப் பேரியக்கத்தினுடைய செயல் வீரர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியினை முதலில் காணிக்கையாக்குகிறேன்.

பிற்பகல் 12—20

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கின்ற ஒவ்வொரு கருத்தும் இந்த இளைஞன் இன்றைக்கு தன் மனதிலே ஆழப் பதிய வைக்கின்ற கருத்தாக அமைந்திருக்கின்றது. அந்தச் செய்திகளை எல்லாம் இன்றைக்கு நான் சார்ந்திருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

100 பேர் வசிக்கின்ற இடத்திற்குக் குடிநீர் ஆதாரம் செய்து தரப்படும் என்று குறிப்பிட்டதையும், கிராமப்புற மாணவர்களுக்குத் தொழில் கல்வியிலே அளித்துவந்த 15 சதவிகித இடஒதுக்கீட்டை 25 சதவிகிதமாக உயர்த்தியதையும், 11-வது வகுப்புக்கும், 12-வது வகுப்புக்கும் செல்கின்ற





ஆதிதிராவிட மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குவதையும் நான் வரவேற்கிறேன். அதேபோல், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும், கருணையுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சைக்கிள் வழங்க வேண்டுமென்ற ஓர் அன்பான, பணிவான வேண்டுகோளையும் இந்த நேரத்திலே வைக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் சந்திக்கின்றபோதே கூறினேன். இந்த இளைஞனுக்கு 5 மணித்துளிகள் அதிகமாகத் தாருங்கள் என்று கூறினேன். இவ்வாறு நான் அவரைக் கேட்பதற்குக் காரணம், 18 வயது நிரம்பி பள்ளிப் பருவத்திலே இருந்த நான் ஒரு காலத்தில் ஒரு பதிப்பகத்தின் மூலமாக மாண்புமிகு சபாநாயகர் அவர்களை 10, 11 ஆண்டுகளுக்கு முன்பாகச் சந்திக்கச் சென்றபோது அவருடைய வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்து ஒரு புத்தகம் வெளியிட வேண்டுமென்று எண்ணிய எண்ணத்தின் காரணமாக அவரைச் சந்திக்கச் சென்றபோது அவர்மீது இருந்த பற்று, அவர் கொண்டிருந்த அந்தத் தமிழ் ஆற்றலையெல்லாம் கண்டு பள்ளிப் பருவத்திலே இருந்த மாணவனாகிய நான் அன்றைக்கு அவர்பால் ஈர்க்கப்பட்டேன்.

இன்றையதினம் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பற்றிப் பல்வேறு விவாதங்களும், விமர்சனங்களும் வெளியிலே நடந்தேறினாலும்கூட இந்த அவையிலே, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய கேள்விக்கணைகளுக்கெல்லாம் எந்தவித குறிப்புகளும் இல்லாமல், எந்தவித அரசுச் செயலாளர்களுடைய ஆவணக் குறிப்புகளும் இல்லாமல் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்து வைக்கின்ற கேள்விகளுக்கு, அவர்கள் தங்களுடைய முகத்தினை திருப்பிக் கொள்கின்ற வகையில் ஆணித்தரமாக எடுத்து வைக்கின்ற கருத்துகளைக் காண்கிறபோது உண்மையிலேயே இந்த இளைஞன் பூரிப்பு அடைகிறேன்; மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்துவதற்கு வயதில்லை தாயே, உங்களை வணங்குகின்றேன். காரணம், நான் கேள்விப்பட்ட அளவில், உங்களைப்பற்றி அவதூறுகளை அள்ளி வீசிய வாய்கள் எல்லாம் இன்றைக்கு வாயடைத்து நிற்கின்றன.

புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஐந்து ஆண்டு காலத்தில் இவ்வளவு பக்குவத்துடனும், இவ்வளவு அரசியல் முதிர்வுடனும், ஆட்சியாளர்கள் எப்படி ஆட்சி நடத்த வேண்டும் என்பதற்கு

மகிழ்ச்சிக் கடலிலே மிதக்கின்ற கட்சியினுடைய உறுப்பினராக இன்றையதினம் நான் இங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அருமை அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒரு குறிப்பைக் கூறினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே பிரிட்டிஷ் ஆட்சியாளரிடத்திலே சபாநாயகர் தேர்வு செய்யப்பட்டவுடன் அனைவரும் சேர்ந்து கையைப் பிடித்து இழுத்து வந்து அமர வைப்பார்கள் என்ற ஒரு கருத்தைக் கூறி, அதை நிறைவு செய்யாமல் முடித்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து அளித்த விளக்கம், 'அன்றையதினம் அவருக்கு உயிருக்குப் பாதுகாப்பில்லை, அவர் தலை துண்டிக்கப்படும், மன்னருக்கும், மக்களுக்கும் இடையில் இருக்கின்ற இடைக் கருத்துகளை சபாநாயகர் சொல்ல வேண்டிய காலகட்டம் அது; ஆதலால், அந்த மன்னருக்குக் கோபம் ஏற்படும் என்று சொன்னால், அவர் தலை துண்டிக்கப்படும்' என்று சொன்னதன் அடிப்படையிலே அந்த விளக்கங்களையெல்லாம் அள்ளி வீசி அருமையான கருத்துகளை நகைச்சுவையோடு கூறி இந்த அவையை நடத்திச் செல்கின்ற பாங்கு கண்டு உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1996-ல் நடந்த சட்டமன்றத் தேர்தலிலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாநில இளைஞர் அணிச் செயலாளராக இருந்த எனக்கு சென்னை திருவொற்றியூரிலே நிற்க எங்கள் மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் வாய்ப்புத் தந்தார். தேர்தலிலே போட்டியிட்டேன். தோல்வி கண்டேன். துவண்டு போனேன். அன்றையதினம் ஐயா அவர்கள் என்னை அழைத்து, 'வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன, பொறுமையாக இரு' என்று ஆணையிட்டார். ஆனால், இன்றைக்கு அந்தத் தோல்விக்கு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதற்குக் காரணம் இந்த அவையிலே நான் பேசுகின்றபோதும், சந்திக்கின்றபோதும், என் எதிர் வரிசையிலே முக மலர்ச்சியோடு காட்சியளிக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி இந்தக் காலகட்டத்திலே முதலமைச்சராக இருப்பதுதான். அவர் இருக்கின்ற காலகட்டத்திலே நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இங்கே உரையாற்றுவதற்கு வாய்ப்புத் தந்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12—25*

நேரம் கருதி, அடுத்த கூட்டங்களிலே அருமையாகக் கருத்துகளைப் பேசவேண்டுமென்ற ஆவல் இருப்பினும், எனக்கு முன்பாக 30 ஆண்டு



222388

காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் என்னுடைய தொகுதிக்கு இதுவரையிலும் ஒரு தொழிற் கல்லூரியோ, ஒரு கல்லூரியோ, ஒரு பொறியியல் கல்லூரியோ, எதையுமே பெற்றுத் தரவில்லை. பக்கத்துத் தொகுதி என்று சொல்லக்கூடிய சிதம்பரத்திலே இன்றைக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. விருத்தாசலத்திலே அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. கடலூரிலே அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. நெல்லிக்குப்பத்திலே பாரி உரக் கம்பெனி இருக்கிறது. சர்க்கரைத் தொழிற்சாலை இருக்கிறது. ஆனால், அரசியலிலே சாணக்கியன் என்றும், புரட்சித் தலைவரை ஏமாற்றியும், புரட்சித் தலைவிக்குத் துரோகம் செய்தும், டாக்டர் ஐயா அவர்களிடத்திலே பிழைக்க வந்து, 'கட்சியே எனது' என்று சொந்தம் கொண்டாடிய முன்னாள் உறுப்பினர் ஒருவர், மக்களால் போற்றப்படக்கூடிய அளவுக்கு, மக்கள் மனதிலே நிற்கின்ற அளவுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் வாரி, வாரி வழங்கிய போதும் அந்தத் தொகுதிக்கு எதையும் பெற்றுத் தராத நிலையில், அந்தச் சட்டமன்றத் தொகுதியிலிருந்து உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், என்னுடைய தொகுதிக்கு, தொகுதி மக்களுக்கு நன்றியைச் செலுத்துகிற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களை என் தொகுதிக்குச் செய்து தர வேண்டும்.

என்னுடைய மக்கள் என்மீது நம்பிக்கை வைத்திருந்ததால், பற்று வைத்திருந்ததால், எத்தனை அலைகள் வந்தாலும் சரி, இந்த இளைஞனுக்கு வாய்ப்புத் தருவோம் என்று தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் குறைந்தபட்சம் ஒரு பெண்கள் கல்லூரியையாவது எங்கள் தொகுதிக்குக் கொண்டு வருவதற்கு ஆணையிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நடந்த இந்தத் தேர்தலிலே என்னுடைய தொகுதியிலே கட்சிக்காக, என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட மணி என்ற இளைஞர் தேர்தல் முடியும் தருவாயில் எதிரணியிலே போட்டியிட்ட திமுகவுடைய கருங்காலிகளால்-மாம்பழச் சின்னத்திற்கு வாக்களித்த காரணத்தினால்-அவர் கைகள் துண்டிக்கப்பட்டு, இன்றைக்கு கடலூரிலுள்ள அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்க முடியவில்லை என்ற பிறகு, கடலூரிலுள்ள கண்ணன் என்ற தனியார் மருத்துவமனையில் சேர்த்து ரூ. 1-1/2 இலட்சத்திற்கும் மேலாகச் செலவு செய்தும் இன்றைக்கும் அவர் பாதிப்பான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால், இங்கே ஒருவர் மயக்கமுற்றார். அந்த மயக்கமுற்றவருக்காக கூச்சல், வெளிநடப்பு. எங்கள் கட்சிக்காரன் மாம்பழச் சின்னத்திற்கு வாக்களித்தான்

[திரு. தி. வேல்முருகன்] [2001 மே 30

என்பதற்காகத் தன்னுடைய கட்டைப் பெருவிரலைத் துண்டித்து இருக்கிற கொடுமையான நிலைக்கு ஆளாகியிருக்கிறான். இதற்கு நாங்கள் எங்கே போய் அழுவது? எங்கே போய் வெளிநடப்புச் செய்வது? எங்களுடைய குறைகளை நாங்கள் யாரிடத்திலே சொல்வது? வேதனைப்படுகிறேன்.

இன்னும் ஒன்று. எங்களுக்கு வாக்களித்த ஒரு சகோதரன் இன்றைக்கு பட்டப்பகலிலே வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அவன் மட்டும் வெட்டிக் கொலை செய்யப்படவில்லை. அவரது துணைவியார் அம்சவல்லி என்பவரையும், இரவு நேரத்திலே காலிக் கூட்டம் பதுங்கியிருந்து, வெட்டி வீழ்த்தியிருக்கிறது. 26-5-2001 அன்று. ஆனால், இவற்றையெல்லாம் வெளிக்கொணராத எதிர்க்கட்சி நண்பர்கள் இன்றைக்கு அரசு, தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டுமென்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டதை மையமாக வைத்து நடவடிக்கை எடுக்கின்றபோது, துள்ளிக் குதிக்கிறார்கள். இன்றைக்கு இத்தனை படுபாதகச் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

முத்தாண்டிக்குப்பம் என்ற காவல் நிலையத்தில் பாட்டாளி மக்கள் கட்சிக்காக வேலை செய்த சக்திவேல் என்ற இளைஞனின் தலையை இரண்டாகப் பிளந்து, வெட்டி, அரசு மருத்துவமனையில் 11-வது வார்டிலே இன்றைக்கு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். நான் சென்று அவனைப் பார்க்கிறபோது, அவனுடைய தாய் கதறி அழுகிறார், கண்ணீர்மல்க நான் இங்கே வந்திருக்கிறேன். 'Mental' என்று சொல்லும் மனவளர்ச்சி குன்றியவராக அவர் மாறிவிட்டார். இவ்வளவு அடாவடிகளுக்கும், இவ்வளவு அடக்குமுறைகளுக்கும் இடையிலே புரட்சித் தலைவி அவர்களுடைய தேர்தல் சுற்றுப் பயணத்தின் காரணமாகவும், நம்முடைய தமிழினப் போராளி மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களின் சுற்றுப் பயணத்தின் காரணமாகவும், பசுமை நாயகன் அவர்களுடைய சைக்கிள் பேரணியில் வந்து கலந்து கொண்டு மக்களைச் சந்தித்ததன் காரணத்தினாலும், பல்வேறு அடக்குமுறைகளுக்கும் அப்பாற்பட்டு, ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தி இந்த இளைஞனை வெற்றி பெறச் செய்யக்கூடாது என்ற ஒடுக்குமுறைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, இன்றைக்கு வெற்றியைப் பெற்று, இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு மீண்டும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, இவ்வளவு பிரச்சினைகளுக்கு மத்தியில் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற இந்த இளைஞனுக்கு இந்த அவையிலே குறிப்பிடும்படியாக ஒத்த வயதுடையவர்களாக நாங்கள் 2, 3 பேர் இருப்போம். ஆனால், எங்களைப்



2001 மே 30] [திரு. தி. வேல்முருகன்]

போன்ற இளைய தலைமுறை வாதாடுவதற்கும், பேசுவதற்கும் நீங்கள் கொஞ்சம் அதிகபட்ச நேரங்களை வரும் காலகட்டங்களில் ஒதுக்கித் தரவேண்டும் என்று மாண்புமிகு சபாநாயகர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும் நன்றியுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியிலே மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கக்கூடியது, முந்திரிக்கொட்டை பிரச்சினை. நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல கல்லூரிகள் இல்லை. தொழிற்சாலைகள் இல்லை. நாங்கள் எல்லாம் முந்திரிக் காடுகளில் விளைகின்ற முந்திரிக் கொட்டைகளைப் பொறுக்கித்தான் எங்களுடைய வயிற்றுப் பிழைப்பை நடத்தக்கூடிய நிலையில் இருக்கிறோம். அந்த முந்திரிக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் 1991-லே ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோது—அம்மா அவர்களுடைய ஆட்சியிலே—ஒரு மூட்டை, 80 கிலோ அன்றைக்கு 5000 முதல் 6000 ரூபாய் வரை விற்றது. ஆனால், தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதியின் ஆட்சியிலே இதற்கு விலை என்ன தெரியுமா? வெறும் 1500 ரூபாய். இந்த 1500 ரூபாயை வைத்துக்கொண்டு எங்கே செல்வது? எங்களுடைய குடும்பங்கள் எல்லாம் பட்டினியாலும், பசியினாலும் வாடிக்கொண்டிருக்கின்றன. எங்கள் மக்களுடைய தலையாய பிரச்சினையான முந்திரிக் கொட்டை பிரச்சினைக்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் சரியான விலை நிர்ணயம்—குறைந்தபட்சம் 80 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு 5000 ரூபாய் நிர்ணயம்—செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது)* இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—30*

எங்களுடைய பண்ருட்டி நகரத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையிலே 5 டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு டாக்டர்கள்தான் இருக்கிறார்கள். அதிலும் இங்கே நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், பெண்ணாக இருந்து முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால் நான் இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அங்கே இருக்கக்கூடிய மருத்துவமனைக்கு பிரசவத்திற்குத் தாய்மார்கள் சென்றால் பிரசவம் பார்க்க முடிவதில்லை. அவர்களை கடலூருக்கும், பாண்டிச்சேரிக்கும் இழுத்தடிக்கிறார்கள். போகின்ற வழியிலேயே குழந்தைகள் இறக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அங்கே இருந்த மயக்க மருந்து செலுத்துகின்ற டாக்டரை, கடந்த ஆட்சியாளர்கள் கடலூர் சிறைச்சாலைக்கு மாற்றம்

[திரு. தி. வேல்முருகன்] [2001 மே 30

செய்திருக்கிறார்கள். அவரை மீண்டும் இங்கே கொண்டு வந்து, பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு மயக்க மருந்து செலுத்தி அங்கேயே பிரசவம் பார்ப்பதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டு நான் முதலாவதாக வைக்கின்ற இந்தக் கோரிக்கையைக் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

நான் முன்பு தெரிவித்த, படுகொலை செய்யப்பட்ட அந்த நபருக்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். ஒரு குழந்தையின் பெயர் செந்தமிழ்ச் செல்வி, வயது 13. மற்றொரு குழந்தையின் பெயர் செந்தமிழ் அரசி, வயது 15. அவர்கள் அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவர் ஒருவரிடத்திலே பாதுகாப்பாக விட்டுவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் குடும்பத்திற்கு தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு—அந்த இரண்டு பச்சிளம் பெண் குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, தாங்கள் அவர்களுக்கு—ஏதாவது ஒரு நிதி உதவியை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் மன்றாடி என்னுடைய முதல் சுற்று சட்டமன்ற உரையை நிறைவு செய்து விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு, பெருவாரியான அளவில் வாக்களித்து, இங்கே பேசுவதற்கு, அனுப்பி வைத்த எங்களுடைய அன்புத் தலைவி, அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், நமது முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், முன்னாள் மத்திய அமைச்சர், எனக்கு மட்டுமல்லாமல் குன்னூர் தொகுதி, கூடலூர் தொகுதி மற்றும் கோவை மேற்கு தொகுதி ஆகிய மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அதிக அளவில் வாக்கு சேகரித்துத் தந்த ஆர். பிரபு அவர்களுக்கும், கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. எஸ்.எம். கிருஷ்ணா அவர்களுக்கும், கர்நாடக விவசாயத் துறை அமைச்சர் ஜெயச்சந்திரா அவர்களுக்கும், உதகை தொகுதி மக்கள் அனைவருக்கும், மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணித் தலைவர்கள், செயல் வீரர்கள், தொண்டர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய சில கருத்துகளை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2001 மே 30] [திரு. எச்.எம். ராஜு]

ஆட்சிக்கு வந்த சில நாட்களிலேயே ஓர் உன்னதமான ஆளுநர் உரையைத் தந்த புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும்கூட இந்த ஆளுநர் உரைக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். தென்கிழக்கு ஆசியாவிலேயே ஒரேயொரு போட்டோ பிலிம் தொழிற்சாலையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் உதகை இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையை சீரமைக்கும் பணி குறித்தும், நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் விலை நிர்ணயம் செய்யக் கோரி நடத்திய போராட்டத்தினால் பாதிப்புக்கு உள்ளான சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உரிய தீர்வு காண்பது குறித்தும் ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும் என்ற திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு நன்றாகத் தெரியும். நமது நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகளின் பிரச்சினையை மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாக நான் கருதுகின்றேன். 1999 ஆம் வருடத்தின் நிலவரப்படி நம் திருநாட்டில் 805 மில்லியன் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்கிறோம். ஏற்றுமதியாக 190 மில்லியன் கிலோகிராம் அனுப்பி வைக்கிறோம். மீதம் உள்ள 615 மில்லியன் கிலோவை நமது நாட்டில் நாம் உபயோகிக்கிறோம். தமிழ்நாட்டில் மட்டும் 128 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தியையும், நீலகிரி மாவட்டத்தில் 88 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தியையும் செய்து கொண்டிருக்கிறோம். சுமார் 35 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு கிலோ தேயிலை வெளியே 120 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்கிறபோது, அந்தத் தேயிலையை உற்பத்தி செய்யும் 65 ஆயிரம் சிறு குறு விவசாயிகளுக்கு - ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் சொன்னதுபோல - அவர்களுக்கு 5 ரூபாய் கிடைக்கும்பட்சத்தில் 4 கிலோ தேயிலை உற்பத்தி செய்தால் ஒரு கிலோ தேயிலைத் தூள் கிடைக்கும் என்ற அளவிலே நாங்கள் கேட்ட 15 ரூபாய் என்ற வீதத்தில் 60 ரூபாயும், ஆக இலாபம் எல்லாம் சேர்த்து 70 ரூபாய் என்ற அந்த கட்டுக்குள் அடங்கும். அப்படி இருக்கும்போது 120 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை விற்கும் அந்தத் தேயிலையில் கிடைக்கும் இலாபம் யாருக்குப் போகிறது என்பதைச் சற்று சிந்திக்க வேண்டும். ஆக, விலை நிர்ணயம் செய்தால் அரசுக்கு வருடத்திற்குச் சுமார் 100 கோடி அளவிலே மட்டும்

[திரு. எச்.எம். ராஜு] [2001 மே 30

செலவாகும். ஆனால், foreign exchange என்ற வகையிலே அந்நியச் செலாவணி என்ற வகையிலே 2,000 கோடி ரூபாயை வருமானமாக நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இதைச் சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்ளாமல் மிகமிக முக்கியமான பிரச்சினையாக ஏற்று, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வதல்லாமல் நமது அரசும் இந்த 65,000 சிறு குறு விவசாயிகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்ற வகையிலே சிந்தித்து, குறைந்தபட்ச நிர்ணய விலையான ரூ. 15-ஐக் கண்டிப்பாக வாங்கித்தர வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12—35

மேலும், குன்னூரிலே நடைபெறும் auction-லே State Trading Corporation நிறுவனம் பங்கேற்றுக்கொண்டால் கண்டிப்பாக அந்த விலை வரும். Multi-Nationals என்ற வகையிலே பல அந்நிய நாட்டு மக்கள் அவர்களுடைய agent-களை அனுப்பி, மிகவும் குறைந்த விலை அளவில் அங்கே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வழி விடாமல் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

கலப்படம் செய்யும் ஒவ்வொரு தொழிற்சாலைமீதும் மிகவும் கண்டிப்பான வகையிலே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் சுமார் 23 பேர் கொண்ட ஒரு குழுவை அனுப்பி இதனுடைய நிலைமை என்ன என்பதை எல்லாம் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, இத்தகைய குழு ஒன்றை கண்டிப்பாக அமைத்துத் தர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

10-4-2000 அன்று சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் அறப்போராட்டத்தின் மூலம் ஊர்வலம் வந்து கொண்டிருந்தோம். 15-5-2000 அன்று சுமார் 30,000 பேர் மேல்சட்டை இல்லாமல் அறப் போராட்டம் நடத்தினோம். அன்றையதினம் 59 பேர் கைது செய்யப் பட்டார்கள். ஜூலை மாதத்தில் தாய்மார்கள் முதன்முறையாக ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த தாய்மார்கள் 750 பேரும், 2,000 விவசாயிகளும் என்னுடன் சேர்ந்து, என்னுடைய தலைமையிலே போராடினார்கள். நாங்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு 16 நாட்களுக்கு சிறையில் வைக்கப் பட்டிருந்ததை எல்லாம் நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தத் தாய்மார்கள் எல்லோர் மீதும் சுமார் 20 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.



2001 மே 30] [திரு. எச்.எம். ராஜு]

அத்தனையும் உண்மைக்குப் புறம்பான வழக்குகள். தயவுசெய்து மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, தாங்கள் பதில் சொல்லும்போது—நான் ஏற்கெனவே இதுகுறித்து 2 மனுக்களைக் கொடுத்திருக்கிறேன்—எல்லா வழக்குகளையும் வாபஸ் பெற்றுத்தர வேண்டுமென்று மாவட்டத்தினுடைய மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, மீக்கேரி என்ற ஊரிலே-மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு போட்டோக்களை எல்லாம் காட்டினேன்—அன்றையதினம் நடந்த அராஜகம், காவல் துறையினர் செய்த கொடுமை, அவர்களைத் துன்புறுத்தியது, அடித்தது குறித்த எல்லா போட்டோக்களையும் காட்டினேன். மிகவும் வருத்தப்பட்டார்கள். அந்த இளைஞர்களையெல்லாம் கொடுமை செய்ததற்காக மனித நேய ஆணையம்—Human Rights Commission—மூலமாக நாங்கள் ஒரு வழக்குத் தொடர்ந்தோம். நீதிபதி இரத்தினசாமி அவர்கள் ரூ. 33 இலட்சம் நஷ்டஈடு கொடுத்தார்கள். அந்த நஷ்டஈட்டில் கடந்த ஆட்சி ஒரு பைசாகூட தரவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கண்டிப்பாக ஒரு மாதத்திற்குள்ளாக, கஷ்டப்பட்ட அந்த இளைஞர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையான ரூ.33 இலட்சத்தை வழங்குமாறு இரண்டாவது கோரிக்கையாக நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், தேயிலை இறக்குமதி செய்வதை முழுமையாக இரத்து செய்யவேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். இறக்குமதி கண்டிப்பாகத் தேவையென்றால் W.T.O. மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கும் 150 சதவிகித இறக்குமதி வரியை நாம் அங்கே போடவேண்டும். S.T.C.-க்கு auction-க்கு வர வேண்டும். பாதுகாப்புத் துறைக்கு 4 மில்லியன் அளவு தேயிலை ஒரு வருடத்திற்குத் தேவைப்படுகிறது. அவர்களுக்குக் கொடுக்கலாம். Ration கடைகளிலே அந்தத் தேயிலைத் தூளை விற்கலாம். இரயில்வேக்களுக்குக் கொடுத்து தேயிலையை விற்பதன் மூலமாக அந்த 15 ரூபாயை நாம் கண்டிப்பாகப் பெற்றே தீரவேண்டுமென்ற நிலையில் இருக்கிறோம். அதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்துதர வேண்டும். W.T.O. மூலமாக 1429 பொருட்களை நாம் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். 2000 வருடம் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி 715 பொருட்களும், இந்த வருடம் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி 714 பொருள்களும், ஆக மொத்தம் 1429 பொருள்களை இறக்குமதி செய்வதனால்தான் விவசாயிகளுக்கு நம் நாட்டில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால், தயவுசெய்து இறக்குமதியை இரத்து செய்து நியாயமான

விலையை நாம் பெறத் தகுதி பெற்றிருக்கிறோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிஸ்ரா Committee என்று ஒரு Committee-யை கடந்த ஆட்சிக் காலத்தில் அமைத்தார்கள். 4 பேர் நீலகிரி மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அவர்களுடைய அறிக்கையை 30-6-2000 அன்று அறிவித்தார்கள். 6 மாத காலமாகியும் அந்த மிஸ்ரா Committee அறிக்கை மாயமாக, மாய தேசமாக இருக்கிறது. அது வெளிவரமாட்டேன் என்கிறது. அதைக் கண்டிப்பாக நீங்கள் வெளியே வரச்செய்ய வேண்டும். ஏனெனில், நாங்கள் சொன்ன கோரிக்கைகள் எல்லாம் அதிலே இருக்கின்றன. அந்தக் கோரிக்கையிலே 15 ரூபாய் அளவிலே சிறு குறு விவசாயிகளான 65 ஆயிரம் பேருக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. தயவுசெய்து அந்த மிஸ்ரா Committee-யினுடைய அறிக்கையைப்பற்றி உடனடியாக நமது புரட்சித் தலைவி அவர்கள், பதில் சொல்கிறபோது, அறிவிப்பு கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். அந்த அறிவிப்பு என்ன என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—40

அடுத்தபடியாக, H.P.F. தென்கிழக்கு ஆசியாவிலேயே இருக்கிற ஓரேயொரு பிலிம் தொழிற்சாலை. கர்மவீரர் காமராஜர் அவர்கள் அடிக்கல் நாட்டி, அன்னை இந்திரா காந்தி அவர்கள் திறந்து வைத்த நிறுவனம். 4,100 குடும்பங்கள் அதனால் வாழ்ந்து கொண்டிருந்தன. இப்போது மிகவும் மோசமான ஒரு நிலையிலே இருக்கிறது. தற்போது 2,100 குடும்பங்கள் மட்டும் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அதைச் சீரமைக்கின்ற பணியில் மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்து, மேலும் நிதியுதவி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இழுவா, தீயா ஜாதியினருக்கு உலகம் முழுவதும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்தவர்கள் என்ற அந்தச் சான்றிதழ் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்த ஜாதியினருக்கு அந்தச் சான்றிதழ் கிடைக்கவில்லை. தலைவர் அவர்களே, உடனடியாக இழுவா, தீயா ஜாதியினருக்கு அந்தச் சான்றிதழ் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடப்பமந்து கால்வாய், படகு இல்லம், குடிநீர்ப் பிரச்சினைகள், பேருந்து பிரச்சினைகள், மருத்துவமனைப் பிரச்சினைகள் போன்றவை



எல்லாம் இருந்தாலும்கூட மக்கள் எதிர்பார்ப்பு 100 சதவிகிதமாக இருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்தில் 100 சதவிகிதமாக எதிர்பார்ப்புகள் எல்லாம் இருப்பதனால் புரட்சித் தலைவி அவர்கள் மக்களுடைய எதிர்பார்ப்பு என்னவாக இருந்தாலும் அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவைப்பற்றி ஒரேயொரு நிமிடம் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது ஆட்சி, புரட்சித் தலைவியின் ஆட்சி வந்த பிறகு, நீலகிரி மாவட்டத்தில் சுமார் 200 பேருக்கு, அதிக அளவிலே promotion என்ற வகையிலும், குமாஸ்தாக்கள் என்ற வகையிலும் போட்டுத் தந்திருக்கிறார்கள். தயவுசெய்து அவர்களுக்கு எந்த Postings போட்டிருந்தாலும், 200 Postings-ஐப் போட்டிருந்தாலும் அடுத்த தடவை புரட்சித் தலைவி அவர்கள் பேசும்போது அந்த எல்லா Posting-களையும் தயவுசெய்து வாபஸ் பெறவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர் என்று சொன்னாலே அதிலே இரண்டு பிரச்சினைகள் மட்டும் இருக்கின்றன. அம்மக்கல், குந்தா பகுதிகளில் உள்ள அந்தக் குடிநீர்த் திட்டமும், கீழ்குந்தா, ஒனிக்கண்டி, அண்ணா நகர் பகுதிக்கும், மேற்கு வராஉறப் பள்ளத்திலிருந்து கின்னக்கொரைக்கும், ஆலன்நகர், கீழ்ஒடயரட்டி, கரியல்வளை, இந்திரா நகர் போன்ற இடங்களுக்கும் Parsens Valley-யிலிருந்து வரும் நீர் தினமும் உதகை நகருக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த நல்ல உள்ளங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், வாழ்க பாரதம்; வளர்க பாரதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்.

**திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அல்லிப்பூ சொற்களால் ஆராதிக்கப்படும் அழகு மணிக்கோவிலும், குங்குமச் சாற்றினிலே குழைத்தெடுத்த தங்க நிற விக்கிரகமான தமிழகம் என்னும் குழந்தையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா என்ற தாயிடத்தில் ஒப்படைத்திருக்கின்றார்கள். ஆகவே சாதிப்பதற்கும், வயதிற்கும் சம்பந்தமில்லை. ஏனெனில் பாரதி தன் சாதனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த ஆண்டு 39 வயது. அதேபோல் அலெக்சாண்டர் இனி வெல்வதற்கு இடமில்லை என்று வியந்தபோது

[திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்][2001 மே 30

அவருக்கு வயது 32. அதேபோல் பகத்சிங் சரித்திரத்திற்காக இரத்ததானம் செய்கின்றபோது அவருக்கு வயது 23. அதேபோல் மாஜினுக்கு எதையும் சாதிப்பேன் என்கின்ற புரட்சி எண்ணம் எழுந்தபோது அவருக்கு வயது 10. எனவே, அதைப்போல சாதாரணத் தொண்டனாக இருந்து, ஒரு சாதாரண மில் தொழிலாளி குடும்பத்தில் பிறந்த என்னை, கோவை மாவட்டம் பேரூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கான வாய்ப்பினைக் கொடுத்து என்னை வெற்றியடையச் செய்வதற்காக என்னுடைய தொகுதிக்கு இரவு நேரங்களிலும், பகல் நேரங்களிலும் வருகை தந்து என்னை வெற்றியடையச் செய்த மாண்புமிகு தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வராக இங்கே அமர்ந்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்த என்னுடைய தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும்-35,264 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றியடையச் செய்து இந்த அவைக்கு அனுப்பியிருக்கின்ற வாக்காளப் பெருமக்களுக்கும், அனைத்து சமுதாயத்தினுடைய பெருமக்களுக்கும் இந்த அவையின் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12—45

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில் சாமானிய மக்களை எல்லாம் மேன்மை பெறச் செய்தார். அவர் வழியில் வந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய காலத்திலும் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமுதாயத்தினர் மேன்மை பெற்றனர். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தக் காலகட்டத்தில்தான் உண்மையான ஜனநாயகப் பண்புகளுக்கு ஏற்ப, சாமானிய மக்கள் எல்லாம் இன்று ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள சாதனையைச் செய்துள்ளனர். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவியாக மட்டுமல்லாமல், முதல்வராகவும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்.

''தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு,
தான் உண்டு என்பவன் கடுகுஉள்ளம் கொண்டவன்''

என்றார் புரட்சிக் கவிஞர் பாவேந்தன் பாரதிதாசன்.

"தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்"



2001 மே 30] [திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்]

என்ற அந்த புரட்சிக் கவிஞருடைய வரிகளுக்கேற்ப, தாயுள்ளம் கொண்ட கனிவு பெற்ற புரட்சித் தலைவி எங்கள் அம்மா அவர்களுடைய வழியில் என்றும் உறுதி பூண்டு நாங்கள் செயல்படக் காத்திருக்கின்றோம்.

12-வது சட்டமன்றப் பேரவையின் கவர்னர் உரையில், பக்கம் 25-ல் "சிறுபான்மையினரின் பாதுகாப்பு மற்றும் நலன்களைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. சமுதாய ஒற்றுமையையும், சகோதரத்துவ உணர்வையும் பேணிக் காக்க, அனைத்து மதப் பிரிவுகளையும் சார்ந்த சமயப் பெரியோர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய நல்லிணக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்" என்று இடம்பெற்று இருப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அதேபோல கவர்னர் உரையில், "கைத்தறித் தொழில்கள் மோசமான நிலையில் உள்ளன. நூற்பாலைகள் நலிவுற்றதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அவை இயங்க உரிய நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுக்கும்" என்று கூறியுள்ளார்கள். ஆகவே அதையும் நான் பாராட்டுகிறேன்.

பேரூர் தொகுதிக்குட்பட்ட ஆத்துப்பாலம் பகுதியில், கடந்த ஆட்சிக் காலத்தில் ஒரு பாலம் கட்டப்பட்டிருக்கின்றது. அந்தப் பாலத்திற்குச் செலவான தொகை 4 கோடி மட்டும்தான் இருக்கும். ஆனால் கடந்த தி.மு.க.-வினுடைய ஆட்சிக் காலத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் பாலத்திற்கும் சுங்க வரி வசூல் செய்கின்றார்கள். பழைய பாலத்திற்கும் சுங்க வரி வசூல் செய்கின்றார்கள். ஆகவே நம்முடைய அரசாங்கம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த ஆத்துப்பாலத்தில் சுங்க வரி வசூல் செய்வதை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்பதை இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தப் பாலத்தின் வாயிலாகத்தான் கேரளா மாநிலத்திற்குச் செல்கின்ற வாகனங்கள் எல்லாம் வருகின்றன. எனவே, சென்னையில் மிகப் பெரிய பாலங்கள் கட்டுகிறேன் என்று சொன்ன தி.மு.க.-வினுடைய அரசு, 4 கோடிக்கு மட்டும் பாலத்தைக் கட்டிவிட்டு, 20 ஆண்டுகளுக்கு அந்தச் சுங்க வரியை வசூல் செய்யவேண்டும் என்று சொல்லி அங்கே சுங்க வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, பழைய பாலங்களுக்கும் சுங்க வரி வசூல் செய்யப்படுவதால், முற்றிலும் அங்கு சுங்க வரி வசூல் செய்வதை நமது அரசாங்கம் இரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியான பேரூர் சட்டமன்றத்

தொகுதியில், செட்டிவளை பேரூராட்சிப் பகுதியில் தி.மு.க.வினுடைய ஆட்சிக் காலத்தில் சமத்துவபுரம் கட்டியிருக்கிறார்கள். அந்த சமத்துவபுரத்திற்கு இடத்தைத் தேர்வு செய்வதற்கு முன்பாகவே, நில ஆர்ஜிதம் செய்வதற்கு முன்பாகவே, சம்பந்தப்பட்ட நிலத்தினுடைய சொந்தக்காரரர்களே ஒரு தொகை பேசிவிட்டு, அதே நிலத்திற்கு சம்பந்தப்பட்ட எஸ்.எப். நம்பரில் தி.மு.க.-வினுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்காக அந்த இடத்திலே அதிக மதிப்பீடு என்ற வகையில் அரசு பெற்று நில ஆர்ஜிதம் செய்யும் விவசாயியிடம் இரு மடங்கு தொகையைப் பெற்றுக் கொள்ளையடித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமத்துவபுரத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யும்முன் இருந்த மதிப்பீட்டுத் தொகையை பத்திரப் பதிவு அலுவலகத்தில் விசாரித்தால் நன்கு தெரியும். இந்த ஊழல் உடனடியாகக் கண்டறியப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில், பொங்கல் திருநாள் அன்று ஏழை, எளியவர்களுக்கு எல்லாம் பயன்படுகின்ற அளவிற்கு இலவச வேட்டி, சேலைகள் கொடுக்கப்பட்டன. ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் இலவச வேட்டி, சேலைகளைக் கொடுக்காமல் பொங்கல் திருநாளன்று மிகப் பெரிய ஊழலை, அன்றையதினம், அந்தத் துறையினுடைய அமைச்சர் செய்திருக்கிறார்கள். ஏனென்றால் தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளியவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய அந்த இலவச வேட்டி, சேலைகளை மறைமுகமாக டெல்லிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள். இலவச வேட்டி சேலைகள் டெல்லியில் விற்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த தி.மு.க.வினுடைய தலைவர் கருணாநிதி, கைத்தறித் துறை அமைச்சர் மூலமாக மிகப் பெரிய ஊழலைச் செய்திருக்கிறார்கள். எனவே, இலவச வேட்டி, சேலையில் கைத்தறித் துறை அமைச்சர் மிகப் பெரிய ஊழலைச் செய்திருக்கிறார்கள். அதுவும் ஆராயப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12—50*

எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, தமது ஆட்சிக் காலத்தில் காலவரையற்ற உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்குப் பிறகு கடந்த காலத்தில் நடைபெற்ற தி.மு.க.வினுடைய ஆட்சியில் காவிரி நீர்ப் பிரச்சினைக்காக எந்த ஒரு முயற்சியும் எடுக்கப்படாமல் காலத்தைக் கடத்திக் கொண்டு





சென்றிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய ஆட்சிக் காலத்தில் இதய தெய்வம் அம்மா அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையைக் கவனித்து முற்றிலும் செய்து முடிப்பார்கள் என்பதை இந்தக் கூட்டத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் நம்முடைய அம்மா அவர்கள் பாண்டிச்சேரி மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்து கொண்டிருந்தபோது மிகப் பெரிய ஒரு விபத்தைச் சந்தித்தார்கள். அந்த விபத்து எப்படி நடந்தது? அந்த விபத்திற்கு யார் உறுதுணையாக இருந்தார்கள் என்பது உடனடியாகக் கண்டறியப்படவேண்டும். ஏனென்றால் அப்போது அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி அவர்கள், எத்தனையோ விபத்துக்கள் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, எனவே அவற்றிலே இதுவும் ஒன்று என்று சொல்லியிருக்கிறார். எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்மீது லாரியை விட்டு மோதியிருக்கிறார்கள். அந்த லாரியில்கூட தி.மு.க.வினுடைய கொடி வரையப்பட்டிருந்தது என்பதை இந்தச் சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விபத்து எப்படி நடைபெற்றது என்பதை நாங்கள் அறிய வேண்டும். அதற்காக விசாரணை கமிஷன் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

என்னுடைய தொகுதியினுடைய ஒரே கோரிக்கையை வைத்து விடைபெற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். குறிச்சி பேரூராட்சியில் சிறுவாணி குடிநீர்க் கட்டணமாக ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 23 ரூபாய் மட்டும்தான் வசூல் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் கடந்த ஆட்சியில் 23 ரூபாயை 55 ரூபாயாக உயர்த்தி, தேர்தல் வர இருக்கின்ற சூழ்நிலையில் 2 மாதங்கள் அந்தத் தீர்மானத்தை அப்படியே வைத்திருந்தார்கள். அரசாணை எல்லாம்கூடப் பெற்றுவிட்டார்கள். வருகிற ஜூன் மாதத்திலிருந்து ஒவ்வொரு வீட்டிற்கும் சிறுவாணிக் குடிநீர்க் கட்டணம் 55 ரூபாய் கட்ட வேண்டும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். எனவே, நம் ஆட்சி ; புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 23 ரூபாய் வசூலிக்கப்பட்டது. அதே அளவுதான் இப்போதும் வசூலிக்கப்பட வேண்டும். 55 ரூபாய் வசூலிப்பதற்கான உத்தரவை அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிச்சி பேரூராட்சியிலும், குனியமுத்தூர் பேரூராட்சியிலும் சிறுவாணி குடிநீர்த் தொட்டி இருக்கிறது. அந்த சிறுவாணி குடிநீர்த் தொட்டி நிரம்புவதற்கு 8 மணிநேரம்தான் ஆகும். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் அந்த சிறுவாணி குடிநீர்த் தொட்டி நிரம்புவதற்கு 14 மணி நேரம் ஆயிற்று. எனவே 6 மணி நேரம் அதிகமாகி இருக்கிற சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பெரியோர்களும், தாய் மார்களும் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் சொல்கிறேன். அங்கே சிறுவாணி குடிநீர் சிறப்பான முறையிலே அனைத்துப் பொது மக்களுக்கும் கிடைக்கின்ற அளவில் நம்முடைய அரசாங்கம் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி குளத்தில் நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்பதற்காக தூர் வாரும் பணி கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. ஆனால் தூர் வாரும் பணி நடைபெறாமலே தூர் வாரும் பணி நடைபெற்றதாக அன்றையதினம் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர் 10 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிற்கும் மேலாக தூர் வாரும் பணி நடைபெற்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட செய்தி வந்திருக்கிறது. ஆனால் தூர் வாரும் பணி அங்கே நடைபெறவில்லை. எனவே, தூர் வாரும் பணியை நம் அரசாங்கம் உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல செட்டிவளை பேரூராட்சியில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க வேண்டுமென்பதற்காக கடந்த ஆட்சிக் காலத்தில், தி.மு.க.வினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் அவர்களுடைய கட்சியைச் சேர்ந்த 300 பேர்களுக்கு இலவசப் பட்டா வழங்கவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்களை உடனடியாக விசாரித்து அதிலே யார் தகுதியானவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு நமது அரசாங்கம் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—55*

நான் வயதில் இளையவனாக இருந்தாலும்கூட என்னை பேரூர் சட்டமன்றத் தொகுதியினுடைய வேட்பாளராகப் போட்டியிட வைத்து என்னை வெற்றியடையச் செய்த தாயுள்ளம் படைத்த அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த மாபெரும் அவையில் பேசுவதற்கான வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர்





அன்னை அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** அன்னைத் தமிழுக்கு முன்னம் என் முதல் வணக்கம். ஏற்றுதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, வணங்குதலுக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மைகள் சில காலம் மறைத்து வைக்கப்படக்கூடும் சிலரால். ஆனால் உண்மைகள் ஒருக்காலும் மரித்துவிடுவதில்லை என்னும் சத்தியத்திற்குத் தத்துவச் சாட்சியாக நிகழ்காலச் சான்றாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் சத்தியத்தின் திருவுருவே, நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நோக்கும், திமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்ட பாரதியின் புதுமைப் பெண்ணே, அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும், வேகமும், விவேகமும், பணிவும், துணிவும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்புயர்வற்ற எங்கள் மாட்சிமைமிக்க முதலமைச்சர் அவர்களே, மகோன்னதமான இந்த மாமன்றத்தின் மாண்புக்கும், மரபுக்கும், மகிமைக்கும் பெருமை சேர்க்கும் வகையிலே மிக அருமையாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் அமைச்சர் பெருமக்களே, பாராட்டுதலுக்குரிய மூத்த சட்டமன்ற உறுப்பினர்களே-- மூத்த என்று சொல்வதால் வயதில் மூத்தவர்கள் என்று பொருள் அல்ல, அனுபவத்தால் மூத்தவர்கள்—நேசத்திற்கும், பாசத்திற்கும் உரிய என் சக சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் என் சார்பாகவும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் எங்கள் அன்புத் தலைவி, அருமைத் தலைவி அன்னை சோனியா அவர்களின் சார்பாகவும் எனது பணிவார்ந்த முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு ஆளுநரின் உரையின் மீதான எனது கருத்துரையைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். ஆளுநர் உரையைக் கேட்டபோது அதிலே குறிப்பாகத் தமிழக மக்களுக்காகத் தாங்கள் தந்திருந்த நல்ல திட்டங்களைப் பற்றி அறிந்தபோது, தெரிந்தபோது, அதன் பின்னணியிலே இருக்கின்ற நல்ல நோக்கம் புரிந்தபோது, தரிசாய்க் கிடந்த எங்கள் மனங்கள்கூடத் தடாகங்களாயின. தமிழக மக்களும் தங்களது வறண்ட வாழ்க்கையிலே வசந்தம் வீசத் தொடங்கியதை உணர்ந்து கொண்டது அன்றையதினம்தான்.

இந்த இனிய வேளையிலே நான் ஒரு நல்ல இனிமையான பெருண்மையைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். நல்லாட்சி தருகிறேன்,

நல்லாட்சி தருகிறேன் என்று நா உலர்ந்து போகும் வகையிலே சொன்னார்கள். ஆனால் தமிழகத்திலே நல்லாட்சி என்பது நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையில் மட்டுமே அமைய முடியும் என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழக மக்கள் அசைக்க முடியாத ஆழ்ந்த ஆணித்தரமான நம்பிக்கையை வைத்திருந்தார்கள். அந்த நம்பிக்கைதான் வாக்குகளாக மாறி, நமது மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு நல்ல மாபெரும் வெற்றியைத் தந்திருக்கிறது என்பதோடு நமது புரட்சித் தலைவி அவர்களும் தனித்தே அறுதிப் பெரும்பான்மை பெற்று இன்றைக்கு ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து—நல்லாட்சி நல்லாட்சி என்று அவர்கள் உதட்டளவிலே உச்சரித்ததை மாற்றி —இன்றைக்கு உண்மையிலே நடைமுறையிலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

கோவையைச் சேர்ந்தவள் என்ற முறையிலே நான் இங்கே இன்னும் ஒரு செய்தியைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகின்றேன். கோவை மாவட்டத்திலே இருக்கின்ற மொத்தம் 14 சட்டமன்றத் தொகுதிகளிலே அனைத்துத் தொகுதிகளிலேயும், ஒரு தொகுதியைக்கூட விட்டு வைக்காமல், வேற்று அணிக்குச் செல்லாத வகையிலே அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலேயும் நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணி மட்டுமே வெற்றி வாகை சூடியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்றால் கடந்த 5 ஆண்டு கால ஆட்சியிலே மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது கோவை மாவட்டம்தான். துடுப்பற்ற படகுபோல துடித்துக் கொண்டிருக்கும் கோவை வாழ் மக்கள் நமது புரட்சித் தலைவி அவர்களின் துணை கொண்டு கரை சேரலாம் என்று காத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆதங்கத்தின் அடிப்படையிலே கோவை வாழ் மக்களின் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய தேவைகள் சிலவற்றை இந்த மாமன்றத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1—00*

கோவை நகரத்தைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்தக் கோவை நகரம் என்பது ஒரு தொன்மையான தொழில் நகரம். இந்தத் தொழில் நகரம் இன்றைக்குத் தொய்ந்து போய்விட்டது. ஓடிக்கொண்டிருந்த தொழிற்சாலைகளெல்லாம் மூடிக்கிடக்கின்றன. ஆகவே, உழைப்பதற்கு வழியில்லை, பிழைப்புக்கு வகையில்லை என்ற நிலை. மக்களுக்கு வாங்கும் திறன் இன்றி வர்த்தகங்கள் எல்லாம் வாடிப் போய்விட்டன. இதற்கு இன்னொரு முக்கியக் காரணமும் உண்டு. எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்ற வெறியிலே மதங்களின் பெயராலே மக்களைப்



பிரித்தாள வேண்டுமென்று நினைத்தவர்களின் சூழ்ச்சிக்கு, கொடிய செயலுக்கு கோவை இலக்கானதும் இதற்கொரு முக்கிய காரணம். ஆகவே, அந்தக் கொடிய குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குப் பிறகு கோவையிலே கொண்டுவரப்பட்ட காவல் துறையின் கட்டுப்பாடுகள், மிகக் கடுமையான சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகள், இவற்றின் காரணமாக பக்கத்து மாநிலங்களின் வர்த்தகத் தொடர்புகளும், பக்கத்து மாவட்டங்களின் வர்த்தகத் தொடர்புகளும் அடியோடு துண்டிக்கப்பட்டுவிட்டன. இதனால் கோவையின் வர்த்தகத்திலே ஒரு மிகப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டிய செயல் ஒன்று இருக்கிறது. உடனடியாக இந்தச் சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகளை, பாதுகாப்பிற்குக் குந்தகம் இன்றி, முடிந்தவரை தளர்த்தவேண்டிய ஒரு கட்டாயமும், நெருக்கடியும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மத நல்லிணக்கக் குழுக்களை ஏற்படுத்தி, பாதுகாப்புக்குக் குந்தகம் இன்றி, சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகளைத் தளர்த்துவது குறித்து ஆலோசனைகள் கேட்டு, அவர்களது ஆலோசனையின் பேரிலே இதனைச் செயல்படுத்தவேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே எனது தாழ்மையான வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது வாடிக் கிடக்கும் வர்த்தகங்களை வளம் பெறச் செய்வதற்கு மட்டும் உதவியாக இருக்காது, நமது இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் ஒரு மிகப் பெரும் பாதுகாப்பு உணர்வை அளிக்கும் என்பதையும், இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், சோதனைச் சாவடிகளின் கெடுபிடிகளால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது நமது இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் ஆவார்கள். அவர்கள் சொந்த நாட்டிலேயே அந்நியப்பட்டுக் கிடப்பதாகவும், சுதந்திர நாட்டின் அடிமைகளாகத் தாங்கள் இருப்பதாகவும், தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாகவும் மிகவும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களது குறைகளையும் மாற்றியமைப்பதற்கு இது ஒரு நல்ல வழியாக அமையும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மேற்குத் தொகுதியைப் பொறுத்தமட்டிலும் முழுக்க முழுக்க நகர்ப்புறம் ஆகும். இந்த நகர்ப்புறத்திலே, மிகப் பிரபலமாக நடைபெற்று வருகின்ற தொழில் நகைத் தொழில் ஆகும். இன்றைக்கு இந்த நகைத் தொழிலும் நசிந்துவிட்டது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மக்களுக்கு வாங்கும் திறன் இல்லாததும் இதற்கு ஒரு காரணம். அதைவிட இன்னும் ஒரு மிகப் பெரிய காரணம் உண்டு. அது விற்பனை வரிப் பிரச்சினை. நமது பக்கத்து மாநிலங்களில் எல்லாம் விற்பனை வரி என்பது மிகக் குறைவாக, 2 விழுக்காடுதான் இருக்கிறது.

ஆனால், நமது தமிழகத்தில் மட்டுமே விற்பனை வரி 4 விழுக்காடாக இருக்கின்றது. இந்த விற்பனை வரிக் குறைப்பிற்காக, நமது நகை வியாபாரிகள் சங்கத்தினர், கடந்த ஆட்சியின்போது இருந்த முதல்வர் அவர்களைச் சந்தித்து, பலமுறை கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்கள். ஆனால், இதற்காக, எந்தவொரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விற்பனை வரிக் குறைப்பின் மூலமாக நகை வியாபாரம் மேம்படுவதோடு, இதனையே நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்ற பொற்கொல்லர்கள்—Goldsmith என்று சொல்லப் படுகின்ற பல்லாயிரக்கணக்கான பட்டறைத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் இதனால் மேம்பாடு அடையும் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், நமது புரட்சித் தலைவி, நமது அம்மா அவர்கள் நன்கு அறிவார்கள். கோவை மாவட்டத்திலே, பட்டறைத் தொழிலாளர்களின் குடும்பத்திலே ஏற்பட்ட பல பட்டினிச் சாவுகள் குறித்து நீங்கள் அனைவருமே நன்றாக அறிவீர்கள். அமைச்சர் பெருமக்கள் அனைவருமே நன்றாக அறிவார்கள். ஆகவே, இதுபோன்ற அவலங்கள் இனியும் தொடராது இருக்கவேண்டும். எனவே, பட்டறைத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கென தனியான ஓர் அமைப்பு, வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்திலே மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான வாரியம் என்று நான் சொல்லும்போது, எனக்குத் துப்புரவுத் தொழிலாளர்கள் நினைவுக்கு வருகின்றார்கள். ஏனென்று கேட்டால், இங்கே நமது நகரினைத் தூய்மைப்படுத்தி அழகுபடுத்தும் வேலையிலே ஈடுபட்டிருக்கும் துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை இன்றைக்கு அழகிழந்து அலங்கோலமாகக் காணப்படுகிறது. ஏனென்றால், பல்லாயிரக்கணக்கான துப்புரவுத் தொழிலாளர்கள் இன்றைக்கு நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அதுவும் இல்லாமல் அவர்களுக்கு நிரந்தர ஊதியம் இல்லை. ஒரு தொகுப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஊதிய நிர்ணயம் எதுவுமே செய்யப்படவில்லை. ஒப்பந்த (contract) அடிப்படையிலே கூலிக்கு அமர்த்தப்பட்டு, தொகுப்பு ஊதியம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்றி, அவர்களை நிரந்தரம் செய்வதற்கான ஏற்பாட்டினைத் தாங்கள் செய்ய வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலே, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அந்தந்த மாத இறுதியிலேயே ஊதியம் மிகச் சரியாக வழங்கப்பட்டு



வந்தது. ஆனால், இப்போது அப்படி இல்லை. அடுத்த மாதம், 5,10,15 என்று மாத இறுதி வரை ஒரு நிர்ணயமற்ற தேதியில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குறையையும் நீங்கள் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரையிலே, அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கென ஒரு நல்ல அமைப்பு ஏற்படுத்தப்படும் என்றும், அவர்களது பணி நிலைகளுக்கும், பாதுகாப்புக்கும், ஊதியத்திற்கும் ஒரு நல்ல ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றையதினம், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வை. பெருமாள் அவர்கள் 63 அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கென தங்கள் அரசு வாரியம் அமைத்து ஒரு பெரிய பொதுக்கூட்டத்தை நடத்தினோம் என்று சொன்னார்கள். நிச்சயமாக அது அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்ட பொதுக்கூட்டம் அல்ல. அது ஒரு தி.மு.க. கட்சிப் பொதுக் கூட்டமாகத்தான் நடைபெற்றது. ஒருவேளை வாதத்திற்காக, அவர்கள் ஒரு வாரியத்தை அமைத்தார்கள் என்று நாம் வைத்துக்கொண்டாலும்கூட, அந்த வாரியத்தின் சாதனை என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் செய்த ஒரே ஒரு சாதனை முன்னாள் முதல்வர் அவர்களின் புகைப்படத்தை ஒட்டிய அடையாள அட்டைகளை அங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு வழங்கியது ஒன்றுதான். ஆகவே, இதுபோன்ற * உண்மைக்கு மாறான விளம்பரங்கள் இல்லாமல் உண்மையான செயல்பாட்டினை நாம் செய்து காட்ட வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—05*

அடுத்து, கோவை என்று சொன்னாலே, எல்லோருக்கும் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்பதுதான் நினைவுக்கு வரும். (மணியடிக்கப்பெற்றது) இவ்வளவு பிரசித்தி பெற்ற பஞ்சாலை நகரம், இன்றைக்குப் பஞ்சம் விரித்தாடும் நகரமாக மாறிவிட்டது. காரணம், கோவை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 35 பெரிய ஆலைகள், அதாவது பதினோராயிரம் கதிர்களுக்கு மேல் கொண்ட D-Group ஆலைகள் மூடப்பட்டுள்ளன என்று அலுவலகச் செய்திகள் சொல்கின்றன. இன்னும் சொல்லப் போனால், மூலப் பொருளான பஞ்சைக் கொள்முதல் செய்வதற்குக்கூட பணம் இல்லாத அளவில், 50

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

[திருமதி எஸ். மகேஸ்வரி] [2001 மே 30

சதவிகிதத்திற்கு மேலான ஆலைகள் இன்றைக்கு conversion அடிப்படையிலே, கூலி அடிப்படையிலே இயங்கி வருகின்றன. ஆகவே, பஞ்சாலைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, பலமுறை பஞ்சாலை நிர்வாகங்கள் மட்டுமல்ல, தொழிற்சங்கங்களும் முன்னாள் அரசாங்கத்தை அணுகி பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அதாவது, பஞ்சு இறக்குமதி செய்தல், இறக்குமதி வரியைக் குறைத்தல், நூல் ஏற்றுமதியை ஊக்குவித்தல். நமது மின் கட்டணம் 16 சதவிகிதம் உற்பத்திச் செலவிலே இருக்கிறது. ஆகவே, அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காக, கலால் வரியைக் குறைக்க வேண்டுமென்றும் பல்வேறு கோரிக்கைகளை வைத்தார்கள். (மணியடிக்கப்பெற்றது). ஆனால் ஒரு கோரிக்கைகூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதை நான் நினைத்துப் பார்க்கும்போது, 'வைத்தியத்திற்குப் பணம் தேவை என்று நாம் போய் கேட்கும்போது, நீ சென்று வா, உனது ஈமக்கிரியைக்கு நான் பணம் கொடுத்து உதவுகிறேன்' என்பது போல, ஒரு கேலிக்கூத்தாக, ஆலைகள் மூடப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று தொழிலாளர்கள் கேட்டபோது, மூடிய ஆலைகளில் பணி செய்த தொழிலாளர்களுக்கு நாங்கள் 250 ரூபாய் உதவித் தொகை தருகிறோம் என்று சொன்னார்களே, அந்த உதவித் தொகையையாவது தந்தார்களா என்று கேட்டால், அதுவும் இல்லை. அதுவும் புலவனும் உலோபியும் போன்ற கதைதான். ஆகவே, இதற்கும் ஒரு சரியான நிவாரணம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஏதோ பெரிய ஆலைகள் மட்டும் பாதிக்கப்பட்டால் போதாது, சிறிய ஆலைகள், அதாவது பதினோராயிரம் கதிர்களுக்குக் கீழே இயங்கக்கூடிய A, B, C என்று சொல்லப்படுகின்ற சிறிய ஆலைகளுக்கும் மூடு விழா காணவேண்டும் என்பதிலே மத்திய அரசும், மாநில அரசும் போட்டி போட்டுக் கொண்டிருந்தன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேச்சை முடித்துக்கொள்ளவும்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஐந்து நிமிடம் எனக்கு நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், கன்னிப் பேச்சிலே குறுக்கீடு வேண்டாமென்று சொல்லியிருக்கிறீர்கள். குறுக்கீடு என்கிறபோது, காலக்கெடு விதிப்பதும் ஒரு குறுக்கீடுதான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் எட்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.



2001 மே 30]

**திருமதி எஸ். மகேஸ்வரி:** ஆகவே, சிறு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், கலால் வரிச் சலுகை முன்பு 50 இலட்சமாக இருந்தது. பின்னர், ஒரு கோடியாக உயர்த்தப்பட்டது. இப்போது, இந்த நடப்பு ஆண்டு பட்ஜெட்டிலே இந்த கலால் வரிச் சலுகை என்பது சிறு நூற்பாலைகளுக்கு முழுமையாக இரத்து செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மத்திய அரசிடம், நமது மாநில அரசு, நமது புரட்சித் தலைவி அவர்கள் பரிந்துரை செய்து சிறு நூற்பாலைகள் இழந்த கலால் வரியை மீண்டும் மீட்டுத் தரவேண்டுமென்று சிறு நூற்பாலைகளில் பணி செய்யும் தொழிலாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்தச் சிறு நூற்பாலைகள் கிராம மேம்பாட்டிலே, கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திலே, அதிலும் குறிப்பாக பெண்கள் வேலைவாய்ப்பிலே மிகப் பெரும் பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

அதேபோன்று ஆளுநர் உரையில் மரபு-சாரா மின் உற்பத்தி ஊக்கப்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. Non-conventional energy என்று சொல்லப்படுகின்ற மரபு சாரா மின்சக்தியில் Wind energy என்று சொல்லப்படுகின்ற காற்றாலை மின்உற்பத்தி முதன்மை இடம் வகிக்கிறது. அதாவது, புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலே, காற்றாலை மின் உற்பத்தியைப் பெருக்க அனைத்து வகையிலும் ஆக்கப்பூர்வமான உதவிகள் அளிக்கப்பட்டன. ஆனால், சென்ற ஆட்சியிலே காற்றாலை மின் உற்பத்தியை அழிவுப் பாதையில் விட்டிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள், இதுகுறித்து பகிரங்கமாகப் பத்திரிகையிலே செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்குப் பல கோடி ரூபாய் பல மாதங்களாக அளிக்கப்படாமல் நிலுவையில் இருக்கிறது. ஆகவே, ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே நாங்கள் இங்கே உயர் நீதிமன்றத்திலே certiorari, writ of mandamus என்ற writ மனுவைத் தாக்கல் செய்து இந்த நிலுவைத் தொகையையெல்லாம் பகுதி பகுதியாகப் பெற்றுக்கொண்டிருக்கிற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அத்தோடு அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை.

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக, இந்த ஆண்டு, அதாவது எனக்குக் கொடுத்த குறிப்பின்படி, 'மின் வாரியம்—ஒரு கண்ணோட்டம்' என்கிற அந்தத் தகவலின் அடிப்படையில் ஏறக்குறைய இந்த ஆண்டு மட்டும் எதிர்பார்க்கின்ற நட்டம் மின் வாரியத்திற்குக் கிட்டத்தட்ட 4500 கோடி

ரூபாய்க்கு மேலே இருக்கும் என்ற தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். இது முழுக்க முழுக்க திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து கவனத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேச்சை முடித்துக்கொள்ளவும்.

*பிற்பகல் 1—10*

***மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய உறுப்பினர், சகோதரி மகேஸ்வரி அவர்கள் பேசும்போது, சோதனைச் சாவடிகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே ஒரு சிறு விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். சகோதரி மகேஸ்வரி அவர்கள், தான் வெற்றி பெற்ற தொகுதி மக்களுக்குத் தன்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமென்பதற்காகக் குறிப்பிட்டார்கள். சகோதரி மகேஸ்வரி அவர்கள் வெற்றி பெறுவதற்கு முன்பு இஸ்லாமியர்கள் வசித்த பகுதியிலே அவர்கள் செல்கின்றபோது, இஸ்லாமியர்களுக்கென்று தனியாக சோதனைச் சாவடி அமைத்து, அவர்களைப் பரிசோதித்து, சோதனை செய்து உள்ளே அனுப்பினார்கள். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இஸ்லாமியர்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கென்று தனியாக எந்த வகையான சோதனைச் சாவடிகளும் இப்போது கிடையாது என்கின்ற ஒரு மகிழ்ச்சியான தகவலைச் சொல்லி, மகேஸ்வரி அவர்கள் அதற்கும் சேர்த்து இப்போது தன்னுடைய நன்றியுரையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லலாம் என்று சொல்லி பணிவுடன் அமர்கிறேன்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** அதேபோன்று இன்றைக்குக் காற்றாலை மின் உற்பத்தியாளர்களை, Supplementary Agreement ஒன்றை, புதிய நிபந்தனைகளையெல்லாம் ஏற்படுத்தி.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சோதனைச் சாவடி பற்றிச் சொன்னார்கள். கடந்த ஆட்சியிலே சோதனைச் சாவடியாக





இருந்ததையெல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக இருந்து சாதனைச் சாவடியாக ஆக்கப் போகிறார்கள். ஆகவே, அதோடு விட்டுவிட்டு, உங்களுடைய தொகுதிக்கு வாருங்கள்.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** அதற்காக நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த Supplementary Agreement-லே காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் புதிய நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு, கையெழுத்துப் போட வேண்டுமென்று நமது மின் வாரியம் மிரட்டி வருகிறது. ஆகவே, இதுபோன்ற அராஜகத்திலிருந்தும் காற்றாலை மின் உற்பத்தியாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் சுடர்விளக்கு அன்னை சோனியா அவர்கள் என்னை வேட்பாளராக அறிமுகப்படுத்துவதற்கு முன்பு, பரபரப்பான கோவை நகரின் பளபளப்பான பக்கத்தை மட்டுமே நான் பார்த்து வந்தேன். ஆனால், நேரடியாக நகருக்குள்ளே சென்றபோதுதான் நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள் இன்னமும் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். இன்றைக்கு நாம் செவ்வாய் கிரகத்திற்குப் போவதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அங்கே என்னவென்றால், குடிசையிலே, ஓலைக் குடிசையிலே.. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் காமராஜ் அவர்கள் 5 நிமிடத்திற்குள் பேசி முடித்துக்கொள்வார்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 12-வது சட்டப் பேரவைக்கு என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த தாரமங்கலம் தொகுதி வாக்காளர்களுக்கும், எனக்கு இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், திண்டிவனம் தந்த திருவிளக்கு, பதவி ஆசையில்லாத மக்கள் தொண்டர், மக்கள் காவலர், டாக்டர் ஐயா அவர்களுக்கும், தமிழகம் முழுவதும் ஒரே நாளில் ஒன்றரை இலட்சம் மரக்கன்றுகளை நட்டு, பசுமைப் புரட்சி நடத்திய பசுமை நாயகர், சின்னைய்யா அவர்களுக்கும், மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணிக்கு, வெற்றிக் கூட்டணிக்குத் தலைமை ஏற்று தமிழகம் முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து, கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையெல்லாம் வெற்றி பெறச் செய்த, தமிழகத்தில் தனிப் பெரும் ஆட்சியை மலரச் செய்த

[திரு. மே.ப. காமராஜ்] [2001 மே 30

டாக்டர் புரட்சித் தலைவி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எனக்கு இந்த மன்றத்திலே பேச வாய்ப்பை நல்கிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வரவேற்று, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்பதைப்போல, இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி, முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற சிறிது நாட்களுக்குள்ளாக ஆளுநர் உரையிலே நல்ல பல கருத்துகளை இங்கே கொடுத்திருக்கின்றார்கள். அந்தக் கருத்துகளையெல்லாம் எங்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதிலும் குறிப்பாக, ஆதிதிராவிடப் பெண்களுக்கு, Plus 1, Plus 2 படிக்கும் பெண்களுக்கு இலவசமாக சைக்கிள் வழங்கும் திட்டத்தை வரவேற்பதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களும் பயன்பெறும் வகையிலே இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி செயலாக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 'அனைவருக்கும் நோயற்ற வாழ்வு மற்றும் தரமுள்ள மருத்துவ வசதிகள் எளிதில் கிடைக்கச் செய்வது அரசின் குறிக்கோள்களில் ஒன்று' என்று ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டது வரவேற்கக்கூடிய அம்சம் என்று சொன்னாலும், எங்கள் தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பேரூராட்சி, தாரமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெளிநோயாளிகள் அதிகம் வருகின்றனர். பிரசவத்திற்கு அதிகப் பெண்கள் வருவதால், அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் தற்போது படுக்கை வசதிகள் மிகவும் குறைவாக உள்ளன; அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை விரிவுபடுத்தி உயர்நிலையாக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—15*

மேலும், தாரமங்கலம் தொகுதியிலுள்ள 10 பஞ்சாயத்துக்களான முத்தநாயக்கன்பட்டி, பல்பாக்கி, உ. மாரமங்கலம், பச்சனம்பட்டி, தொளசம்பட்டி, அரங்கனூர், நிலக்குவளைப்பட்டி போன்ற ஊராட்சிகளுக்கு எந்தவொரு ஆரம்ப சுகாதார நிலையமும் இல்லாததால் அங்கே இருக்கக்கூடிய பொதுமக்கள் பெரிதும் வருத்தப்படுகின்றார்கள். இந்தப் பகுதிக்கு நடுவேயுள்ள பகுதியான பஞ்சுகாளிப்பட்டியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக அமைக்க வேண்டுமாய் இந்த அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



2001 மே 30] [திரு. மே.ப. காமராஜ்]

எனது தொகுதியிலே உள்ள பல்பாக்கி, முரப்பம்பட்டி, சிக்கம்பட்டி, பச்சனம்பட்டி ஊராட்சிகள் மற்றும் குப்பனூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலைத் தொட்டிகள் கட்டி 5 வருடங்கள் ஆகியிருந்தும் அந்த மேல்நிலைத் தொட்டிகளில் இன்னும் தண்ணீர் ஏற்றப்படவில்லை. எனவே, அந்தப் பகுதியிலுள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்குத் தண்ணீர் கிடைக்க இந்த அரசு போர்க்கால அடிப்படையிலே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

மேலும் எனது தொகுதிக்குட்பட்ட ரெட்டிப்பட்டி முதல் பெரியேரிப்பட்டி செல்லும் சாலைக்கு அருகில் கசிவுநீர்க் குட்டை கட்டியதால் மழைக் காலங்களில் அந்த ரோடு மூழ்கி விடுவதால் ஒரு கிலோமீட்டர் செல்லக்கூடிய அந்தக் கிராமத்திற்கு 5 கிலோமீட்டர் தூரம் சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதியில் ஒரு பாலம் கட்டித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது).*

மேலும் தாரமங்கலம் தொகுதியிலுள்ள, தாரமங்கலம் பேரூராட்சி மல்லிக்குட்டை, அமரகொள்ளி, கசுவுரெட்டிப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் மும்முனை மின்சாரம் வேண்டி பல போராட்டங்களை நடத்தியும், கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, இந்த அரசு உடனடியாக அந்தப் பகுதியிலே மும்முனை மின்சாரம் வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** ஒரேயொரு நிமிடம் மட்டும் எனக்குப் பேச அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** தாரமங்கலம் தொகுதியிலுள்ள மேச்சேரி ஒன்றியத்தில் மல்லிகுண்டம் ஊராட்சியில் முந்தைய அரசின்போது 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட்டும், எந்தவித அடிப்படை வசதிகளும், அடிப்படை முயற்சிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே, மேச்சேரி பகுதியில் மின்சாரம் குறைவாக வருவதால் மக்கள் பெரிதும் பாதிப்பு அடைந்துள்ளனர். எனவே, அந்தத்

[திரு. மே.ப. காமராஜ்] [2001 மே 30

திட்டம் உடனடியாகச் செயலாக்கம் பெற தக்க முயற்சி எடுக்க வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் எங்கள் பகுதியில் நெசவுத் தொழில் பாதிப்பு அடைந்து நெசவாளர்கள், கூலித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கனிவோடு சிறப்புக் கவனம் செலுத்தி, நெசவாளர்கள் புதிதாகத் தொழில் தொடங்க, பிழைப்பு நடத்த குறைந்த வட்டியுடன் கட்டக்கூடிய கடன் வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் பகுதியில் காடையாம்பட்டி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** ஒரேயொரு நிமிடம் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூன்று நிமிடங்கள் கூடுதலாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) கோவை தங்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** இத்துடன் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கடந்த 35 ஆண்டுகள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் என்று சொல்லுங்கள்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். கடந்த 35 ஆண்டு காலம் பொது வாழ்க்கையில் முழுமையாக அர்ப்பணித்து, செயல்பட்டு வந்த எனக்கு முதன்முதலாக, இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கி, வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிடுகின்ற வாய்ப்பினை எனக்கு உருவாக்கிய எங்களது மக்கள் தலைவர், சத்தியத் தலைவர், நேர்மையின் திருவுருவம், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.



2001 மே 30] [திரு. கோவை தங்கம்]

சட்டமன்றத்திலே பேசுவதற்கு இந்த வாய்ப்பினை உருவாக்கி நான் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள், செயலாளர்கள், செயல் வீரர்கள், மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு வாக்களித்து என்னை வெற்றிபெறச் செய்த வால்பாறை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—20

இங்கே மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலே, பல்வேறு நலத் திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற 10 நாட்களிலேயே அறிவித்திருக்கின்றார்கள். அவர்களைப் பாராட்டுகின்றேன். அதிலே குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். மிகவும் வரவேற்கக்கூடிய திட்டம். தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தத் திட்டத்தின் மூலமாக இந்தியாவிலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டுவார்கள் என்ற செய்தியை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). அதேசமயத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இன்று வழங்கி வருகின்ற scholarship பணத்தை, உதவித் தொகையை மேலும் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்ற கருத்தினையும் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும் நான் வெற்றி பெற்ற வால்பாறை மேல் பகுதியில் இருக்கின்ற வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் வறுமையிலே வாடுகின்ற கூலித் தொழிலாளர்கள். அவர்களுடைய நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்திலே கொண்டு வால்பாறைக்கு இருவழிப் பாதையை அமைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலங்களில் ஒரு சரிவு ஏற்பட்டாலும்கூட அங்கு போக்குவரத்து தடைப்படும். ஒரு நாளைக்கு 76 ரூபாய் கூலி பெறுகின்ற தோட்டத்

[திரு. கோவை தங்கம்] [2001 மே 30

தொழிலாளர்களுடைய வாழ்க்கையை மனதிலே கொண்டு—மழைக் காலங்களில் சரிவு ஏற்பட்டாலும் அல்லது யானை போன்ற வன விலங்குகள், மிருகங்கள் நடு ரோட்டில் வந்து நிற்கின்ற நேரத்திலும்கூட அங்கே பல மணி நேரம் போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. அதை மனதிலே கொண்டு—அந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய நிலையை எண்ணி ஒரு மாற்று வழிப் பாதையை வால்பாறைக்கு உருவாக்கித் தந்தால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல வால்பாறையில் சுற்றுலாத் துறை மையம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல வால்பாறையின் கீழ்ப் பகுதியிலே கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சியின் காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அதை மனதிலே கொண்டு, அரசாங்கமே கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் சாலை வசதி, மின் வசதி இல்லை. அதைப்போல குடிநீர் வசதியும் இல்லை. இதை மனதிலே கொண்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையிலே, ஒருவருக்கு ஒரு வீடு என்கின்ற நல்ல திட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். கஜானாவே காலியாக இருக்கின்ற இந்த நேரத்திலே, 10 நாட்களில் இவ்வளவு பெரிய நல்ல திட்டங்களை அறிவித்த முதல்வர் அவர்களைப் பாராட்டுகின்ற நேரத்தில், முதன்முதலாக அந்த நல்ல திட்டத்தைத் தமிழ்நாட்டின் வடகோடியில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கின்ற, ஏழையெளிய மக்கள் வசிக்கின்ற, கூலித் தொழிலாளர்கள் வசிக்கின்ற அந்த வால்பாறையில் நீங்கள் அறிமுகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல முந்தைய ஆட்சிக்காலத்தில் வால்பாறையில் உள்ள High Forest Estate-ல் பணிபுரியும் தொழிலாளர்கள் 10 மாதங்களாகியும் சம்பளம் பெறாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகிற போது, ஒருவருக்கு ஒரு வீடு என்று குறிப்பிட்டார்கள். ஒரு குடும்பத்திற்கு



2001 மே 30] [திரு. அ. வெங்கடாசலம்]

ஒரு வீடு என்ற திட்டம்தான், நம்முடைய மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே அதைத் திருத்திக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கும் இது கன்னிப் பேச்சு; உங்களுக்கும் இது கன்னிக் குறுக்கீடு. அவர் திருத்திக் கொள்வார்.

*பிற்பகல் 1—25*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பது மிகப் பெரிய நல்ல திட்டம். இது இந்தியாவிலேயே எந்த மாநிலமும் அறிவிக்காத ஒரு திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தினை முதன்முதலாக நீங்கள் வால்பாறையில் அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வால்பாறையிலுள்ள High Forest தோட்டத் தொழிலாளர்கள், கடந்த 10 மாதங்களாகச் சம்பளம் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 76 ரூபாய் கூலி வாங்குகின்ற அந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு 10 மாதம் சம்பளம் கிடைக்கவில்லை என்று சொன்னால், அந்தக் குடும்பம் எப்படி நடக்கும் என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசில் முன்னாள் முதல்வர் அவர்கள் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளாததால், வால்பாறைப் பகுதி மக்கள் மிகவும் வேதனையடைந்திருக்கிறார்கள். ஆகவே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வால்பாறை High Forest தோட்டத் தொழிலாளர்களுடைய குறைகளைக் கவனத்திலே கொண்டு, உடனடியாகச் சம்பளம் கிடைப்பதற்கு உதவி செய்யுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சம்பள உயர்விற்காகப் போராடி வருகிறார்கள். ஒரு நாளைக்கு 76 ரூபாய் என்பது இந்தக் காலத்தில் எப்படிச் சாத்தியமாகும் என்பதை நினைத்து, சம்பள உயர்வு கிடைப்பதற்கு இந்த அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 76 ரூபாய் கூலி வாங்கிக் கொண்டு, தங்களுடைய குழந்தைகளை, படிப்பதற்கு வெளியூர்களுக்கு அனுப்ப மிகவும் கஷ்டப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். அதை மனதிலே கொண்டு, தாயுள்ளம் படைத்த டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வால்பாறையிலே ஒரு கல்லூரியை உருவாக்கித் தந்தால், வால்பாறை மக்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள். ஒரு பாலிடெக்னிக், ஒரு மேல்நிலைப் பள்ளி போன்ற பள்ளி ஸ்தாபனங்களை உருவாக்கி, வால்பாறை மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. வெங்கடாஜலம் அவர்கள்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியினர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை அழித்தே தீருவோம் என்ற ஒரே அம்சத் திட்டத்தோடு 5 ஆண்டு காலம் செயல்பட்டதைத் தூள் தூளாக்கி ஒளிமயமான தமிழகத்தை உருவாக்கி, இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற மாநிலமாக சாதனை படைக்க இருக்கும் எங்களுடைய தர்மத் தாயே, எனது வாழ்க்கையில் ஓர் உயர்வை உருவாக்கி, அந்தஸ்தைக் கொடுத்து, ஆசி வழங்கி, இம்மாபெரும் சபையில் பேசுவதற்கு வாய்ப்பினையும் கொடுத்த உன்னதத் தாயே, உங்களை வணங்கி எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

எனக்குத் தேர்தலிலே போட்டியிட வாய்ப்பினை வழங்கியும், வாக்குகளைச் சேகரித்தும் கொடுத்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த சேலம் 1-வது தொகுதியினுடைய வாக்காளப் பெரு மக்களுக்கும் கோடானுகோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரை, நாட்டு மக்களின் மனநிலைக்கேற்ப தயாரிக்கப்பட்ட ஓர் உன்னத உரையாகும். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், திமுக. ஆட்சியில் ஜனநாயகப் படுகொலை செய்து, மாவட்டந்தோறும் இலட்சக்கணக்கான வாக்காளர் பெருமக்களை நீக்கினாலும், இதோ நாங்கள் இருக்கிறோம் தாயே எனக்கூறி, நாடும், நாட்டு மக்களும் மாண்புமிகு அம்மா அவர்கள் தான் தமிழகத்தினுடைய முதல்வர் என்று நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

பிற்பகல் 1—30

வாக்களிக்க முடியாத மக்களுக்கு மீண்டும் ஜனநாயக உரிமையைப் பெற்றுத் தருவேன் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் கூறி, நாட்டு



மக்கள்மீது, மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை நிலைநாட்டியுள்ளார்கள்.

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படும் என்பது போற்றப்படக்கூடியது ஆகும். சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு, சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்காமல், கடந்த கால ஆட்சி தனது கடமையைச் செய்யாமல் சமூக விரோதச் செயலுக்கு உடந்தையாக இருந்து செயல்பட்டு வந்துள்ளதால், பல குடும்பங்கள் அழிந்துள்ளன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், சேலம் மாநகரிலே ஒரு நம்பர் லாட்டரி, இரு நம்பர் லாட்டரி என்ற போர்வையிலே ஏழையெளிய மக்களுடைய வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிய கொடுமை திராவிட முன்னேற்றக் கழகத்தையே சாரும். மேலும், கறுப்பு ஆடுகள் இன்னும் அந்த சேலம் மாநகரில் இருந்துகொண்டு, இந்தச் சமூக விரோதச் செயலுக்கு உடந்தையாகச் செயலாற்றிக் கொண்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

மேலும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்று கொண்டுவந்த திட்டமானது மிகவும் உன்னதமான ஒரு திட்டமாகும். சமத்துவபுரம் என்ற திட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு கொள்ளையே நடத்தியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எந்த அளவிற்குக் கொள்ளை அடித்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து, இன்று நாட்டு மக்களுக்கு வழிகாட்டுகின்ற ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்று எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய அளவுக்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற குறிக்கோளோடு வீட்டுமனை வழங்கும் திட்டத்தை உருவாக்கி மக்களுக்குக் கொடுக்கின்ற பெருமையைக் கண்டு நாடே இன்று மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களிலே முறைகேடு. கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சைக்கிள் வாங்க முடியாதவர்கள் எல்லாம் இன்றையதினம் டாட்டா சுமோ வாங்கிக் கொண்டு ஓட்டுவதைப் பார்த்து, கூட்டுறவுச் சங்கங்களில், சட்ட விதிகளைப் பின்பற்றாமல், தான்தோன்றித்தனமாக, நிர்வாகத்தைச் சர்வாதிகாரமாகக் கைப்பற்றிக் கொண்டு மக்களின் வரிப் பணத்தையெல்லாம் கொள்ளையடித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை அறிந்து அவர்களுடைய பட்டியலையெல்லாம் கண்டறிந்து, ஊழலில் ஈடுபட்டவர்கள்மீது

சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கின்ற சூழ்நிலையை உருவாக்க இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தது பாராட்டுக்குரியதும், போற்றக்கூடியதுமாகும். மேலும், ஜனநாயக உணர்வோடு, செப்டம்பர் மாதம் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என்று கூறியதால் இந்த அரசு மக்களின் அரசு எனச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பொது விநியோகத் திட்டத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோடி கோடியாக அரிசி கடத்தியதையெல்லாம் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். எனவே, பொது விநியோகத் திட்டத்தில் மக்கள் முழுமையான பலனைப் பெறக்கூடிய அளவிற்கு ஓர் உயரிய எண்ணத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதனை மாற்றியமைக்க முன்னுரிமை வழங்கியுள்ளது போற்றக்கூடியது. எனவே, இந்த அரசு ஏழை மக்களின் அரசு எனக் கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

மேலும் குடும்ப அட்டைகள் வழங்குவதிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பல்வேறு குளறுபடிகளைச் செய்திருக்கிறார்கள். இதைத் தவிர்த்து, உண்மையான மக்கள் குடும்ப அட்டை பெற வழிவகை செய்ய மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டுகிறேன்.

Real Estate தொழில் தி.மு.க. ஆட்சியினுடைய தவறான கொள்கையால் இன்றையதினம் முடங்கிப்போய் இருக்கிறது. மனை நிலங்களை விற்கவோ, வாங்கவோ முடியாத ஓர் அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. உள்ளாட்சி நிர்வாகத்திடம் தடையில்லாச் சான்று பெற வேண்டுமென்று உத்தரவிட்டபடியால் பல முறைகேடுகள் நடந்த வண்ணமாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, சட்டத்தை எளிமையாக்கி அந்த Real Estate தொழில் நல்லபடியாக நடக்கின்ற சூழ் நிலையை உருவாக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றையதினம் தமிழகம் முழுக்க பணப் புழக்கம் இல்லாததால், பணச் சுழற்சி இல்லாததால் பொருளாதாரச் சுழற்சி முடக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தமிழகத்திலே பொருளாதாரச் சுழற்சி ஏற்படுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொட்டில் குழந்தைத் திட்டம் என்பது ஓர் உன்னதமான திட்டம். உலகமே போற்றுகின்ற அன்னை தெரசா அவர்களால் பாராட்டுப் பெற்ற திட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம். எனது



அரசு, ஒரு குழந்தையை, ஒரு ஏழைத் தாய் பெற்ற குழந்தையை, வளர்க்க முடியாமல் கொன்று புதைத்ததை அறிந்து, இதோ என்னுடைய அரசு அந்தக் குழந்தையைத் தத்து எடுத்துக்கொள்கிறது, அந்தக் குழந்தையை எனது அரசு வளர்க்கிறது, எனது அரசு அந்தக் குழந்தைக்குக் கல்வியறிவு கொடுக்கிறது, எனது அரசு அந்தக் குழந்தைக்கு ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொடுக்கிறது என்ற இந்த உன்னதத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிக்கு வந்தவுடன், அந்தத் திட்டத்தைப் பாழ்படுத்தி, புதை குழிக்குக் கொண்டு சென்றார்கள். எனவேதான், மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டம் ஓர் உன்னதத் திட்டம் என்பதை உணர்ந்து, இந்தத் திட்டம் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியது பெருமைப்படக்கூடியதும், போற்றப்படக்கூடியதுமாகும்.

*பிற்பகல் 1—35*

அடுத்து, கோப்புகளை முடிக்கும் வாரம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய நிர்வாகம் நேர்மையாகவும், திறமையாகவும் இருக்கும்பொருட்டு, ஒரு திட்டத்தைச் செயலாக்கம் செய்கின்ற வகையில் ஒரு பணி 90 நாட்களிலே மக்களிடையே செல்லுகின்ற வாய்ப்பினை உருவாக்கி, " கோப்புகளை முடிக்கும் வாரம் " என துரிதப்படுத்துவது மக்களின் மனநிலைக்கேற்ப அம்மா அவர்களுடைய அரசு செயல்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

களஞ்சியத்திற்கும், கஜானாவிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களுக்கு தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்து ஒரு வெள்ளை அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படும் எனக் கூறியுள்ளது வரவேற்கப்பட வேண்டியதாகும். ஏனென்றால், இந்த அவையில் உள்ள ஒரு மூத்த உறுப்பினர், நாங்கள் என்ன அரசு சொத்துகளை அவர்களைப்போல் வீட்டிற்கா எடுத்துக்கொண்டு போய்விட்டோம் என்று கூறியுள்ளார்.

சர்க்காரியா கமிஷன் தீர்ப்பைச் சரியாகப் பார்த்தால், யார் அரசு சொத்துக்களை வீட்டிற்கு எடுத்துச் சென்றார்கள் என்ற விவரம் புரியும். அதேநேரத்திலே, சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று முழங்கியவர்கள் எல்லாம் சேலம் இரும்பாலையைத் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கமாட்டோம் எனச் சட்டம் இயற்றியவர்கள் எல்லாம், மத்திய அரசோடு இணைந்து, பிணைந்து கொண்டு அதைத் தாரைவார்க்க முற்பட்டதை இந்த நாடு அறியும். இந்தச் சபையும்

அறியும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் சேலம் இரும்புத் தொழிற்சாலையைப் பாதுகாத்திட வேண்டுமென்று அவர்களுடைய பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தயவால் சேலம் 1-வது தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகும் தகுதியைப் பெற்றேன். எனது தொகுதியைப் பொறுத்தவரை, கைத்தறி, விசைத்தறி, பட்டு நெசவுத் தொழில், சாயப் பட்டறைகள் நிறைந்த பகுதியாக இருந்து வந்து கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அவல ஆட்சியில் இந்தத் தொழில் அடியோடு நசுக்கப்பட்டு, பாதிக்கப்பட்டு, இன்றையதினம் இந்தத் தொழிலிலே முனைந்தவர்கள் எல்லாம் தங்களுடைய பொருட்களை விற்றுப் பிழைப்பு நடத்துகின்ற நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இந்தத் தொழிலுக்கு உயிரூட்ட வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட நெசவாளர்களுக்கு நிபந்தனையின்றி ஓய்வூதியத் திட்டத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

கைத்தறி நெசவாளர்களுக்கென தனியொரு நெசவாளர் சங்கம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன். கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்ய மாவட்டந்தோறும் ஒரு விற்பனை நிலையம் உருவாக்கிட வேண்டும்.

தொழில்கள் நிறைந்த சேலத்தில் கூட்டுறவு இணையத்தின் மூலமாக நூல் வங்கிகள் அமைக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் நகரின் மையப் பகுதியில் 20 ஏக்கர் அளவில் ஒரு குப்பைமேடு இருக்கிறது. அந்தக் குப்பைமேட்டால் மாநகரம் முழுவதும் சுகாதாரமும், சுற்றுப்புறச் சூழலும் கெடுகிறது. எனவே, அதை நகரின் வெளிப்பகுதிக்கு மாற்றிடவும், அரசின் நிதி உதவியின்கீழ் திடக் கழிவு மாற்றுத் திட்டத்தை உருவாக்கிடவும் நிதி உதவி செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக சேலம் மாநகரின் பாதாளச் சாக்கடைத் திட்டம் முடங்கிக் கிடக்கிறது. தற்போது புதிய வடிவமைப்பில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்திக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



எனது தொகுதியைப் பொறுத்தவரை தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலே கழிவுநீர் வாய்க்கால், கான்கிரீட் சாலை வசதி, தண்ணீர் வசதியுடன் கழிப்பிட வசதி ஆகியவை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசில் 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்பவர்களுக்கு எல்லாம் பட்டா வழங்கப்படும் என்று இந்தச் சட்டமன்றத்திலே சட்டம் இயற்றினார்கள். ஆனால், சேலம் மாநகரிலே 20, 30 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்கு எல்லாம் இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கக்கூடிய நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சியினுடைய தவறான அணுகுமுறையால் இன்றையதினம் ஊழல் மாநகராட்சியாகத் தலைவிரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சேலம் மாநகராட்சியைக் கலைத்துவிட்டு, அங்கு நல்லதொரு நிர்வாகத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெங்கடாஜலம், மேலும் வேண்டாம். அதை இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம். ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை SAGOSERVE என்ற தொழில் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இருந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஒரு சேவைக் கூட்டுறவுச் சங்கம். பல கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை வரி வந்து கொண்டிருக்கிறது. அந்தச் சங்கமானது இப்போது நலிவுற்ற நிலையிலே நஷ்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதல் விற்பனை வரி கட்டிக் கொண்டிருக்கி றார்கள். அந்தத் தொழிலானது இன்றையதினம் முடக்கப்பட்டால், முடங்கினால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் எல்லாம் பாதிப்படையும், சேகோ தொழில் பாதிப்படையும் என்பதை இந்த நல்ல நேரத்திலே தெரிவித்து, அந்த SAGOSERVE கூட்டுறவு சேவைச் சங்க நிறுவனத்துக்கு இன்றையதினம் அந்த கூடுதல் விற்பனை வரியிலிருந்து

[திரு. செ. வெங்கடாஜலம்] [2001 மே 30

விலக்களிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, இம்மாபெரும் சபையில் எனக்குப் பேச வாய்ப்பினை வழங்கிய எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாஜலம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, சேகோ கூட்டுறவு தொழிற்சங்கம் என்பது ஊரகத் தொழில் துறையின்கீழே வருகின்ற ஒரு கூட்டுறவு நிறுவனம். அந்த நிறுவனமும் கடந்த ஐந்தாண்டு காலத்திலே, முன்னாள் முதலமைச்சருடைய நிர்வாகத்திலே மிகவும் சீர்கெட்டுப் போய் பெரும் இழப்புக்கு ஆளாகியுள்ளது. அதையும் சரி செய்வோம் என்கிற வகையில், அவருடைய விருப்பப்படி, அவர் எதிர்பார்க்கிற அளவிற்குத் தேவைகளைப் பூர்த்தி செய்யத்தக்க அளவிற்கு, அந்தக் கூட்டுறவு நிறுவனம் மிகச் சிறப்பாக அமையத்தக்க வகையிலேதான் அந்தக் கூட்டுறவு நிறுவனத்தினுடைய தலைவர் பதவியையும் இப்போது அம்மா அவர்கள் இரத்து செய்துவிட்டு, புதிதாகத் தனி அலுவலரையும் நியமித்திருக்கிறார்கள் என்ற நல்ல தகவலையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் போட்டியிடுகிற வாய்ப்பினை நல்கிய எங்களது வணக்கத்துக்குரிய மக்கள் தலைவர் ஐயா அவர்களுக்கு எனது இதயங் கனிந்த வாழ்த்துகளையும், வணக்கங்களையும் சொல்லிக் கொள்கிறேன். கிள்ளியூர் தொகுதியிலிருந்து நான் நான்கு முறை போட்டியிட்டு, நான்கு முறையும் வெற்றியினைத் தந்த எனது தொகுதி வாக்காளர் பெரு மக்களுக்கும், கூட்டணியினுடைய இலக்கணமாக இருந்து, கூட்டணியினுடைய தொண்டர்களும், செயல் வீரர்களும் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக, பல்வேறு பணிகள் இருந்தாலும், தேர்தலிலே நாமினேஷன் பணம் நான் கட்டுவதற்கு முன்பாகவே என்னுடைய தொகுதிக்கு வந்து, எனக்காக வாக்குகளைச் சேகரித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய



2001 மே 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அம்மா களுக்கும், அவர்களோடு இணைந்து பணியாற்றிய செயல் வீரர்களுக்கும் கூட்டணிக் கட்சித் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கி, என்னுடைய உரையினை வெகு விரைவாக முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

புதிய அரசு ஆட்சிப் பொறுப்பினையேற்றிருக்கிற நேரத்தில், முதல் நன்றியாக கன்னியாகுமரி மாவட்டம், சிறிய மாவட்டமாக இருந்தாலும் அந்த மாவட்டத்தைச் சார்ந்த இரண்டு பேருக்கு அமைச்சர் பதவியைக் கொடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலையை உயர்த்தியிருப்பதற்காக நான் முதலாவதாக அரசுக்கு நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரைக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஒருவர் அமைச்சர் ஆகிறார் என்று சொன்னால் சுற்றுலாத் துறை அமைச்சராகவோ அல்லது அறநிலையத் துறை அமைச்சராகவோதான் அவர் இருப்பார் என்ற சூழ்நிலை மாறி, இன்றைக்கு பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும், மீன் வளத் துறையும், கால்நடைத் துறையும் என இப்படிப் பல பொறுப்புகளை அள்ளி வழங்குகின்ற விதத்திலே, அதிகாரம் மிக்க அமைச்சர்களை அளித்ததற்காக நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நடைபெறுகின்ற கவர்னர் உரையின் விவாதத்தில் சில கருத்துகளை நான் கூறி என்னுடைய கோரிக்கைகளுக்குச் செல்லலாம் என்று கருதுகின்றேன். கவர்னர் உரையில் சட்டம்-ஒழுங்கினைப் பராமரிப்பதற்காக உறுதிபூண்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டம்-ஒழுங்கு சீரழிந்து கொண்டிருக்கிற சூழ்நிலைக்கு பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சொல்ல முடியும். இருப்பினும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, கடந்த ஐந்தாண்டுகளாக, இதோ வீரப்பனைப் பிடித்து விடுகிறோம், பிடித்து விடுகிறோம் என்று சொல்லி, ஆண்டுகள் ஐந்து உருண்டோடிவிட்டனவே தவிர, அந்த வீரப்பனைக்கூட பிடிக்க முடியாத ஒரு சூழ்நிலையில் தமிழகத்தினுடைய சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்திருப்பதைக் கண்டு நாடே வெட்கித் தலை குனிந்திருக்கிற சூழ்நிலையில், மீண்டும் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு சூளுரையை ஏற்றிருக்கிறார்கள். அதை நிறைவேற்றி, ஓர் ஆண் மகனாக இல்லாமலிருந்தாலும், ஒரு பெண் மகளாக இருந்து, தனக்கு நிகர் தானே

என்று சாதனை படைக்கின்ற விதத்தில், அந்த வீரப்பனைக் கைது செய்து நாட்டுக்கு அடையாளம் காட்டிட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல விவசாயிகளுக்கு என்று சொல்கிறபோது, நவீன முறையிலே விவசாயப் பயிற்சி கொடுத்து விளைபொருட்களைப் பெருக்க உயர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கையினை அறிவித்திருக்கிறீர்கள். அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் நவீன முறைகளைக் கையாண்டால்தான் விளைபொருட்களை உற்பத்தி செய்ய முடியும் என்கிற சூழ்நிலையில் அப்படிப்பட்டவர்களுக்கு விளைபொருட்களை உற்பத்தி செய்கின்ற திறனை அதிகப்படுத்துகின்ற முகத்தான் நீங்கள் எடுத்திருக்கின்ற மேல் நடவடிக்கைகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல ஊரகப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மக்கள் சுய வேலைவாய்ப்புப் பெறுகிற விதமாக கோழி வளர்ப்பு, கால்நடைகளைத் தரம் உயர்த்துதல் மற்றும் மீன் வளர்ப்புப் பண்ணைகள் மூலம் அவர்களுடைய குடும்ப வருமானத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் செய்யப்படும் என்ற உத்தரவாதத்தை கவர்னர் உரையில் அளித்திருக்கிறீர்கள். அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1—45*

அதுபோல மிக முக்கியமான ஒரு கோரிக்கை. இங்கே நம்முடைய தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறபோதெல்லாம் அவன் மீன் பிடித்து கரை சேருவானா என்கிற ஓர் உணர்வு மக்கள் மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. இராமநாதபுரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி பகுதிகளைச் சார்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கிறபோதெல்லாம் நித்தம், நித்தம் துப்பாக்கிச் சூடும், மரண ஓலமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற சூழ்நிலையை மாற்றி, அதற்குக் காரணமாக இருக்கின்ற கச்சத் தீவுப் பகுதியை மீட்டு நமது பகுதி மீனவர்கள் பயமின்றி தொழில் செய்து திரும்புகிற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வின் அடிப்படையில் தாரைவார்க்கப்பட்ட கச்சத் தீவை மீண்டும் மீட்டுத் தருவோம் என்கின்ற உத்தரவாதத்தை அடிப்படையாக வைத்து நீங்கள் எடுத்திருக்கிற முயற்சிகளை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சார்பாகவும், என் சார்பாகவும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.





இந்த நேரத்திலே இன்னொரு வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது தமிழக மீனவர்கள் 39 பேர் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 39 மீனவர்களையும் மீட்டிட வேண்டும். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாகிவிட்டது. ஆனால் அவர்களை மீட்பதற்கான முயற்சிகளில் அரசு பெரும் முனைப்புக் காட்டவில்லையோ என்கிற உணர்வு எனக்கு இருக்கிறது. எனவே, தமிழக அரசு இலங்கையிலே வாடிக் கொண்டிருக்கின்ற...

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ள 39 மீனவர்களையும் விரைவில் விடுவித்து தமிழகத்திற்கு அழைத்து வருவதற்காக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனைப்படி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மிக விரைவில் அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வரவேண்டியதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னியாகுமரிக்கு கன்னியாகுமரி பதில் சொல்லியாகிவிட்டது. அடுத்த பிரச்சினைக்குப் போங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மீனவர்களை மிக விரைவில் மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நேற்றுமுன்தினம் வெளிவந்த 'தினமணி'-யில் இந்திய அரசு கேட்டுக்கொண்ட காரணத்தினால்தான் மீனவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்கிற செய்தி வந்திருக்கிறது. நேற்று முன்தினம் வந்த பத்திரிகைச் செய்தி. ஆக நமது நாட்டுக்காரனையே பிடித்து இலங்கையில் அடைப்பதற்கு மத்திய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறது என்கிற செய்தியைப் பார்க்கின்றபோது எனக்கு மிகமிக வேதனையான ஒரு செய்தியாக இருக்கிறது. அதனால் அனைத்து விவரங்களையும் நீங்கள் தெரிந்து, நாளையோ அல்லது நாளை மறுதினமோ பதிலளிக்கிறபோது சொல்வீர்கள் என்றால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதற்கடுத்தபடியாக நீங்கள் பார்க்கிறபோது...

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் அதனுடைய விரிவான விளக்கங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களோடு தொடர்பு கொண்டு, மத்திய அரசு எந்த அளவில் அதற்காக ஏற்பாடு செய்து வருகிறது என்பதையும் மிக விரைவில் விவரம் கேட்டுத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 மே 30

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல குடும்ப அட்டை வழங்குவதிலே நிறைய முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்களுடைய மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலேகூட குறைந்தபட்சம் 5000 முதல் 6000 பேருக்கு இன்னும் குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது. தமிழகம் முழுவதும் இப்படி இருக்கிற சூழ்நிலையில் அதை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிற திட்டத்தை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல 100 பேர் கொண்ட குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கப்படும் என்று சொல்லியிருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல அனைவருக்கும் நோயற்ற வாழ்வு, தரமான மருந்துகள் வழங்க அரசு முயற்சிகள் மேற்கொள்ளும் என்கிற திட்டத்தையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற் கல்வி நிறுவனங்களில் ஊரக மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பாராட்டுவதற்குரிய அம்சங்கள் நிறைந்த ஒரு கவர்னர் உரையைத் தந்திருக்கின்ற உங்களிடம், இந்தத் திட்டங்கள் அத்தனையும் முனைப்புடன் செயல்படுவதற்கு நீங்கள் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்பது மிக அருமையான திட்டம்தான். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகமான பணச் செலவுகள் ஏற்படும்தான். அவற்றையெல்லாம் நீங்கள் ஈடு செய்து இப்படிப்பட்ட திட்டங்களையும், எதிர்பார்ப்புகளையும் இந்த அரசு நிறைவேற்றித் தந்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1—50*

இனி எங்களுடைய மாவட்டத்திற்கான சில கோரிக்கைகளை நான் உங்கள் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, அதனுடைய பதவிக் காலம் முடிவதற்கு முன்பாக அவசர அவசரமாக ஒரு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல்லை கன்னியாகுமரி மாவட்டத்திலே நாட்டினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும்,



2001 மே 30] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருக்கும் அரசியல் போட்டியில் நாங்கள் வஞ்சிக்கப்பட்டு விடக்கூடாது. எனவே, அடிக்கல் போடப்பட்டபடி, உண்மையாக அந்த மாவட்ட மக்களுக்கு பயனுள்ளது என்ற விதத்தில் அந்த மருத்துவக் கல்லூரியை கன்னியாகுமரி மாவட்டத்திலே.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களிடம் இதுசம்பந்தமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்பதை அருமைச் சகோதரர் குமாரதாஸ் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்கள் ஒட்டுமொத்தமாக உங்களிடம் அதை எதிர்பார்க்கிறார்கள். ஆரம்பிக்கப்பட்ட அந்தத் திட்டம் தடைபடாமல் நடைபெறும் என்கிற உணர்வோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்..*(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடைமுறைக்கு வரும் என்று சொல்லிவிட்டார். பேசி முடியுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** சரி, சரி. நீங்கள் மணியை ஓர் அடி அடித்தவுடனே இதயமே படக்கென்று நின்று விடுகிறது. எனவே, அதிலே கவனம் செலுத்தி அதை முடித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் விலை படு வீழ்ச்சி அடைந்துவிட்டது. தேங்காய் விலை படு வீழ்ச்சி அடைந்துவிட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய பொருளாதாரம் ஒட்டுமொத்தமாகச் சீரழிந்து இருக்கின்ற சூழ்நிலையில் அதைச் சரி செய்ய வேண்டுமென்று சொன்னால், சில வேலைவாய்ப்புகளை உருவாக்கிட வேண்டும். குறிப்பாக, வெகுகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற குளச்சல் துறைமுகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்று கவர்னர் உரையிலே இருந்தாலும் நீங்கள் முனைப்புடன் செயல்பட்டு நிச்சயமாக குளச்சலிலே துறைமுகம் அமைத்து குமரி மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தை மாற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல வெகுகாலமாக தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே

மீனவச் சகோதரர்களுக்கு ஆண்டு முழுவதும் மீன் பிடிப்பதற்கு வசதியாக ஒரு துறைமுகம் வேண்டுமென்ற கோரிக்கை இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் கோரிக்கைமீது கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் Project Report தயாரிக்கிறோம் என்று சொல்லி, அதைத் தயாரித்து அரசுக்கு வழங்கிவிட்டார்கள். கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் அதற்குத் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 30 கோடி ரூபாய் மத்திய அரசும், 15 கோடி ரூபாய் தமிழக அரசும் போட்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை நீங்கள் கவனத்திலே கொண்டு பல்லாயிரக்கணக்கான மீன்பிடித் தொழிலாள நண்பர்கள் இருக்கின்ற பகுதியிலே ஆண்டு முழுவதும் அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகின்ற முகத்தான் அந்த மீன்பிடித் துறைமுகத் திட்டத்தை நீங்கள் தேங்காய்ப்பட்டினம் பகுதியிலே அமைத்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் எஸ்.டி. மங்காடு என்கிற ஒரு பகுதியுள்ளது. தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு கட்டுமானக் கழகம் என்ற ஒரு கழகம் இருக்கிறது. முதலாவது நீங்கள் close செய்ய வேண்டிய திட்டத்திலே ஒன்று தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம். இந்தக் கழகம் ஒரு வேலையை எடுத்து 4, 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. 100 அடி தூரத்தைக் கடந்து வரவேண்டிய ஒரு பாலத்திற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டு, இருந்த பாலமும் போய், ஆரம்பிக்கப்பட்ட பாலத்தையும் முடிக்காத காரணத்தாலே 15 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒருவர் பேச இருக்கிறார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். 100 அடி தூரம் கடந்து வருவதற்குப் பதிலாக 15 கிலோ மீட்டர் சுற்றி வருவது மிகப் பெரிய கொடுமை. எனவே, ஆரம்பிக்கப்பட்ட பணியில் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அந்த எஸ்.டி. மங்காடு பாலத்தை உடனடியாக முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மேற்குக் கடற்கரைச் சாலை. அந்தச் சாலையும் ஆரம்பிக்கப்பட்டு 3, 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்தப் பணியும் தொய்வடைந்து இருக்கின்ற சூழ்நிலையில் நீங்கள் துரிதப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





இதைவிட முக்கியமான, கொடுமையான ஒரு செய்தி. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் பிற மாவட்டங்களில்—நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தினர்— வேலைவாய்ப்பு அலுவலகங்களில்கூட பதிவு செய்யக்கூடாது என்று இதற்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு எங்களை மிகமிகக் கொடுமைப்படுத்திய சூழ்நிலையை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உங்கள் ஆளுகைக்குட்பட்ட நாங்கள் தமிழகத்தினுடைய எந்தப் பகுதிக்கும் வேலைக்குச் செல்லலாம் என்கிற ஓர் உத்தரவைப் பிறப்பித்து கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள படித்தவர்கள் தமிழகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் வேலைக்குச் செல்வதற்கான வாய்ப்பினை, சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தந்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்காக உங்களுடைய அரசு ஆட்சியிலே இருந்தபோது புதிதாகப் பல்வேறு கல்லூரிகளை ஆரம்பித்தீர்கள். ஆனால், படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் படிப்பை முடிக்க முடியாத சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக...

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஏற்கெனவே இதுசம்பந்தமான வழக்குகள் நீதிமன்றத்திலே இருந்து தீர்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது அருமைச் சகோதரர் குமாரதாஸ் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** Court தீர்ப்புகளுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. எங்களுடைய பகுதியிலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'வேண்டுமென்று சொன்னால் பலாப்பழம் வேரிலேயும் காய்க்கும்' என்று. எனவே அதைப் பலாப்பழம்...

*பிற்பகல் 1—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேரிலே காய்க்கிற பலாப்பழம்தான் இனிமையாக இருக்கும். விட்டுவிடுங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அந்தப் பழமொழிக்கு ஏற்ப, நீங்கள் தடைகள் எத்தனை போட்டாலும், நீங்கள் புதிய ஆணைகள் போட்டு அதை நிறைவேற்றுவதற்காக...

[2001 மே 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களே, பலாப்பழத்துடன் இனிமையாக முடியுங்கள். அடுத்து உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். அடுத்து, நண்பர் மாண்புமிகு உறுப்பினர் ஏழுமலை. பெயருக்கு ஏற்ப ஏழு நிமிடத்தில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.(சிரிப்பு)

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சிக் கோட்டை வீரத்தின் விளைநிலம்; இது மத நல்லிணக்கத்தின் பாசறை; நட்புக்கு இலக்கணமான பூமி; இப். பகுதியில் சாதாரண எளிய குடும்பத்தில் பிறந்த என்னை இனம் கண்டு, இதயத்தில் இடம் கொடுத்து, மக்களுக்குச் சேவை செய்வதற்காக உரிய வேட்பாளராக ஆக்கி, செஞ்சிக் கோட்டையை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக்கிய எங்கள் இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். எங்கள் அன்னை, நடமாடும் தெய்வம், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள்— இந்த செஞ்சித் தொகுதியிலே இதுவரை கண்டிராத வெற்றிபெறாத- அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்கூட வர முடியாத தொகுதியாக இருந்த செஞ்சி தொகுதியை தனது தொகுதியாக்கி இன்றையதினம் செஞ்சியில் குடிகொண்டிருக்கின்ற அனைத்து மக்களாலும் போற்றப் படுகின்ற செஞ்சி பகுதியின் ஏழையெளிய மக்கள் புரட்சித் தலைவியின் புன்னகையால் மட்டுமே தங்கள் வாழ்க்கை விடியலைக் காணலாம் என்ற அசையாத நம்பிக்கையுடன் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அதாவது 29,080 வாக்குகள் வித்தியாசத்தில், வெற்றி பெறச் செய்தமைக்கு செஞ்சி தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டு காலம் அப்பப்பா, தமிழக வரலாற்றில் இருண்ட காலம். * உண்மைக்கு மாறான பிரச்சாரத்தாலே ஆட்சிக்கு வந்து, பழிவாங்கும் அராஜகத்தை அன்றாடப் பணியாக்கி, மக்களை மறந்து, மமதையிலிருந்த ஆட்சியாளர்களிடமிருந்து தமிழக மக்களை மீட்டு, காக்க, புனிதப் போரினை, அமைதியான அரசியல் புரட்சியைச் செய்து, வரலாறு காணாத மகத்தான வெற்றியைத் தந்த தாயே, இப்போதுதான் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.



2001 மே 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏழுமலை, உங்களுடைய பேச்சிலே ** என்ற ஒரு வார்த்தை வந்திருக்கிறது. அது அவைக் குறிப்பிலே இடம் பெறாது. மாண்புமிகு மற்ற உறுப்பினர்களுக்கும், புதிய உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன், 'உண்மைக்கு மாறானது' என்று சொல்ல வேண்டுமே தவிர ** என்று சொல்லக்கூடாது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனேயே நெல் விலை மூட்டைக்கு ரூ.100 முதல் 200 வரை கூடியுள்ளது; விவசாயிகள் வயிற்றில் பால் சோறு உண்டது போன்ற குளிர்ச்சி, மகிழ்ச்சி. ஆளுநர் உரை வருங்காலத் தமிழகத்தின் பொற்கால ஆட்சிக்கு கால்கோள்.

உழவர் சந்தையின் உண்மை நிலை என்ன? கடந்த கால ஆட்சியில் பொறுப்பிலேயிருந்த அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், ஏதோ உழவர் சந்தை உழவர்களுக்குப் பயன்படும் சந்தை என்பதைப்போல ஒரு நாடகத்தை நேற்றும், நேற்று முன்தினமும் ஆடினார்கள். ஆனால், உழவர் சந்தைக்குக் காய்கறி கொண்டு வருவது யார் என்று இவர்கள் விளக்கவில்லை. அய்யோ பாவம், மாவட்டத்திலே இருக்கின்ற மாவட்ட ஆட்சியர்களும், வட்டாட்சியர் அலுவலகத்திலே இருக்கின்ற வட்டாட்சியர்களும் அவர்களுக்குக்கீழ் பணிபுரிகின்ற வர்களும்தான் உழவர் சந்தைக்குத் தேவையான காய்கறிகளை இரவில் சென்று, காலையில் பறிக்க வைத்து, அவர்களே வண்டியில் கொண்டுவந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சந்தை என்ற அந்த இடத்திலே அமர்ந்து வியாபாரம் செய்து, அதனுடைய பயனை அனுபவித்தார்களேயொழிய, காய்கறிகளை விளைவிக்கின்ற அந்த ஏழை மக்கள் அதனுடைய பயனை அறியவில்லை.

எனவே, ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிற, செயல்படாத உழவர் சந்தை என்பதைவிட முந்தைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட அத்தனை சந்தைகளையும் மூடினாலும் விவசாயிகள் தானைத் தலைவி, தங்கத் தலைவி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை மனதாரப் பாராட்டுவார்களேயொழிய, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் கூக்குரலிடுவதைப்போல எந்தச் செயலும் இந்த நாட்டில் நடவாது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற திட்டம் டாக்டர் புரட்சித் தலைவியின் கருணைக்குக் கட்டியம் கூறுவதாகும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[2001 மே 30

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. இரண்டு மணித்துளியில் பேசி முடியுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** செஞ்சியில் கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட பட்டாக்களுக்கு மனுவும், பணமும் தந்து வாடிப்போய்க் காத்திருக்கும் சாமானிய மக்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அந்த வஞ்சகர்களைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டும். வாடியோர் முகம் மலர வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம் உதவும் என்பதால் அதை வரவேற்கிறேன்.

வராத கிருஷ்ணா நீருக்கு வந்ததாய் விழா எடுத்தவர்கள், * உண்மைக்கு மாறுபாடுடைய ஒருவர் சொல் வன்மையால் * உண்மைக்கு மாறுபட்டதையே மெய்யைப்போல பேசி மக்களுக்குத் தவறான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏழுமலை, இப்போதுதான் சொன்னேன், மறந்துவிட்டீர்கள். 'உண்மைக்கு மாறான' என்று சொல்லுங்கள். ** என்ற வார்த்தை அவைக் குறிப்பில் இடம் பெறாது.

**திரு. வெ. ஏழுமலை:** உண்மைக்கு மாறுபட்ட கருத்தை மெய் போலப் பேசி மக்களுக்குத் தவறான தகவல்களைத் தந்து நம்பிக்கை மோசடி செய்த ஸ்டாலின், துரைமுருகன், கருணாநிதி ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தடையில்லாக் குடிநீர்த் திட்டம் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன்.

வருங்காலத் தமிழகத்தில் வான் பொய்த்தாலும் வளம் பொய்க்காது என்ற வகையில் சிறப்பான நீர்வளப் பயன்பாட்டுக்கு வழி செய்து ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ள புதிய வீராணம் திட்டம் மற்றும் தீபகற்ப ஆற்றுநீர் இணைப்புத் திட்டம் ஆகியவற்றை மனம் உள்ளவர்கள் எவரும் நெஞ்சாரப் பாராட்டுவார்கள்.

வளமான தமிழகம் கிராமப்புற இளைஞர்களிடம்தான் உள்ளது

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



2001 மே 30] [திரு. வெ. ஏழுமலை]

என்பதை உணர்ந்த இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆளுநர் உரையின் மூலம் அறிவித்திருக்கிற தொழில்நுட்ப மற்றும் மருத்துவக் கல்விச் சேர்க்கையில் கிராமப்புற மாணவர்களுக்கான 25 சதவிகித இட ஒதுக்கீட்டை நெஞ்சு நிறைந்த நன்றியோடு தமிழகம் வரவேற்கிறது. அதேபோல வேலைவாய்ப்பிலும் இந்த இடஒதுக்கீட்டை அளித்திட பணிவோடு வேண்டுகிறேன்.

என்னைத் தேர்ந்தெடுத்து இந்த மாமன்றத்தில் பேச வைத்த என்னுடைய செஞ்சி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியில் ஏழை விவசாயிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வசதியாக அங்கே ஒரு கல்லூரி இல்லை. என்னுடைய தொகுதியிலே அந்த ஏழை விவசாயிகளுடைய பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெற ஒரு விவசாயப் பொறியியல் கல்லூரியையோ அல்லது கலை மற்றும் அறிவியல் கல்லூரியையோ அமைத்திட வேண்டுமென்று இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் செஞ்சிக் கோட்டையில் அமைந்துள்ள ராஜகிரி, கிருஷ்ணகிரி மலைகளுக்கு இடையில் ஓர் அணை அமைத்து நீரைத் தேக்கி செஞ்சி பேரூராட்சியில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீர் வழங்குவதுடன், செஞ்சியைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் அவர்களுடைய விளைநிலங்களில் பயிரிட உதவிட ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

செஞ்சி பேரூராட்சி மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அந்த நகரத்திலே கழிவுநீர் வெளியே செல்வதற்கு வழியில்லை. எனவே, பொற் கால ஆட்சியைத் தந்து எங்களையெல்லாம் இந்த அவைக்கு வரவழைத்து அமர்த்தி, அழகு பார்த்துக் கொண்டிருக்கின்ற தானைத் தலைவி, தங்கத் தலைவி, இதய தெய்வம் அவர்கள் செஞ்சி பேரூராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. விவசாயத்தையே நம்பியிருக்கின்ற பகுதி. அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் மழையை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மழையில்லாத காலங்களில் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அம்மாவின் பொற்கால ஆட்சியில் எங்களுடைய செஞ்சி தொகுதியில் ஓர் அரசு கூட்டுறவு கரும்பு ஆலையை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வெ. ஏழுமலை] [2001 மே 30

அதோடுமட்டுமல்லாமல், எங்களுடைய பகுதியிலே பருத்தி அதிகமாகப் பயிரிடப்படுகிறது. மூடியிருக்கின்ற சாரம் நூற்பாலை என்பது தானைத் தலைவர், தங்கத் தலைவர், இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டதாகும். 1991-லிருந்து 1996 வரை இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் சாரம் நூற்பாலை சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த ஆலையை மூடுகின்ற வேலையைச் செய்கின்றபோது, ஒரு கோடி ரூபாயை அதற்கு முதலீடாகக் கொடுத்து, 3 மாதத்தில் அந்த ஆலையை இயக்க முடியவில்லை என்று சொல்லி, மூடிவிட்டது. அந்த ஆலையில் பணிபுரிந்த தொழிலாளர்கள் மொத்தம் 500 பேர் இருக்கிறார்கள். அவர்களில் 150 பேர் இலங்கை அகதிகள். இலங்கையிலிருந்து வந்த அவர்களை இந்த நூற்பாலையில் பணியில் அமர்த்தி, அந்த சாரம் பகுதியில் அவர்களுக்குப் பட்டா வழங்கி, காலங் காலமாகக் குடியிருந்து வருகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று வாழ வழி தெரியாமல் புரட்சித் தலைவியை நம்பித்தான் என் போன்றவர்களுக்கு வாக்களித்து இம்மாமன்றத்திற்கு அனுப்பி யிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வு ஒளி பெற வேண்டும். அந்த சாரம் நூற்பாலையை sick unit என்று சொல்லி புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், தானே முன் வந்து வேலையை விட்டுச் செல்கின்றவர்களுக்கு 40,000 ரூபாய் வழங்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தார். ஆனால், அதற்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அந்த 40,000 ரூபாயை 20,000 ஆக, பாதிக்குப் பாதியாகக் குறைத்து இலங்கை அகதிகளைக் கட்டாயப்படுத்தி அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் இன்று அந்த சாரம் பகுதியிலே மிகக் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 2—05*

அதோடு மட்டுமல்லாமல் மற்றவர்கள் இந்த sick unit மூலம் தானாக எழுதிக் கொடுத்து, பலபேர் பணம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அந்த ஆலையில் வேலை செய்தவர்களில் 150 தொழிலாளிகள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக அந்தப் பணியில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் வயதானவர்களாக ஆகிவிட்டார்கள். அரசு கொடுக்கின்ற பணத்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.



2001 மே 30]

**திரு. வெ. ஏழுமலை:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் கன்னிப் பேச்சுப் பேசுவதால் எனக்கு 5 நிமிடங்கள், பசியையும் ஒதுக்கி வைத்துவிட்டு அளிக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அந்த சாரம் நூற்பாலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாரத்தோடு முடித்தால்தான் பேச்சிலே சாரம் இருக்கிறது என்று பொருள். இத்தோடு முடியுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** ஆளுநர் உரை மொத்தத்தில் இந்த அரசின் சிறப்பான ஆளுமை உரை என்பேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளுக்கேற்ப நடமாடும் இலக்கியமாய்த் திகழும் ஆளுமைக்குரிய எங்கள் அம்மா, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் தமிழகம் செழிக்கும்; மக்கள் மனம் மகிழ்வர்; தொழில் வளம் பெறும்; பொய்யாமை அழியும்; வாய்மை நிலைக்கும். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-5-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*3. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 323(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

222388

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.